மலர் - 04 இதழ் - 1 - ஜூலை 2025

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

இலக்கிய
சமய
பண்பாட்டுப்
பன்மொழி
மின்னிதழ்

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

தமிழ் இசையின் கொடையே இந்திய இசை
– முனைவர் சிவ இளங்கோ

ம. சிங்காரவேலர் என்றொரு மானுடன்
– மு. பழநிச்சாமி

Ranking Thirukkural by Web Popularity : Analyzing Google Search Results with Scholarly Rigor
– Dr. Jothi, S. Themozhi

வெற்றியும் தோல்வியும் வீரனுக்கு விருந்து
– ச.அய்யம்பிள்ளை

பாரதியும் பைந்தமிழ்ப் புலவர்களும்
– பேராசிரியர் முனைவர் மு. முத்துவேலு

வழிபாடு என்பது ஓர் அனுபவம்
– முனைவர் செ. ராஜேஸ்வரி

பவுத்தமும் பெண்களும்
– எஸ்.சாந்தினிபீ

"நெடுநல்வாடை" The Winter's Tale of Classic Tamil
– ச.சபாரத்தினம்

இன்னும்
பல...



தனித்தமிழ் இயக்கத்தின் முன்னோடி
மறைமலையடிகள்

தனிச்சுற்றுக்கு மட்டும்

தமிழர் இலக்கிய சமய பண்பாட்டு ஆய்விதழ்

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

மலர் - 04 இதழ் - 1

ஜூலை 2025

சிறப்பாசிரியர்
பொறிஞர் கவிஞர் முத்தமிழ் விரும்பி

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர்
முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி

பொறுப்பாசிரியர்
முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு
கிங்ஸ்டன் ஜெகநாதன் (இந்தியா)
தேமொழி (அமெரிக்கா)
அன்பு ஜெயா (ஆஸ்திரேலியா)
மின்னச்சன் இங்கர்சால் (நோர்வே)
Dr. புதேரி தானப்பன் (டில்லி)

வடிவமைப்பு
அருணேஷ்
செயற்கை நு ண்ணறிவு படங்கள்
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

Thamizhanangu
Printed and Published by :
E.Satish Rajkumar (Advocate)
3/422, Thiruvalluvar Street, Dinamani Nagar,
Madhurai, Tamil Nadu – 625 018.
Ph : +91 78711 23226, +91 70109 97630

கட்டுரைகள் அனுப்ப..
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம் பெற்றுள்ள கருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும். அவற்றுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை
– இதழ் ஆசிரியர்

உள்ளடக்கம்

1. “தமிழ் இசையின் கொடையே இந்திய இசை” 3
 – முனைவர் சிவ இளங்கோ

2. ம. சிங்காரவேலர் என்றொரு மானுடன் 9
 – மு. பழநிச்சாமி

3. *Ranking Thirukkural by Web Popularity: Analyzing Google Search Results with Scholarly Rigor* 15
 – *Dr. Jothi S. Themozhi*

4. வெற்றியும் தோல்வியும் வீரனுக்கு விருந்து 19
 – ச.அய்யம்பிள்ளை

5. பாரதியும் பைந்தமிழ்ப் புலவர்களும் 23
 – பேராசிரியர் முனைவர் மு. முத்துவேலு

6. தமிழ் மன்னர்களின் கப்பல் பொறிக்கப்பட்ட நாணயங்கள் 31
 – அண்ணாமலை சுகுமாரன்

7. தவறின்றித் தமிழ் எழுதுவோம். 33
 – டாக்டர் புதேரி தானப்பன்

8. எளிய முறையில் யாப்பறிவோம். 41
 – நெருப்பலையார் இராம இளங்கோவன்

9. *TAMILMAGAN's Gene Notes in Vengai Anchor* 48
 – *Dr. C. Rajeswari*

10. அறிவுக்கொடை தந்த அருள்வள்ளல் ஜோகன் பிலிப்பு பெப்ரீசியஸ். 51
 – பேரா. முனைவர் மோ. மைக்கேல் பாரடே

11. அரியதொரு ஆளுருட்டி மலை 55
 – அ.திவ்விய குமாரி கண்ணம்மா

12. வழிபாடு என்பது ஓர் அனுபவம் 65
 – முனைவர் செ. ராஜேஸ்வரி

13. பவுத்தமும் பெண்களும் 75
 – எஸ்.சாந்தினிபீ

14. "நெடுநல்வாடை" *The Winter'sTale of Classic Tamil* 81
 – ச.சபாரத்தினம்

மறைமலை அடிகள் நினைவு போற்றுவோம் (1876_1950)

வேதாச்சலம் என்னும் தம் இயற்பெயர் வடமொழியில் இருந்ததால் தனது தனித்தமிழ் பற்றின் காரணமாக மறைமலை என்று அமைத்துக் கொண்டார்.தான் மட்டுமல்லாமல் தமிழர்கள் அனைவரையும் தனித்தமிழில் எழுத வேண்டும் பேச வேண்டும் என்று விரும்பினார்.அதற்குத் தானே முன்னோடியாகத் திகழ்ந்தார். சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகப் போற்றி நாள்தோறும் அவற்றின் வளர்ச்சிக்கு நற்பணிகள் ஆற்றி வந்தார்.

தமிழர்கள் வாழ்வில் தமிழ் மரபு மட்டுமே இடம்பெற வேண்டும் என்று தான் நடத்திய இதழுக்கும் தான் தோற்றுவித்த அமைப்பிற்கும் தனித்தமிழிலேயே பெயரிட்டார்.

சென்னை கிருத்துவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய இவர் அருந்தமிழ், ஆங்கிலம்,வடமொழி என மும்மொழிகளிலும் ஆளுமை மிக்கவராகத் திகழ்ந்தார்.

இவரது ஆங்கிலப் புலமைக்கு முல்லைப் பாட்டராய்ச்சி, பட்டினிப்பாலை ஆராய்ச்சி என்னும் நூல்களுக்கு இவர் ஆங்கிலத்தில் எழுதி இருக்கும் முன்னுரைகள் சான்றுகள் ஆகும்.

வடமொழியில் காளிதாசன் இயற்றிய சாகுந்தலத்தை மொழிபெயர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

. 74 ஆண்டுகளே வாழ்ந்த இவர் 54 நூல்களை இயற்றியுள்ளது சிறப்பிற்குரியது.

தமிழ் மொழியை வடமொழியின் ஆதிக்கத்தில் இருந்து மீட்டெடுக்கும் போரில் அச்சமில்லா தளபதியாய் விளங்கினார்.

1937 ஆம் ஆண்டு தமிழகத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவாக,'' இந்தி பொது மொழியா?'' என்ற நூலை எழுதினார்.

இவரது கட்டுரைகளின் தொகுப்பான ''அறிவுரைக்கொத்து'' என்னும் நூல் மாணவர்களுக்குப் பைந்தமிழைக் கற்பிக்கும் பாங்கில் அமைந்துள்ளது.

தொடர்ந்து வந்த தமிழக அரசுகள் மறைமலையடிகள் நகர், மறைமலையடிகள் பாலம், மறைமலை அடிகள் பெயரில் அரசு விருது என மறைமலை அடிகளைப் போற்றி வருகின்றன..

பேராசிரியர் முனைவர் மு.முத்துவேலு முதல் பதிவாளர்

செம்மொழி தமிழாய் மத்திய நிறுவனம் சென்னை.

"தமிழ் இசையின் கொடையே இந்திய இசை"

முனைவர் சிவ இளங்கோ
புதுச்சேரி

தமிழிசை என்பது தமிழ் மண்ணில் மலர்ந்த தமிழர்களின் இசைமுறை. இசைப்பதற்கு என்றே தமிழில் இயற்றப்பெற்ற அத்தகைய இசைப் பாக்களின் தொகுதியே இசைத்தமிழ் எனப்படுகின்றது. பெரும்பாலான தமிழ் இலக்கியங்கள் இசைத் தமிழிலேயே இயற்றப்பட்டுள்ளன. நமக்குக் கிடைத்துள்ள தமிழ் நூல்கள் பண்டைய இசைத்தமிழ் மரபினையும், குழல், யாழ் முதலிய இசைக் கருவிகளையும், இசை பாடும் முறையினையும், சிறப்பாகக் குறிப்பிடுகின்றன.

தமிழிசை நூல்களுள் நமக்குக் கிடைக்காமல் போய்விட்ட இலக்கியங்கள் அதிகம். குருகு, இசை நுணுக்கம், கூத்தநூல், தாள வகையோத்து, முதுநாரை, முதுகுருகு, சிற்றிசை, பேரிசை, பதினாறு படலம், முறுவல், குணநூல், சயந்தம், செயிற்றியம், வாய்ப்பியம் போன்ற இசை நூல்கள் பற்றிய செய்திகள் நமக்குக் கிடைத்திருந்தும் அவற்றின் ஓலைச்சுவடிகள் கிடைக்காமல் போய்விட்டன. அதற்குக் காரணங்களாகச் சொல்லப்படுபவை நம் மூடநம்பிக்கைகளோடு தொடர்புடையவை.

பழங்காலத்துத் தமிழ் இசை என்பது, குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என ஏழிசைக்கும் பெயர் பெற்று விளங்கியது. கொல்லி, இந்தளம், சிகாமரம், குறிஞ்சி, நட்டபாடை, வியாழக்குறிஞ்சி, செவ்வழி, புறநீர்மை என்று அமைந்துள்ள தமிழ்ப் பெயர்கள் தமிழிசையின் பழமைக்குச் சான்றுகளாகின்றன. பிற்காலத்தில் வலிந்து புகுத்தப்பட்ட ஆரோகணம், அவரோகணம், கமகம் ஆகிய ஆலாபனை(ஆலத்தி) முறைகள் தமிழில் ஏற்றம், இறக்கம், அலுக்கு என்றழைக்கப்பட்டன. குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் ஆகிய ஐவகை நிலங்களுக்கும் யாழ்களும், பண்களும் இருந்தன. பண் பாடுவோர் பாணன், பாணினி என்று அழைக்கப்பட்டனர். இசை என்பது குரலிசை, கருவியிசை என இரு பிரிவினதாக விளங்கியது. இசைக்கருவிகள் 'இயம்' என்று வழங்கப்பட்டன.

இசையினை நெஞ்சு, கண்டம், நா, உதடு போன்ற எட்டு இடங்களிலும், எடுத்தல், படுத்தல், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு போன்ற எண்வகைத் தொழில்களால் உருவாக்கிச் சீர்திருத்திப் பாடப் பெறுவது பண் ஆகும். ஏழு நரம்புகளைக் கொண்ட தொகுதியே 'பண்' எனப்பட்டது. நாளடைவில் ஆறு, ஐந்து, நான்கு நரம்புத் தொகுதிகளைக் கொண்ட பண்ணியல், திறம், திறத்திறம் ஆகியவையும் பண் என்ற பொதுப் பெயரிலேயே

வழங்கப்பட்டன. குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் ஆகிய பழந்தமிழ்ப் பண்கள், பகற் பண்கள் என்றும், இரவுப் பண்கள் என்றும், மாலைப் பண்கள் என்றும் பொழுதிற் கேற்றவாறு பாகுபாடு செய்யப்பட்டுள்ளன.

சங்க காலத்தில் தமிழிசை செல்வாக்குப் பெற்றிருந்ததற்குச் சங்கத் தமிழ் நூல்களே சான்றுகள் ஆகின்றன. தமிழ் மொழியையும், தமிழ் இசையையும் புரந்த மன்னர்களே அப்போது தமிழ் மண்ணை ஆண்டு வந்தனர். களப்பிரர் காலத்திற்குப் பின் வந்த பல்லவர் ஆட்சியின் போது, வடமொழிகள் உயர் நிலை பெற்று, வடமொழி இலக்கிய, இலக்கணம் சார்ந்த நூல்கள் தமிழில் இயற்றப்பட்டன. இதனால் சங்கம் மருவிய காலத்தின் இறுதியில் பக்தி இலக்கியங்களும் உருவாக்கம் பெறத் தொடங்கின. இவற்றின் விளைவாகக் கி.பி. ஆறு முதல் ஒன்பதாம் நூற்றாண்டுக் காலகட்டத்தில் பக்தி இலக்கிய இயக்கம் தோன்றி வளர்ச்சி பெற்றது. அது சமய இயக்கமாகவும் வளர்ந்தது. சமண சமயத்தின் ‘மகாபுராணம்’ நூலில் குறிப்பிடும் 63 சமண முனிவர்களைப் போல, சைவம் 63 நாயன்மார்களை வரையறுத்தது. வைணவம் 12 ஆழ்வார்களை வரையறுத்து அவர்களின் பாடல்களைக் கொண்டாடியது (நொபோரு கராஷிமா 2008:128-129).

சங்க இலக்கியத்தின் ஆண்-பெண் காதலைக் கூறும் அகத்திணை மரபை, இறைவன்-ஆத்மா இடையேயான காதலின் பேருவகையாக மாற்றி, அதையே பக்தி இயக்க மரபாகக் கொண்டது அவ்வியக்கத்தின் உத்தி எனலாம். அவர்கள் அதில் வெற்றியும் பெற்றனர். பக்தி இயக்கம் மலரவும், வைதிகம் தெற்கே வளர்ச்சி பெறவும், தெற்கு - வடக்கு மரபுகளில் ஏற்பட்ட மொழி, பக்திக் கலப்புகள் காரணமாக அமைந்தன. வைதிகத்தைப் பின்பற்றிய பல்லவர், பிற்காலப் பாண்டியர், பிற்காலச் சோழர்களின் ஆட்சியில் புதியதாகக் கட்டப்பட்டக் கோயில்களின் வழிபாட்டில் பக்திப் பாடல்களைப் புகுத்திப் பக்தி இயக்கம் வெற்றி பெற ஆட்சியாளர்களும் காரணமாய் அமைந்தனர் (நொபோரு கராஷிமா 2008:130-135). பக்தி இலக்கியங்கள் பெரும்பாலும் இசை வடிவில் இயற்றப்பட்டதால் மீண்டும் தமிழிசை தலை நிமிர்ந்தது. ஆனால் அறம், பொருள், இன்பம் என்று அதுவரை இருந்த தமிழ்க் கருத்தியல் ‘வீடுபேறை’ நோக்கி நகரத் தொடங்கியதும் பக்தி இலக்கியக் காலத்தில் தான்.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை பிற்காலச் சோழர்களின் ஆட்சியில் பக்தி இயக்கம் ஏற்றம் பெற்றதைப் போல், தமிழ் இசையும் ஏற்றம் பெற்றது. அரச ஆதரவுடன் பரத்தையர் கூடங்களும், கோயில்களும் தமிழிசையைக் காப்பவையாக விளங்கின. பிற்காலச் சோழர்களுக்குப் பிறகு வந்த முகமதியர், நாயக்கர், மராட்டியர் ஆட்சிக் காலத்தில் தமிழ் இசை செல்வாக்கிழந்து, பதினைந்தாம் நூற்றாண்டில் கர்நாடக இசை எனப் பெயர் மாற்றம் பெற்றது.

இசைத்தமிழுக்கான பழந்தமிழ் நூல்கள் இதுவரை நமக்குக் கிடைக்காமல் போனாலும், கிடைத்திருக்கும் சிலப்பதிகாரம் மட்டும்தான் பழந்தமிழ் இசையைக் கூறும் ஒரே காப்பியமாகும். தமிழ் இசையின் பழமையான வரலாறைச் சிலப்பதிகாரம் திரட்டித் தந்திருப்பினும், சிலப்பதிகாரம் கூறும் பண்களை ராகங்கள் என்றும், அலகு என்பதைத் தாளம் என்றும் பிற்காலத்தில் வடமொழிப் பெயர் சூட்டி, சிவபெருமானோடு சேர்த்துக்

கதை கட்டி அதையே முதலிடமாக நிறுவும் திரிபுவாதம் தான் வடமொழி வாதமாக முன் வைக்கப்படுகிறது. யாழ் என்பது திராவிடப் பண்பாட்டின் இசைப் பயன் என்று கூறும் "இந்திய இசை - ஓர் அறிமுகம்" என்னும் ஒன்றிய அரசாங்கத்தின் நூல், ஆரியர்கள் இங்கு வந்தபோது குழலையும், வீணையையும் தம்முடன் கொண்டு வந்தனர் என்றும் கூறுகிறது. எந்த நாடோடிக் குழுவும், அதற்கு முன்பான காட்டுமிராண்டி இனக் குழுக்களும் இப்படிப்பட்ட இசைக் கருவிகளை வைத்திருந்ததாக, இதற்கு முன்பிருந்த வரலாற்றாசிரியர்கள்எவரும்கூறவில்லை. வடமொழியாளர்கள்எழுதிய இராமாயணத்தில் கூடத் தமிழ் மண்ணின் மன்னனாகக் குறிப்பிடப்படும் இராவணனின் இசைப் புலமையையும், பேரியாழ் இசைப்பினில் கைதேர்ந்தவர் ஆகவும் கூறுகின்றனர்.

இந்தியாவைப் பொருத்தவரை இந்துஸ்தானிய இசை என்பது வட இந்திய மரபாகவும், கர்நாடக இசை என்பது தென்னிந்திய மரபாகவும் குறிப்பிடப்படுகின்றன. இவை இரண்டும் ஒரே இந்திய இசை மரபு சார்ந்தவை அல்ல. தமிழிசை மிகவும் தொன்மையானது என்பதைத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. சிந்துவெளி ஆய்விலும் சில இசைக் கருவிகள் (ஊதல் கருவி, தாளக் கருவிகள்) கிடைத்துள்ளன. ஆனால் சிந்துவெளியில் (கி.மு. 4000) இசை குறித்த சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை என்று கூறி, வேத காலம் தான் (கி.மு. 2000) இசையின் தொடக்கம் என்று வடக்கத்திய இசைவாணர்களும், வட இந்தியத் தொல்லியல் ஆய்வாளர்களும் கூறி வருகின்றனர். சிந்துவெளியில் சில இசைக் கருவிகள் கிடைத்தும் கூட, அது குறித்து இந்திய ஆய்வாளர்கள் கண்டு கொளவதில்லை (இந்திய இசை ஓர் அறிமுகம் 2009: 25-30).



பரதமுனி என்பவர் எழுதிய "நாட்டிய சாஸ்திரம்" தான் இந்திய இசைக்கும், நாட்டியத்திற்கும் மூல நூல் என்று கூறுகின்றனர். சங்க இலக்கியங்களில் பாணர்களும், அவர்களை ஆற்றுப்படுத்தும் பாடல்களும் மிகுதியாக உள்ளன. அவை முழவு, யாழ் போன்ற பல்வேறு மிகப்பழைய இசைக்கருவிகளைப் பற்றியும் கூறுகின்றன. சிலப்பதிகாரம் தமிழ் இசை பற்றி விரிவாகக் கூறித் தமிழ்ச் சுரங்களைப் பதிவிட்டும் கூட,

காலத்தால் பிற்பட்ட பரதமுனியை முன்னிறுத்தி இந்துஸ்தானி இசையை மூலமாக்க முயற்சி செய்து வருகின்றனர். கேட்டால் பரதமுனிவர், சிவபெருமானின் முன்னிலையில் சிந்தை தெளிந்து மலர்விக்க வந்த இசையே "மார்க்க இசை" என்று மயக்கி வருகின்றனர் (இந்திய இசை ஓர் அறிமுகம் 2009: 1-11).

கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் "சங்கீத ரத்னாகரம்" என்னும் நூலை எழுதிய சாரங்கதேவர் ஒரு கணியர். அவர் பெயரின் பின்பகுதியும், தொழிலுமே அவரைத் தமிழராகக் காட்டும். என்றாலும் இவற்றை எல்லாம் புறந்தள்ளி ஏழாம் நூற்றாண்டில் கிளைத்த பக்தி இலக்கியக் காலம்தான் தமிழிசையின் தொடக்கமாக வட இந்தியர்கள் ஓரளவு பெரிய மனது வைத்து ஒப்புக் கொள்கின்றனர். சைவ நாயன்மார்களின் தமிழ்ப் பண்களும், பின்னர் 12 ஆம் நூற்றாண்டில் வைணவ ஆழ்வார்களின் தூய தமிழ்ப் பண்களும் இந்திய இசைக்கே வழிகாட்டி நின்றன. தென்னிந்தியாவில் எழுந்த பக்திப் பிரவாகம் துணைக்கண்டம் முழுவதையும் கவிந்தது. இந்தியாவிற்கு வெளியிலிருந்து அரபு மொழி மரபில் வந்த இசைகளின் கலப்பில் உருவானதுதான் இந்துஸ்தானி இசை. ஆனாலும் ஜெயதேவர் (கி. பி.12), சுவாமி அரிதாசர் (கி.பி. 15), தான்சேன், புரந்தரதாசர் (கி.பி. 16), ஷேத்திரய்யா (கி.பி. 17), பட்கண்டே, பாலுஸ்கர் (கி.பி. 19), ரவீந்திரநாத் தாகூர் (கி.பி. 19) ஆகியோரை முன்னிறுத்தியே இந்திய இசை மரபின் வரலாறு முன்வைக்கப் பட்டுள்ளது (இந்திய இசை ஓர் அறிமுகம் 2009:108-148).

17, 18 ஆம் நூற்றாண்டுகளில் அன்றைய நாயக்க மன்னர் ஆட்சியில், தமிழ்நாட்டில் வாழ்ந்த சியாமா சாஸ்திரிகள், தியாகராஜர், முத்துசாமித் தீட்சிதர் ஆகிய இவர்களையே சங்கீத மும்மூர்த்திகள் என்று முன்னிறுத்துகின்றனர் வட இந்திய வரலாற்றாளர்கள், இம் மூவருமே பார்ப்பனர்கள். இவர்கள் தமிழ்க் கீர்த்தனைகள் எதுவும் இயற்றியதில்லை. தமிழ் இசையில் பாடியதும் இல்லை. எல்லாம் சாஸ்திரிய சங்கீதம் தான். தெலுங்குக் கீர்த்தனைகளை இயற்றித் தெலுங்கிலேயே பாடினார்கள். தமிழுக்கும், தமிழிசைக்கும் துளி கூடத் தொடர்பே இல்லாத இவர்களின் "தெய்வீக இசை"யைப் பற்றித் திருவையாறில் புல்லரித்துப் பாடும் ஆரியக் கூத்து, இன்று வரை, ஆண்டுதோறும் நடந்தேறி வருகிறது. இவர்களை 'இசை மும்மூர்த்திகள்' என்று முன்னிறுத்தும் வட இந்திய வரலாற்றாளர்கள், பார்ப்பனிய மும்மூர்த்திகளுக்கு முன்பாக வாழ்ந்த தமிழ் இசைவாணர்கள் ஆன அருணாச்சலக் கவிராயர், முத்துத் தாண்டவர், மாரிமுத்தாப் பிள்ளை ஆகிய முற்றிலும் தமிழிசையை முன்னெடுத்த தமிழ் மும்மூர்த்திகளைப் பற்றி ஒரு சிறு குறிப்பும் கூடக் காட்டுவதில்லை. தமிழிசை மூவர், தமிழ் இசை மும்மூர்த்திகள், ஆதி மும்மூர்த்திகள் என்று அழைக்கப்படும் இவர்கள் தமிழிலேயே பாட்டெழுதி, தமிழிலேயே பாடித், தமிழிசையை வளர்த்த மாபெரும் இசைவாணர்கள் ஆவர். இவர்கள் இசைத்து வந்த பண்ணும், அலகும் சேர்ந்த தனி இசைப் பாடலான "உருப்படி", பின்னர் ராகம், தாளம் சேர்ந்த "கீர்த்தனை" என்றானது. உருப்படியின் உறுப்புகளான "எடுப்பு, தொடுப்பு, முடிப்பு" ஆகியவை "பல்லவி, அனுபல்லவி, சரணம்" என்று வழங்கப் பட்டு வருகின்றன. நீண்ட நெடிய மரபுடன் கூடிய இத் தமிழிசைதான் இந்திய இசைக்கும், கர்நாடக இசைக்கும் அடிப்படை. இதுதான் இந்திய இசை வரலாற்றில் தமிழுக்கான உண்மையான இடம்

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆபிரகாம் பண்டிதர், விபுலானந்தர் போன்றோரின் இசைத்தமிழ் ஆய்வுகளால் தமிழ் இசையின் பெருமை உணரப்பட்டு, அதுவே ஓர் இயக்கமாக உருவெடுத்தது. அண்ணாமலை அரசர், ஆர். கே. சண்முகம் ஆகியோரின் முயற்சியால் 1942 ஆம் ஆண்டில் தமிழிசை இயக்கம் தோன்றியது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழிசைக் கல்லூரியும், சென்னையில் தமிழிசைச் சங்கமும் உருவாக்கப்பட்டன. இதற்கு முன்னரே இந்தி எதிர்ப்புப் போராட்ட விளைவால் பெரியாரும், அண்ணாவும் தமிழிசைக்காகக் குரல் கொடுத்தனர். "தமிழர் இசையை வளர்த்தது போல் வேறு இனத்தினர் வளர்க்கவும் இல்லை; தமிழர் இசையை இழந்தது போல் வேறு யாரும் இழக்கவும் இல்லை" என்று அறிஞர் அண்ணா குறிப்பிட்டுப் பண்டைய தமிழிசையை மீட்டுருவாக்கம் செய்யும் முயற்சிக்கு ஆதரவாக நின்றார். "தமிழிசைப்பாடல்களில், வாழ்க்கை முறையில் இருக்கும் மூடப்பழக்கவழக்கங்களையும், கேடுகளையும் அகற்றி, அறிவூட்டும் பாடல்களைப் பாடுமாறு செய்தல் வேண்டும்" என்று பெரியார் அறிவுறுத்தினார் (தமிழிசைப் போர், 2016, பெரியார் படிப்பகம்).

பொதுவாக இசைப் பாடல்களின் இயல்புகளாகச் சொற்கள்/தொடர்கள்/அடிகள் மடங்கி வருதல், தனிச்சொல் பெறுதல், மோனை எதுகைகளுடன் இயைபும் தொடையும் பெறுதல், ஓசை நலனுடைமை, எடுப்பு/தொடுப்பு/முடிப்பு எனும் உறுப்புகளைப் பெறுதல், தாள நடையில் நடத்தல், எளிய மொழி நடை உடைமை ஆகியவை குறிக்கப் பெறுகின்றன (முனைவர் இரா. திருமுருகன் - நேர்காணல் / புதுவைச்சிவம் 2014:100-102). மேற்கூறிய தமிழிசைப் பாடல் அமைப்பு முறையில் தான், பக்திப் பாடல்களும், பகுத்தறிவுப் பாடல்களும் ஏராளமாக இயற்றப்பட்டு வருகின்றன.

எல்லாமே தமிழில்தான் இருந்தன. இருக்கின்றன. ஆனால் இந்திய இசை என்பது "சாஸ்திரிய ஸங்கீதம்" என்று கூறுவதே தற்கால ஆரிய மரபு மற்றும் மமதை; அதை வழி மொழியும் தமிழர்களும் இருப்பதுதான் விந்தையும், வேதனையும்.

துணை நூல்கள்:

1. சைதன்ய தேவா, பி., இந்திய இசை ஓர் அறிமுகம், 2009, இந்திய அரசின் செய்தி, ஒலிபரப்பு அமைச்சகம், வெளியீடுகள் துறை, புது தில்லி.
2. இளங்கோ. சிவ., புதுவைச் சிவம், 2014, சாகித்திய அகாதமி, புதுதில்லி.
3. நொபோரு கராஷிமா (தொகுத்தவர்), சுருக்கமான தென்னிந்திய வரலாறு பிரச்சனைகளும் விளக்கங்களும், 2018, அருட்செல்வர் நா. மகாலிங்கம் மொழிபெயர்ப்பு மையம், பொள்ளாச்சி.
4. தந்தை பெரியார், தமிழிசைப் போர், 2016, பெரியார் படிப்பகம், கோயமுத்தூர்.

ம. சிங்காரவேலர் என்றொரு மானுடன்

மு. பழநிச்சாமி
நாகமலை, மதுரை–19

நூலகங்கள் நம் அறிவின் மிகப் பெரிய தேடல் வெளி. ஆங்கிலத்தில் ‘Today Reader ; Tomorrow Leader’ என்பார்கள். வாசித்துப் பழகாத சமுதாயம் வன்முறையை வெளிப்படுத்தும் – என்னும் சிந்தனைப் போக்கும் ஒன்றுண்டு. வாசிப்பை வளப்படுத்தும் நூலகங்களை, அரசு, அங்கிங்கெனாதபடி எங்கும் நிறுவி நிர்வகித்து வருவதை நாம் அறிவோம். அரசாங்கத்து அறிவுச் செல்வச் செழிப்பின் செல்லப் பிள்ளைகளாக, சென்னை-கன்னிமரா நூலகம், கல்கத்தாவிலுள்ள பெல்வடீர் நூலகம், தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம் போன்றவை, காலம் காலமாக கருத்துக் கருவூலங்களை அள்ளி வழங்கும் பழமை வாய்ந்த நூலகங்களாகப் பேசப்படுகின்றன. ஆனால் தனி நபர்களால், தங்கள் சொந்தப் பணத்தையும் உழைப்பையும் கொண்டு – தோற்றுவிக்கப்பட்ட நூலகங்களை நாம் அவ்வளவாக அறிந்திருக்க வாய்ப்பில்லை. கொஞ்சம் அது பற்றியும் பார்ப்போம்.

ரோஜா முத்தையா நூலகம்

ரோஜா முத்தையா செட்டியாரால் 1950-களிலிருந்து 1990-கள் வரை சேர்க்கப்பட்ட அரிய தமிழ் நூல்களைக்கொண்டு, ரோஜா முத்தையா நூலகம் 1994 ஆம் ஆண்டு சென்னையில் துவங்கப்பட்டது. அதற்கு முன்பு அது கோட்டையூரில் இயங்கிவந்தது. தமிழ் மொழி வாயிலாக மானுடவியல், சமூக அறிவியல் மற்றும் அறிவியல் துறைகளில் ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ள இந்நூலகம் உலகிலுள்ள மிக முக்கியமான தனியார் நூலகங்களிலொன்றாக கருதப்படுகிறது. தமிழ் மொழியின் பல அரிய அச்சு நூல்களைக் கொண்டுள்ள இந்நூலகத்தில் சுமார் 3 இலட்சம் புத்தகங்கள், பருவ இதழ்கள், உள்ளன.

ஞானாலயா நூலகம்

புதுகோட்டை, திருக்கோகர்ணம் ஊரில் அமைந்திருக்கிறது ’ஞானாலயா’ நூலகம். கிருஷ்ணமூர்த்தி - பாரதி தம்பதியர் இதைத் தோற்றுவித்து நடத்தி வருகின்றனர். இதுவே

தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய தனியார் நூலகம் ஆகும். தங்களது வீட்டின் பக்கத்திலேயே கம்பீரமாக ஞானாலயாவிற்காக ஒரு 1,800 சதுர அடியில் பெரிய கட்டிடத்தை எழுப்பியுள்ளனர்.

தமிழ் நூல் காப்பகம் விருத்தாசலம்

கிடைத்தற்கரிய பல நூல்களைத் தேடி அலையும் ஆய்வாளர்களுக்கோர் சிந்தனைச் சுரங்கமாக, சரணாலயமாக அமைந்து திகழ்வதுதான் விருத்தாச்சலத்தில் அமைந்துள்ள ஆசியாவின் மிகப்பெரிய தனியார் நூலகம் என்று சொல்லப்படும் ‘தமிழ் நூல் காப்பகம்’. புலவர் பல்லடம் மாணிக்கம் அவர்களால் 2000-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட இந்த நூலகம் 50 லட்சம் ரூபாய் செலவில் தரைத்தளத்தில் நூலகமும், மேல்தளத்தில் கூட்ட அரங்கும், ஆய்வு மேற்கொள்பவர்களுக்கு உரிய அறைகளும் ஆகியவற்றோடு கூடிய கலைநயம் மிக்க அறிவுக் கோயிலாக அமைந்து திகழ்கிறது. ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட அரிய நூல்கள் இங்கு உள்ளன.

இவர்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்தவர் தான் ம.சிங்காரவேலர் என அறியப்படும் மலையபுரம் சிங்காரவேலு. வாசிப்பை நேசித்த இவர், சென்னை வெலிங்டன் சீமாட்டி கல்வி வளாகத்திலிருந்த தனது வீட்டில் சுமார் இருபதாயிரம் நூல்களைச் சேகரித்து வைத்துப் பராமரித்து வைத்திருந்தார். இவர் ஒரு பொதுவுடமைக் கொள்கையாளர், தொழிற்சங்கவியர் மற்றும் இந்திய விடுதலைப் போராளி. பொதுவுடமைச் சிந்தனைகளைத் தமிழ்நாட்டில் பரப்ப இவர் ஆற்றிய சீரிய பணிகளுக்காக ‘சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்’ என அழைக்கப்பட்டார்.

சிங்காரவேலரின் நூலக உணர்வு

ம.சிங்காரவேலர் ஒரு சுதந்தரப் போராட்ட வீரர்; தொழிற்சங்க இயக்கத் தலைவர்; பொதுவுடைமை இயக்கத்தின் முன்னோடி; பன்மொழி அறிஞர்; சமுதாயப் போராளி; பல்துறை வித்தகர். இவ்வாறு பல பரிமாணங்களைக் கொண்டிருந்த சிங்காரவேலர், தம் வாழ்வின் இறுதிவரை ஏழை, எளிய மக்களுக்காகவே சிந்திப்பதையும், எழுதுவதையும், செயல்படுவதையும் ஒரு தவமாகவே ஏற்றிருந்தார். நூலகங்கள் மற்றும் புத்தகங்கள் மீது அளவுகடந்த ஆர்வம் கொண்டிருந்தார். அறிவார்ந்த பல நூல்களை வாசிப்பதை வழக்கமாக்கிக் கொண்டார். தொடர்ந்து நூலகங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம் என்று நம்பினார். அது அவரது எழுத்துக்கள், சிந்தனை மற்றும் செயல்பாடுகளில் வெளிப்பட்டது. அவரது நூலக உணர்வு அவரைப் பின்பற்றியோரையும் ஊக்குவித்தது. சிங்காரவேலர், பொதுவுடமைக் கொள்கையாளராகவும், சமூகப் பணிகளில் அதிக ஈடுபாடு கொண்டவராகவும் திகழந்தமைக்கு அவரது நூலக உணர்வே அடிப்படைக் காரணியாக அமைந்தது. சிங்காரவேலரின் நூலக உணர்வை, ஆரோக்கியமான சிந்தனைக்கும், அறிவுசார் தேடலுக்கும், சமூக முன்னேற்றப் பங்களிப்புக்கும் சிறந்த சான்றாகக் கொள்ளலாம். நூலக உணர்வு கொண்ட சிங்காரவேலர் சென்னையில் தாம் வாழ்ந்த தெற்குக் கடற்கரைச் சாலை இல்லத்தில், ஒரு மிகப் பெரிய நூலகத்தை உருவாக்கி அதை உலகிற்குப் பயன்பட ஆக்கினார். தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய நூலகமாக அன்று அது திகழ்ந்தது என அறிஞர்கள் பதிவு செய்துள்ளனர். அந்த நூலகத்தில் படித்துத் தங்களை வளர்த்துக் கொண்டவர்கள் பாரதியார், திரு.வி.க., அறிஞர் அண்ணாதுரை, ஏ.எஸ்.கே. அய்யங்கார், கே. முருகேசன், பாரதிதாசன், டி.என். இராமச்சந்திரன், குத்தூசி குருசாமி, கவிஞர் சுரதா போன்றோர் ஆவர்.

சிங்காரவேலரின் பிறப்பும் இன உணர்வும்

தமிழகத்தின் தலைசிறந்த சிந்தனாவாதியும் சமூக சீர்திருத்தவாதியும் விடுதலைப் போராட்ட வீரருமான ம.சிங்காரவேலர், சென்னையில் பிற்படுத்தப்பட்ட மீனவர் குடும்பத்தில் 1860-ல் பிறந்தார். தான் சார்ந்த மீனவ சமூகத்தவர்கள் ஒடுக்கப்பட்ட நிலையில் இருப்பதை நினைத்துச் சிறுவயது முதலே சிந்தித்துக்கொண்டிருந்தார். சிங்காரவேலரின் இந்த இனவுணர்வைப் பற்றிப் பலருக்குத் தெரியாது. பள்ளிக் கல்வியை முடித்த பின் சென்னை மாநிலக் கல்லூரியில் பட்டப் படிப்பை முடித்தார். பட்டம் பெற்ற பின்னர், சென்னை சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று வழக்குரைஞர் ஆனார். தாய்மொழியான தமிழோடு, ஆங்கிலம், இந்தி, உருது, பிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளில் நன்கு புலமை பெற்றிருந்தார். சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சபையில் 1907-ஆம் ஆண்டு வழக்கறிஞராகத் தன்னைப் பதிவு செய்து கொண்டார். வழக்கறிஞர் வாழ்க்கையைத் தொடங்கிய சிங்காரவேலர் அடக்குமுறையாளர்கள், பேராசைக்காரர்கள் ஆகியோருக்காக எந்தச் சூழ்நிலையிலும் வாதாடியதில்லை. ஒடுக்கப்பட்ட மீனவக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதால் நீதிமன்றத்தில் எதிராளியால் அவமானப்படுத்தப்பட்டார். தனது சட்டத் திறமையால் வாதாடி அந்த வழக்கை வெற்றிகரமாக வென்றார். நல்ல வசதியான குடும்பப் பின்னணியைச் சேர்ந்தவர் என்றாலும், வழக்கறிஞர் தொழில் செய்து வந்தபோதும் அவருடைய எண்ணமெல்லாம் ஏழைக்களைப் பற்றியே இருந்தது. சிங்காரவேலரின் குடும்பம் சைவ சமயப் பின்னணி உடையது என்றாலும், இவர் பௌத்த நெறிக் கருத்தியல் கொண்டவராக இருந்தார். தன் வீட்டில் ‘மகாபோதி சங்கம்’ என்ற ஒன்றைத் தொடங்கித் திங்கட்கிழமை தோறும் பௌத்தக் கொள்கைப் பரப்புக் கூட்டங்களை நடத்தினார். புத்தரின் நினைவு ஆண்டைத் தன் இல்லத்திலேயே கொண்டாடினார். லண்டனில் நடந்த உலகப் பௌத்தமத மாநாட்டில்க் கூடக் கலந்துகொண்டார்.

சிங்காரவேலரின் நாட்டுப் பற்று

அடிப்படையில் இந்திய தேசிய இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட சிங்காரவேலர் அண்ணல் காந்தியடிகளைத் தன் தலைவராக ஏற்றுக்கொண்டார். அண்ணல் அடிச்சுவட்டில் தன்னை இணைத்துக்கொண்டார். காந்தியடிகளோடு சேர்ந்து தேச விடுதலைப் போராட்டங்கள் மற்றும் சமூக சேவைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். ஊர்ஊராகச் சென்று கல்வியறிவு இல்லாத மீனவ சமூக மக்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்தார். ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உழைத்தார். சிறந்த பேச்சாளரான சிங்காரவேலர், தன் பேச்சுத் திறமையால் மக்கள் மத்தியில் உரையாற்றி விடுதலை உணர்வையும், தேசிய விழிப்புணர்வையும் வளர்த்தெடுத்தார். ஆங்கிலேய ஆட்சியின் ரவுலத் சட்டத்தினை எதிர்த்தார். காந்தி அறிவித்த ஒத்துழையாமை இயக்கப் போராட்டத்திற்கு அனைத்து வழக்குரைஞர்களையும் அழைத்துப் பங்கேற்கச் செய்தார். ஒத்துழையாமை இயக்கத்தின்பால் ஈர்க்கப்பட்டுத் தனது வழக்குரைஞர் தொழிலைப் புறக்கணித்தார் சிங்காரவேலர். வழக்குரைஞர் அணியும் தன் கருப்பு அங்கியைக் கழற்றி எரிந்துவிட்டு, ‘இனிமேல் நீதிமன்றத்துக்கே வரப்போவதில்லை, வக்கீல் தொழிலும் பார்க்க மாட்டேன்’ என்று கூறி ஆங்கில அரசுக்கு எதிர்ப்பையும் காந்திக்குத் தனது ஆதரவையும் தெரிவித்தார். ‘என் மீனவ சமூக மக்களின் முன்னேற்றத்திற்காகவே பாடுபடுவேன்’ என்றும் அறிவித்தார். வேல்ஸ் இளவரசரின் இந்திய வருகையை எதிர்த்துச் சென்னையில் மாபெரும்

போராட்டத்திற்குத் தலைமையேற்று நடத்தினார். இப்போராட்டம், 'ஆங்கிலேய அரசையே உலுக்கியது' என்று அறிஞர் அண்ணா பதிவு செய்துள்ளார்.

தொழிற்சங்கப் போராளி

தொழிலாளர்கள் படும் துயரத்தைக் கண்டு தொழிலாளர்களின் போராளியாகவே மாறினார். ரஷ்யாவின் கம்யூனிசப் புரட்சியால் கவரப்பட்டு, இந்தியாவின் முதல் தொழிற்சங்கமான சென்னை தொழிலாளர் சங்கத்தை 1918-ல் தொடங்கினார். 'லேபர் கிஸான் பார்ட்டி ஆஃப் இந்துஸ்தான்' என்ற கட்சியை 1923-ல் தொடங்கினார். 'லேபர் கிசான் கெஜட்' என்ற ஆங்கில வார இதழையும் 'தொழிலாளன்' என்ற தமிழ் வார இதழையும் நடத்தினார். தொழிலாளர் போராட்டங்கள், தென்னிந்திய ரயில்வே போராட்டங்களில் மும்முரமாகப் பங்கேற்றதுடன் தனது பத்திரிகைகளிலும் செய்தித் தாள்களிலும் கட்டுரைகள் எழுதியும் பிரச்சாரங்களில் ஈடுபட்டும் வந்தார். இந்தியாவில் முதன்முதலாகத் 'தொழிலாளர் நாள்' என்னும் மே தினத்தைக் கொண்டாடியவர் சிங்காரவேலர்.

இந்தியப் பொதுவுடமைக் கட்சியைத் தொடங்கிய தலைவர்களுள் சிங்காரவேலரும் ஒருவர். 1925-ல் கான்பூரில் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் மாநாட்டில் தலைமையுரை நிகழ்த்தினார். 1924-இல் கான்பூர் போல்ஷ்விக் சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர். 1927-இல் பெங்கால்-நாக்பூர் ரயில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டார். அதே ஆண்டு ஆகஸ்டில் சாக்கோவுக்கும்- வான்செட்டிக்கும் தீர்ப்பாகிய மரண தண்டனையை எதிர்த்துக் கூட்டங்கள் நடத்தினார். சைமன் குழு புறக்கணிப்பு, தொழிலாளர்கள் போராட்டம், பின்னி கர்நாட்டிக்க ஆலைப் போராட்டம், நாகை ரயில் வண்டித் தொழிலாளர்கள் போராட்டம் முதலியன சிங்காரவேலரின் தலைமையில் நடைபெற்றது. 1928-ல் வரலாற்றுப் பெருமை வாய்ந்த தென்னிந்திய ரயில்வே வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதால் 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் தண்டனை குறைக்கப்பட்டு 1930-ல் விடுதலை செய்யப்பட்டார். தமிழை ஆட்சிமொழியாக்கும் கோரிக்கையை வலியுறுத்தியவர் சிங்காரவேலர். சென்னை மாநகராட்சி உறுப்பினராக இருந்தபோது பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தைச் சிறப்பாகச் செய்து காட்டினார். பின்னாளில் காமராஜர் தமிழகம் முழுவதும் தொடங்கிய மதிய உணவுத் திட்டத்திற்குச் சிங்காரவேலரே முன்னோடி எனலாம்.

பெரியாரும் சிங்காரவேலரும்

ஈ. வெ. ராமசாமிப் பெரியாரைத் தஞ்சையில் நடந்த (1918) மஹாஜனசபை மாநாட்டில் சந்தித்த சிங்காரவேலர், தொடர்ந்து அவருடன் தொடர்பில் இருந்தார். பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தை ஆதரித்த சிங்காரவேலர், பொதுவுடைமை இயக்கமும் சுயமரியாதை இயக்கமும் இணைந்து பணிபுரிய வேண்டும் என்று விரும்பினார். சென்னை (26.12.1931), சேலம் (மே, 1932), காஞ்சிபுரம் (15.03.1933) சுயமரியாதை இயக்க மாநாடுகளைத் திறந்துவைத்து உரையாற்றினார். 1933-இல் சென்னை நாத்திக மாநாட்டிலும், 1943-இல் தீண்டாமை ஒழிப்பு மாநாட்டிலும் பங்கேற்றார்.

1931-ஆம் ஆண்டு உலகப்பயணம் மேற்கொண்ட பெரியாரின் வேண்டுகோளுக்கிணங்க 'குடியரசு' இதழுக்காக:

1. கடவுளும் பிரபஞ்சமும்
2. கடவுள் என்ற பதமும், அதன் பயனும்
3. மனிதனும் பிரபஞ்சமும்
4. பிரபஞ்சப் பிரச்சினைகள்
5. மெய்ஞ்ஞான முறையில் மூடநம்பிக்கைகள்
6. மூடநம்பிக்கைகளின் கொடுமை
7. பகுத்தறிவென்றால் என்ன?

உள்ளிட்ட பல கட்டுரைகளை எழுதினார் சிங்காரவேலர். குடியரசு மட்டுமல்லாமல், தமிழன், பகுத்தறிவு, புரட்சி, தோழர், தொழிலாளன், சண்டமாருதம் முதலான தமிழ் இதழ்களிலும், *The Hindu, New India, Mail, Sunday Observer, Vanguard of Indian Indipendence* முதலான ஆங்கில இதழ்களிலும் எழுதியுள்ளார்.

சிங்காரவேலர் : தகைமைகளும் விருதுகளும்

புதுச்சேரி - கடலூர் சாலையிலும், காரைக்காலிலும் புதுவை அரசு சிங்காரவேலருக்குச் சிலை அமைத்துள்ளது. மத்திய அரசு சிங்காரவேலருக்கு அஞ்சல்தலை வெளியிட்டுள்ளது. சென்னை ராயபுரத்தில் சிங்காரவேலர் மணிமண்டபம் மற்றும் நூலகம் திறக்கப்பட்டுள்ளது. சிங்காரவேலர், பரதவர் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதால், மீனவர் வீட்டு வசதித் திட்டத்திற்குத் தமிழக அரசு இவர் பெயரைச் சூட்டியுள்ளது. சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு 'சிங்காரவேலர் மாளிகை' என்றும் பெயர் சூட்டப்பட்டுள்ளது. 'சிங்காரவேலனைப் போல் எங்கேனும் கண்டதுண்டோ' என்று புகழ்பாடும் பாரதிதாசன்

> "போர்க்குணம் மிகுந்தநல் செயல் முன்னோடி
> பொதுவுடைமைக் கேகுக அவன் பின்னாடி"

என்று இவரைப் பற்றி பாடியுள்ளார். இவரைப் 'புரட்சிப் புலி' என்று புகழ்ந்துள்ளார் பேரறிஞர் அண்ணா. சிங்காரவேலரின் 150-ஆவது பிறந்தநாளை அரசு விழாவாகத் தமிழ்நாடு அரசு கொண்டாடியது. அறிவியல் கருத்துக்களைத் தமிழில் நூலாக எழுதுபவர்களில், சமுதாய முன்னேற்றத்திற்காகவும், சமத்துவக் கொள்கைக்காகவும், தொழிலாளர் நலனுக்காகவும் போராடுகிறவர்களில் சிறந்த ஒருவருக்கு ஆண்டுதோறும் தமிழக அரசு 'சிங்காரவேலர் விருது' வழங்கிச் சிறப்பித்து வருகிறது. இவருடைய வாழ்க்கை வரலாற்றை பா. வீரமணி, நாகை. முருகேசன் - சி. எஸ். சுப்பிரமணியம், எஸ். ராமகிருஷ்ணன், சி. என். அண்ணாத்துரை ஆகியோர் நூல்களாக எழுதியுள்ளனர்.

சிங்காரவேலரின் படைப்புகள்

சிங்காரவேலரின் படைப்புகளாகப் பின்வருவன அறியப்படுகின்றன. அவை :

- உலகம் சுழன்று கொண்டே போகிறது

- கல்மழை உண்டாகும் விதம்
- கோழிமுட்டை வந்ததும் காணாமல் போனதும்
- சமதர்ம உபன்யாசம்
- சுயராஜ்யம் யாருக்கு?-பாகம். 1 , 2 & 3.
- தொழிலாளர் துயரமும் உலக நெருக்கடியும்
- தத்துவஞான விஞ்ஞானக் குறிப்புகள்-பல பகுதிகள்
- தத்துவ, விஞ்ஞான, பொருளாதாரக் குறிப்புகள்
- நடத்தை என்ற நவீன ஆராய்ச்சி
- பிராகிருத ஞானம்
- பிரபஞ்சத் தற்காலப் பிரச்சினை
- பிரபஞ்சமும் நாமும்
- பேய், பிசாசு
- மனித உற்பவம்
- மனோ ஆலய உலகங்கள்
- விஞ்ஞானமுறையும் மூடநம்பிக்கையும்
- விஞ்ஞானத்தின் அவசியம்
- ஜோதிட ஆபாசம்

சிங்காரவேலர் எழுதிய சிந்தனை நூல்கள், மாஸ்கோ நாகரிலிலுள்ள லெனின் நூலகத்தில் இடம்பெற்றுள்ளன. இது அவரது அறிவார்ந்த சிந்தனைகளுக்குக் கிடைத்த ஆகச்சிறந்த அங்கீகாரமாகும். தமிழில் பல நூல்களை எழுதிய, வேறு மொழிகளிலிருந்து தமிழுக்குப் பல நூல்களை மொழிபெயர்த்த சிங்காரவேலரின் நூல்கள் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன என்பது கூடுதல் சிறப்பு.

சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரின் மறைவும் கொடையும்

தேசபக்தரும், ‘சிந்தனைச் சிற்பி‘ என்று போற்றப்பட்டவரும், தொழிற்சங்கவாதியும் மீனவர் வாழ்வில் விடிவெள்ளியாகத் திகழ்ந்து அவர்கள் வாழ்வை வளம்பெறச் செய்தவருமான ம. சிங்காரவேலர் தமது 86-வது வயதில் காலமானார். சிறந்த விடுதலைப் போராட்ட வீரரான சிங்காரவேலருக்குத் தமது நாடு விடுதலை பெற்றதைக் கண்டுமகிழக் கொடுத்து வைக்கவில்லை. ஆம், இந்தியா விடுதலை அடைவதற்குச் சரியாக ஒரு வருடத்திற்கு முன்பு அதாவது 1946-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ஆம் நாள் மரணமடைந்தார். மரணமடைவதற்கு முன் தான் வாழ்நாள் முழுவதும் சேகரித்து வைத்திருந்த அரிய நூல்கள் கொண்ட நூலகத்தைக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு கொடையாகக் கொடுத்துச் சென்றார். மனிதகுல வளர்ச்சிக்குத் தேவையான சிந்தனைகளை விதைத்துவிட்டுச் சென்ற மானுடனாக ம. சிங்காரவேலர் இன்றும் மதிக்கப்படுகிறார்.

Ranking Thirukkural by Web Popularity: Analyzing Google Search Results with Scholarly Rigor

Dr. Jothi S. Themozhi
San Francisco

The Digital Dilemma: Can Search Data Reflect Literary Fame?

In a bold attempt to map the popularity of all 1,330 Thirukkural couplets, one researcher turns to Google—an unconventional yet data-rich platform. The plan? Use Google search result counts to rank each couplet by popularity. But this method prompts a deeper, critical question:

What does the "number of results" from a Google search actually measure?

To design a methodologically sound study, researchers must first understand the limitations and nuances of using this digital data source.

Search Strategies: 'All Results' vs. 'Verbatim'

The first major decision is choosing the search method. Google offers two fundamentally different modes:

All Results (Default):

Finds synonyms

Corrects spelling

May omit words

Tailors results based on user history and location

Example result count: 4,500,000

Verbatim Mode:

Searches exact phrase as typed

No synonyms or auto-corrections

Offers consistent, reproducible results

Example result count: 120,000

Choosing ‘Verbatim’ mode and using exact phrases in quotes (e.g., “exact couplet text”) is essential for data reliability.

The Myth of Precision: What Google Really Tells Us

Google’s result count, often mistaken for a hard metric, is a broad estimate based on how many web pages it has indexed with the search terms. While appealing for its scale, this number comes with substantial caveats:

Advantages

Easily accessible

Reflects global web presence

Encourages scalable analysis

Limitations

Highly imprecise estimate

Affected by hidden algorithms

Varies by user and geography

Reflects web presence—not real-world popularity

Results fluctuate frequently



Six Hidden Pitfalls in Search-Based Literary Analysis

Estimated, Not Exact

Google clearly warns users that its result counts are only rough approximations—unsuitable as a stand-alone metric in serious research.

Algorithmic Influence

Over 200 unseen ranking factors affect search outcomes. A couplet could rank high due to SEO tricks rather than genuine popularity.(SEO stands for Search Engine Optimization)

Personalization Bias

Results vary depending on who searches, where, and when. This makes data replication incredibly difficult.

Web Presence ≠ Popularity

A widely duplicated couplet might dominate result counts—even if few people actually read or value it.

Volatile Data Landscape

Google updates its index continuously. A search at 9 AM may yield very different results than the same search at 4 PM.

The Ecological Fallacy

Inferring individual-level insights from aggregate web data can be misleading. Web frequency does not equal cultural significance.

Building a More Credible Research Framework

Despite its flaws, Google search data can still serve as a component of a larger analytical framework. A few strategic enhancements can boost its credibility:

1. Precision in Search Technique

Use ‘Verbatim’ mode exclusively. Enclose each couplet in double quotes for consistent phrasing and phrase order.

2. Standardize the Research Environment

Combat personalization by using:

Incognito browsing

VPN to standardize location (A VPN, or Virtual Private Network, creates a secure, encrypted connection over the internet.)

Consistent logging of search date and time

3. Embrace the Imperfections

Clearly state in the final paper that data reflects estimated web presence. Collect multiple data points to analyze consistency (average and standard deviation).

4. Triangulate Your Metrics

Combine Google data with:

Literary citation frequency (academic papers, news, blogs)

Surveys/interviews with Tamil scholars

Appearance in school curricula or anthologies

This multipronged strategy offers richer, more reliable conclusions about each couplet's cultural relevance.



Conclusion: Search Wisely, Analyze Deeply

Google is a powerful but slippery tool for literary analysis. Alone, it risks misrepresentation. With rigor and triangulation, however, it can help shine new light on ancient wisdom like the Thirukkural—revealing how digital footprints mirror enduring textual resonance.

வெற்றியும் தோல்வியும் வீரனுக்கு விருந்து

ச.அய்யம்பிள்ளை,
மேனாள் பேராசிரியர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

கடவுள் எனக்கு மட்டுமே துயரம் தருகிறான் என்றும் கடவுள் எனக்குத் துயரத்தை மட்டுமே தருகிறான் என்றும் புலம்புபவர்களைக் கண்டு இருப்பீர்கள். துன்பம், துயரம், துக்கம், மகிழ்ச்சி, சந்தோசம், ஆனந்தம், இன்பம் போன்ற மன நிலைகள் பலவகை காரணிகளால் பாதிக்கப்படுகின்றன. சொத்து, வருவாய், உடல் நலம், நிறம், சாதி.......போன்ற புறக் காரணிகள் ஓரளவுக்கு மனநிலையைப் பாதிக்கக் கூடியவையாக இருந்தபோதிலும், அணுகுமுறை, மனத்திட்பம், ஆசை, கோபம், பொறாமை, வஞ்சம்.... போன்ற அகக் காரணிகள்தான் மன நிலையைப் பெரிதும் பாதிக்கின்றன. (அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்: குறள் 35)

பெரிய செல்வந்தர்களும், ஆணழகர்களும், பெண்ணழகிகளும், அரசு அதிகாரம் படைத்தவர்களும்கூட துன்பத்தையும், துயரத்தையும், துக்கத்தையும் கண்டுள்ளார்கள் என்பதை வரலாறு சொல்கிறது. வாழ்க்கை முழுதும் சந்தோசமாகவோ கவலையாகவோ யாரும் இருந்ததாகத் தெரியவில்லை. சில நாடுகளில், சில நாட்களில் இரவு நீண்டதாக இருக்கலாம் அல்லது பகல் நீண்டதாக இருக்கலாம். ஆனால், நம்முடைய நாட்டில் அவ்வளவு பெரிய வித்தியாசம் இல்லை. கோடை காலத்தில் (மார்ச் 20-21 தவிர) பகல் சற்றே நீளும்; மழைக் காலத்தில் (செப்டம்பர் 22-23 தவிர) இரவு சற்றே நீளும். நம்முடைய வாழ்க்கையையும் நாம் நினைத்தால், முயன்றால் எப்படி வேண்டுமானாலும் அமைத்துக்கொள்ளலாம்.

வெற்றியும் தோல்வியும் கூட அப்படித்தான். வாழ்க்கை முழுதும் வெற்றி பெற்றவர்களையோ, தோல்வியுற்றவர்களையோ காண முடியுமா? தோல்வியே காணாமல் வெற்றியை மட்டுமே கண்டவர்களைக் காண முடியுமா? அதுபோல, வெற்றியே காணாமல் தோல்வியை மட்டுமே கண்டவர்களைக் காண முடியுமா? பல தோல்விகளுக்குப் பின்னர் வெற்றி பெற்றவர்களும் உண்டு; பல வெற்றிகளுக்குப் பின்னர் தோல்வியுற்றவர்களும் உண்டு. இதற்கு வரலாற்றில் உள்ள எடுத்துக்காட்டுகள் எத்தனை எத்தனையோ; வரலாறு படிப்பது நிம்மதியையும் தரலாம். சமீபத்தில் வந்த UPSC தேர்வு முடிகளைப் பார்க்கும்போது பலர் நான்கு அல்லது ஐந்து முறை எழுதித்தான் வெற்றி பெற்றுள்ளார்கள் என்பதை அறியலாம். (இதில் கூடுதல் செய்தி என்னவெனில், தமிழில் எழுதிய அறுவரில், இருவர் வெற்றி பெற்றுள்ளனர்; இது ஒரு பெரிய சந்தோசப்பட வேண்டிய வெற்றி விகிதம் ஆகும். (“UPSC TN topper cleared test in 5th try, The New Indian Express, 23.04.2025, p.04”)

வெற்றி என்பது இன்பத்தைத் தரும் என்று சொன்னால், தோல்வி என்பது நிச்சயம் குறைந்தது ஒரு பாடமாவது புகட்டும். தோல்விக்கு என்ன காரணம் என்று அலச, தம்மிடம் என்ன குறை இருக்கிறது என்று ஆராய, ஒரு வாய்ப்பு நமக்குத் தோல்வி மூலம் கிடைக்கலாம். தம் சொந்த அனுபவம் மூலம், தோல்வி அடைந்தவர்களின் மன நிலை எப்படி இருக்கும் என்றும் அறியலாம். வெற்றி பெற்றதும், "அமைதியாக இரு; ஆட்டம் போடாதே; அடுத்து தோல்வியும் வரும்" என்றும் அறியலாம். *"Nothing is permanent; Law of change is the only thing which does not change"* என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். தோல்வி பெறவும் வாய்ப்பு இருக்கிறது என்று உணரும்போது கிடைக்கும் வெற்றி, இன்னும் அதிகமான மகிழ்ச்சியையும் தரலாம். இறப்பு என்பது கூட ஒரு தோல்விதான்; செல்வந்தர்களுக்கும் பேராசை பிடித்தவர்களுக்கும், அந்தத் தோல்வி, ஒரு பெரிய தோல்வியாகத் தோன்றலாம். ஆனாலும் அது நிச்சயம் நடக்கத்தான் போகிறது என்று அதற்குத் தயாராக மனதை மாற்றிக்கொண்டால், சோகம் கொஞ்சம் குறையும் அல்லவா? "நாளைக்கு என்னோடு வரப் போகிறவர்கள், இன்று என்னைத் தூக்கிக்கொண்டு வருகிறார்கள்; என்னைத் தூக்கும் அவர்களை யார் தூக்கப் போகிறார்களோ" என்று ஒரு பிணம் சொன்னதாம். "மௌத்தையே (மரணத்தையே) நீ மறக்கலாகுமா?" என்று ஒரு பாடல் உண்டு, எனவே, தோல்வியை, சோகத்தைத் தவிர்க்க முடியாது எனினும், அதன் தாக்கத்தை, பாதிப்பைக் குறைக்க முயற்சி செய்யலாம்.

என் பக்கத்துவீட்டு மாணவி, தன் தாயார் இறந்துவிட்ட அன்று, நடக்க இருந்த தேர்வை எழுதப் பள்ளிக்குச் சென்றாள். அந்த மாணவி, "என் தாயின் கனவை நனவாக்குவது என் கடமை அல்லவா? எனவேதான் நான் தேர்வு எழுதச் செல்கிறேன்" என்றாள். அந்த மாணவியின் வகுப்புத் தோழி, தன் பாட்டியுடைய அம்மா இறந்த அன்றிலிருந்து பதினாறு நாட்கள் பள்ளிக்கும் செல்லவில்லை; புத்தகத்தை எடுத்துப் படிக்கவும் இல்லை. "சோகமாக" இருக்கிறது என்று சொல்லிவிட்டு, "சுகமாக" வீட்டுக்குள்ளே இருந்துவிட்டாள். இதில் யார் செய்தது சரி? எது சோகம்? எது பாசம்? நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள்.

ஒருவர் துப்பாக்கி சுடுதல் போட்டியில் அவரைவிட வயதில் மூத்தவரை, தொடர்ந்து வென்றுகொண்டே இருந்தாராம். அதற்குக் காரணம், இளையவரின் கை விரல் எளிதாக, தேவையான அளவு, விரைவாக, பொருத்தமாக வளைந்து கொடுக்குமாம். சில ஆண்டுகள் கழித்து, இந்த தொடர்ந்து வெற்றிபெற்ற இளைஞரை, அவரைவிட குறைவான வயதுடைய ஓர் இளம்பெண், அதே துப்பாக்கி சுடுதல் போட்டியில் வென்றுகொண்டே இருந்தாளாம். தொடர்ந்து வெற்றிபெற்றுக்கொண்டு இருந்த ஆண், அடுத்தடுத்த தொல்விகளைக்கண்டு நொந்து விட்டாராம். அப்பொழுது அந்த இளம் பெண், "உங்களிடம் தொடர்ந்து தோற்றுக்கொண்டு இருந்த என் அப்பாவின் நிலை எப்படி இருந்திருக்கும்; அப்போதெல்லாம் என் நிலைமையும் எப்படி இருந்திருக்கும் என்று கொஞ்சம் எண்ணிப்பாருங்கள்" என்றாளாம். இன்பமோ, துன்பமோ, அதை நாமே அனுபவித்துப் பார்த்தால்தான் அதன் முழுமை நமக்குப் புலப்படும். அந்த அனுபவமும் ஓர் அவசியமான, தவிர்க்க முடியாத ஒன்றுதான் என்று எண்ணிவிட்டால், சோகம் கொஞ்சம் குறையும் அல்லவா? தொல்வியடைந்தவர்களை, அறிவில் சிறந்தவர்கள் துச்சமாக எண்ணிவிட மாட்டார்கள்.

உலகில் உள்ள உணவை எல்லாம் வாங்கி ருசித்துவிட முடியும் என்று சொன்ன ஒரு பெரிய செல்வந்தர், இறுதி நாட்களில் எதையும் சாப்பிட முடியாமல் பட்ட அவஸ்தை எப்படி இருந்திருக்கம்? இது பல இடங்களில், காலங்களில் நடந்துள்ளது; இதுதான் நடைமுறை என்று மனதை ஆறுதல் செய்துகொண்டால், கொஞ்சம் சோகம் குறையுமல்லவா? "இது சொல்வது

எளிது, கடைப்பிடிப்பதுதான் கடினம்" என்று நீங்கள் சொல்வது எனக்கும் புரிகிறது. "துன்பம் வரும் வேளையிலே சிரிங்க,..... பாம்பு வந்து கடிக்கையில் பாழும் உடல் துடிக்கையில் யார் முகத்தில் பொங்கிவரும் சிரிப்பு?" என்ற ஒரு திரைப்படப் பாடல் நினைவுக்கு வருகிறது எனக்கு. ஊருக்கு உபதேசம் செய்வது எளிது என்று சொன்னாலும், அப்படியே உபதேசம் செய்யும்போது, நம் மனதிற்கும் கொஞ்சம் உரைக்கும் அல்லவா? அதுதான் நம் நோக்கம்.

"காசு வரும் போது கர்வம் கொள்ளாதே; காசு இல்லையேல் கலங்காதே" என்று ஓர் ஏழையின் வீட்டுச்சுவரில் எழுதப்பட்டு இருந்ததைப் படித்துள்ளேன். பணம் எத்தனையோ குடும்பங்களில் குழப்பங்களை விளைவித்து, நிம்மதியையும் கெடுத்துள்ளது; அதையும் நாம் அறியவேண்டும்.

ஓர் எலிப்பொறிக்குள் இருந்த தேங்காய்ச் சில்லைத் தின்பதற்காக ஆசையோடு சென்று மாட்டிக்கொண்டால், அந்த எலி, தான் மாட்டிக்கொண்டதை அறிந்ததும் என்ன செய்யும்? அதன் விருப்பமான உணவாகிய தேங்காய்ச் சில்லு அருகில் இருந்தும், அதைத் தின்னாமல், இறப்பு வரப்போவதை எண்ணியபடி பயந்துகொண்டே உள்ளே கிடக்கும். சிறிய வெற்றியைத் தொடர்ந்து பெரிய தோல்வியும் வந்துவிட்டது. இப்படிப் பலர், ஆசையோடு அதிகப் பணம் கிடைக்கும் என்று எண்ணி "விளையாடி", குறுக்கு வழியில் விரைவில் மேலேவர முயன்று, நொந்து போகிறார்கள் என்று செய்திகள் வருகின்றன.

இங்கு ஒரு அனுபவத்தைப் பகிரலாம் என நினைக்கிறேன். ஓர் இளைஞன் ஒரு தனியார் துறையில் பதினைந்து ஆயிரம் ரூபாய் மாதக் கூலிக்காக வேலை செய்துகொண்டு இருந்தான். மாதம் முப்பது ஆயிரம் உதவித்தொகையுடன் முனைவர் பட்ட ஆய்வுக்கான படிப்பைச் செய்து கொண்டு இருந்த அவனுடைய நண்பன், இங்கு வந்தால் நீயும் இப்போது பெறுவதைவிட இரண்டு மடங்கு பணமும் பெற்று, முனைவர் பட்டமும் பெற்று நல்ல வேலையும், உயர்ந்த சமூக அந்தஸ்தும் பெறலாம் என அவனுக்கு அறிவுரை கூறினான். ஆனால் அவனோ, நான் இங்கு இளமையான பெண் தோழிகளுடன் சந்தோசமாக இருக்கிறேன்; உன்னுடன் வந்தால் இந்த சந்தோஷம் இருக்காதே என்றான். சில ஆண்டுகள் நகர்ந்தன; பெண் தோழிகள் கொடுத்த சந்தோசம் குறையத் தொடங்கியது; பணத்தின் முக்கியத்துவம் புரிய ஆரம்பித்துவிட்டது; ஆனால் காலம் கடந்துவிட்டது. இவரைப் போல், பலரை நான் பார்த்திருக்கிறேன். இளம் வயது ஆனந்தத்தில், எளிதான பாதையைத் தேர்வு செய்துவிட்டு, இரண்டு ஆண்டுகளிலேயே, தாம் செய்த தவறை எண்ணி, பல ஆண்டுகள் புலம்பிக்கொண்டு இருக்கிறார்கள்.

இன்றைய இளைஞர்கள் பற்றி நிறையப் படிக்கிறோம். பெரும் சாதனைகள் நிகழ்த்தியவர்களையும் காண்கிறோம்; சமீபத்தில் அட்சயா, கீர்த்தனா மற்றும் கீர்த்தி லக்ஷ்மி *(Atchaya, Keerthana, Keerthi Lakshmi)* ஆகியோரின் வெற்றிகளைக் கண்டு நான் ஆனந்தம் அடைந்தேன். *(Jose K Joseph, Tiruchi corpn's study centres help four crack TNPSC exams, bag state govt jobs, The New Indian Express, 18.03.2025, p.05)*. அவர்களின் பெற்றோர்கள், பெரிய செல்வந்தர்களாகவோ, கல்வியாளர்களாகவோ தெரியவில்லை. ஆனால், எனக்கு என்ன வருத்தம் எனில், இதே போன்ற, அல்லது இதைவிட நல்ல, சமூக - பொருளாதாரப் பின்புலம் கொண்டவர்களின் பிள்ளைகளில் பலர், சரியான பாதையை விட்டு விலகி, எங்கோ சென்றுகொண்டு இருக்கிறார்கள் என்பதுதான்.

பிஞ்சிலே பழுத்து வீணாய்ப் போகிற இளைஞர்களையும் காண்கிறோம். *(Unnikrishnan S, Adolescence unravelled: Navigating the storm of teenage struggles, The New Indian Express, 08.04.2025, p.12; and Praneet Mungali, Beyond the college, The Hindu, 07.04.2025, p.14)*. இதற்கு யார் யார் காரணம் என்று ஆராய இங்கு இடம் இல்லை. ஆனாலும், தாமும் காரணம் என்பதை நாம் அறியவேண்டும்.

ஆனால், இதை உணராமலேயே, பலர் தன் தோல்விகளுக்குப் பிறரை குற்றம் கூறுவதையும், தன் வெற்றிகளுக்குத் தான் மட்டுமே காரணம் என்று பெருமை கொள்வதையும் காணலாம்.

தோல்வி என்ற ஒன்று வந்துவிடவே கூடாது என்று எண்ணுகின்ற இளைஞர்கள் பலர்; அவர்கள், எதை எடுத்தாலும் சிரமம் என்று சொல்லி, எளிதான, குறுக்குப் பாதைகளையே நாடுகின்றனர். அவர்களுடைய தேடுதலே, சிரமமே இல்லாமல், இருப்பதிலேயே எந்தப் படிப்பு, எங்கு படிப்பது எளிது, எதில் நிறைய மதிப்பெண்கள் பெற முடியும், எப்படி எளிதாக, விரைவாக, நிறையப் பணம் சம்பாதிக்கலாம் என்பனதான். சுருங்கக் கூறின், நோகாமல் நுங்கு தின்ன ஆசைப்படுகின்றனர். ஓரிரு குழந்தைகளை மட்டும் வைத்திருக்கும் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகள் எந்தவித சிரமத்தையும் அனுபவிக்கக்கூடாது என்று ஆசைப்பட்டு, தம் குழந்தைகளுக்குச் செல்லம் கொடுத்து, குழந்தைகள் செய்ய வேண்டிய கடமைகள் அனைத்தையும்தாமே செய்து, அவர்களைச்சோம்பேறிகளாகவும், உலகம் தெரியாதவர்களாகவும் ஆக்கி விடுகின்றனர். பிள்ளைகள் கேட்கும் முன்பே கொடுத்துவிடத் துடிக்கும் பெற்றோர்களும் இருக்கின்றனர். உதாரணத்திற்கு, பிள்ளைகள் பசி, தாகம் உணரும் முன்பே, உணவையும், தண்ணீரையும் கொடுப்பவர்களும் இருக்கின்றனர். தம் பிள்ளைகள் சிறு சிறு பிரச்சனைகளைக்கூட எதிர்கொள்ளக்கூடாது என்று சொல்லி செயல்படுபவர்களும் இருக்கின்றனர். எனவே, சிறு சிறு தோல்விகளைக்கூட எதிர்த்து நிற்கத் தெரியாமல், பழகாமல், பயந்து ஓடி, பின்னர் பெரிய தோல்விகளைச் சந்திக்கின்றனர்; தோல்விகளை வென்று பழகிக் கொள்ளாததால், அவற்றிலிருந்து வெளியே வர முடியாமலும் திண்டாடுகின்றனர்.

பெற்றோரின் பணத்தைக் கொண்டே எல்லாவற்றையும் (பல்கலைக்கழகப் பட்டங்கள், வேலை, சொகுசு...) பெற்றிடலாம் என்கிற எண்ணம், பல இளைஞர்களிடம் இருப்பதை நான் பார்க்கிறேன். (அது மிகச் சில இடங்களில், சரியென்று சொல்லும்படிதான் இன்று நிலைமையும் உள்ளது) ஆனால், பிரச்சனைகளும் வருகின்றன. நானறிந்த மாணவர்களில் இரண்டு வகையினரை இங்கு பார்க்கலாம். சிலர், தீவிரமாகப் படித்து, சிறு சிறு வே(வ)லைகளுக்குள் மாட்டிக்கொள்ளாமல், பெரிய மீன் வரும்வரைக் காத்திருக்கும் கொக்கைப் போலச் செயல்படுகின்றனர்; ஆனால், பலர், எளிதாக எதையாவது படித்து, ஏதேனும் ஒரு வேலையைப் பெற்று, சந்தோசமாக வாழ நினைத்து, விரைவிலேயே தாம் செய்த தவறை உணர்ந்து, அதிலிருந்து மீள முடியாமல் தவிக்கின்றனர். இதுவரை உள்ள புள்ளிவிவரங்களின்படிப் பார்த்தால், பயிற்சி, திறன் ஆகியவற்றுக்கும் சமூக, பொருளாதார அந்தஸ்திற்கும் இடையே உறுதியான நேரிடை உறவு இருக்கத்தான் செய்கிறது; ஆனாலும், நானறிந்த பல இளைஞர்கள், இதை நம்பத் தயாராக இல்லை; குறுக்கு வழிகளையே நம்புகின்றனர்; தம் தவறை உணராமலேயே இருக்கின்றனர்; அவர்கள் தவறை உணரத் தொடங்கும்போது, காலம் கடந்துவிடுகிறது; ஆப்பசைத்த குரங்காக மாட்டிக்கொள்கின்றனர்.

"உழைத்துப் பிழைக்க வேண்டும் என்ற உறுதியான எண்ணம் வேண்டும்; ஏமாற்றிப் பிழைக்கலாம் என்ற எண்ணம் சிறிதும் கூடாது" என்பதைக் குடும்பத்தில் உள்ள பெரியவர்கள் தம் செயல்கள் மூலம் இளைஞர்களுக்குக் காட்டவேண்டும். முன்னேற என்ன வேண்டும் என்று கேட்டால், முதலில் முன்னேற எண்ண வேண்டும்; மேலும் நல் எண்ணம் வேண்டும். அதற்கு, நல்லவர்களைச் சந்திக்க வேண்டும்; நன்றாகச் சிந்திக்க வேண்டும். எனவே, மீண்டும் சந்திப்போம்; சிந்திப்போம்.

பாரதியும் பைந்தமிழ்ப் புலவர்களும்

பேராசிரியர் முனைவர் மு. முத்துவேலு
முதல் பதிவாளர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் , சென்னை.

“பாரதி யார்? அவன் தமிழென்னும் அமுதுண்ட தனி முழு மனிதன்” இதுதான் பாரதியைப் பற்றி நான் மனப்பாடம் செய்த முதல் தொடராகும். எட்டாம் வகுப்பு மாணவனாக இருந்த எனக்குப் பாரதியார் பேச்சுப் போட்டியில் கலந்து கொள்வதற்காக என் பள்ளி ஆசிரியர் எழுதி வழங்கிய பேச்சுப் போட்டிக்கான உரையின் தொடக்கமே இந்த வரி.

அது முதல் பாரதியின் கவிதைகளைப் படித்து இன்று வரை தொடர்ந்து பாரதியோடு நான் பயணம் செய்து வருகிறேன். பாரதியோடு சில இடங்களில் கருத்து முரணும் எனக்கு உண்டு.

“சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே அதைத் தொழுது படித்திடடி பாப்பா” என்று வளரும் பருவத்து இளம்பிள்ளைகளுக்கும் இனிய தமிழை எடுத்து ஓதியவன் பாரதி. தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார் இங்கு அமர் சிறப்புக் கண்டார் என்று அமுதத் தமிழின் இனிமையை அனைவருக்கும் எடுத்துரைத்தவர் பாரதி. எனவே தான்,

“பாட்டுக்கொரு புலவன் பாரதியடா அவன்
பாட்டைப் பண்ணோடு ஒருவன் பாடினானடா

கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனடா” என்று பாரதியின் பாட்டின் சுவையைக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை வியந்து பாராட்டுகிறார்.

“பாட்டுக்கொரு புலவன், பைந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை
நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா

காடு மணக்க வந்த கற்பூர சொற்கோ” என்று பாவேந்தர் பாரதிதாசன் பலவாறு பாரதியைப் பாராட்டி மகிழ்கிறார். பைந்தமிழைப் பாமரருக்கும் விருந்தாகப் பரிமாறியவன் தான் பாட்டுக்கொரு புலவன் பாரதி.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்

என்று பாரதி பாடியதைத் தொடர்ந்து பாவேந்தர் பாரதிதாசனும்,

இனிமைத் தமிழ்மொழி எமது எமக்கு இன்பம் தரும் படி வாழ்த்த நல்அமுது

என்று பாடி மகிழ்ந்தார்.

எளிய சொற்கள்; எல்லோரும் புரிந்து கொள்ளும் எளிய நடை இவற்றில் காப்பியம் படைத்த தமிழ்க் கவிஞன் பாரதி.

தண்டமிழ் இலக்கிய வரலாற்றில் பாரதி கொண்டாடிய புலவர்களில் குறிப்பிடத்தக்கவர் மூவர்.அவர்கள், கம்பன், இளங்கோ, வள்ளுவர் ஆவர்.

இந்த மூவரைப் பற்றியும் தம் படைப்புகளில் பாரதி பல இடங்களில் பதிவு செய்துள்ளார்.

தமிழ்நாட்டைப் பற்றிப் பாடும் போதும் பாரதி,

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே"

என்று தேன் போன்ற தமிழின் சுவை அந்நாட்டின் பெயரைச் சொல்லுகிற பொழுதும் செவியில் வந்து ஆறாகப் பாய்வதை அகமகிழ்ந்து கூறுகிறார்.

தமிழ்நாட்டின் சிறப்புகளைக் கூறுகிறபோது ,

" கல்வி சிறந்த தமிழ்நாடு – புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு

என்று கம்பனை வாழ்த்துகிறார்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே- தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு -நெஞ்சை
அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர்- மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு"

என்று வள்ளுவனை உலகப்பெரும் கவியாகக் கண்டு உவகை பூத்து நிற்கிறார். மூவா முத்தமிழில் முதல் காப்பியம் படைத்த இளங்கோவின் சிலப்பதிகாரத்தைப் சிறப்பித்துப் பாடுகிறார்.

செந்தமிழ் நாடென்னும் இப்பாடலில் முதலில் கம்பனையும் பின்பு வள்ளுவனையும் நிறைவாக இளங்கோவையும் வரிசைப்படுத்திக் காட்டுகிறார் பாரத.

. தமிழச்சாதி என்னும் தலைப்பில் அமைந்த பாரதியின் பாடலில் என்றுமுள தென்றமிழ் என்றும் இளமையோடும் இறவாப் புகழோடும் திகழும் என்பதில் முழுமையான நம்பிக்கை உடையவர் பாரதி. அந்த நம்பிக்கைக்குக் காரணமாக அவர் கூறுகிற தமிழ் இலக்கியங்கள் மூன்று. அவற்றை அவர் வரிசைப்படுத்தி இருக்கும் விதத்தை பின்வருமாறு காணலாம் :

"சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும் திருக்குறள் உறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும் 'எல்லையொன்றின்மை' எனும் பொருள் அதனைக்
கம்பன் குறிகளாற் காட்டிட முயலும் முயற்சியைக் கருதியும் "

என்று அமைத்துக் காட்டுகிறார். இந்த இடத்தில் பாரதி சிலப்பதிகாரத்தை முதலிலும் வள்ளுவனின் சிறப்பை இரண்டாம் இடத்திலும் கம்பனின் மெய்யியல் சிறப்பை மூன்றாம் இடத்திலும் வரிசைப்படுத்தி உள்ளார்.

எனவே பண்டைத் தமிழ்ப் புலவர்களில் பாரதியின் உள்ளத்தை கவர்ந்தவர்கள் இளங்கோவும் கம்பனும் வள்ளுவரும் என்பது உறுதியாகிறது..

ஆனால் இந்த மூவர் பற்றியும் பாரதி வரிசைப்படுத்துகிற பொழுது எல்லா இடங்களிலும் அந்த வரிசை முறையை ஒரு சீர்மையாகப் பின்பற்றவில்லை. இவர் இந்த மூன்று புலவர்களையும் முன்பின்னாக முறை மாற்றி அமைத்திருக்கிறார்.

புலவர்களின் பெயரைச் சொல்லி குறிப்பிடுகையில் அந்த வரிசை முறை வேறு மாதிரியாக அமைகிறது.

> ." யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமி தன்னில் யாங்கணுமே பிறந்ததில்லை

உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை."

பாரதி யாமறிந்த தமிழ்ப் புலவர்களிலே என்று குறிப்பிடாமல் யாமறிந்த புலவர்களிலே என்று குறிப்பிட்டு இருப்பது இங்கு உற்று நோக்கத்தக்கதாகும். பாரதிக்கு வடமொழி இலக்கியங்களிலும் பயிற்சி உண்டு. தன் பாடல்களில் காளிதாசனையும் பாணினியையும் குறிப்பிட்டுள்ள பாரதி ஆங்கில இலக்கியங்களிலும் ஈடுபாடு உடையவர். தன்னை

ஷெல்லி தாசன் என்று கூறும் அளவிற்கு ஆங்கில இலக்கியங்களில் பயிற்சி உடையவர். எனவே வடமொழி இலக்கியங்களிலும் ஆங்கில இலக்கியங்களும் பயிற்சி உடைய பாரதி யாம் என்று தனிமைப் பன்மையில் உறுதியாக கூறுகிற இந்த இடத்தில் அவருக்கு அறிமுகமானஅனைத்துமொழிப்புலவர்களில்அருந்தமிழ்புலவர்களானஇம்மூவரையும் அவர் உயர்த்திக் கூறியிருப்பது, பெருமைக்குரிய செய்தியாகும்.

ஈராயிரத்து ஐநூறு ஆண்டுகளாக இடையறாத இலக்கிய வளமுடைய தமிழ் மொழியில் பாரதி இந்த மூவரை வரிசைப்படுத்தி இருக்கிற காரணத்தை அறிந்து கொள்வதற்கு நான் வெகு நாளாக ஆர்வம் உடையவனாக இருந்தேன்.

தமிழ் இலக்கிய கால வரலாற்றின் படி இந்த மூவரையும் வரிசைப்படுத்துவதாக இருந்தால் வள்ளுவன், இளங்கோ கம்பன் என்ற முறையில் தான் வரிசைப்படித்திருக்க வேண்டும்.

ஆனால்பாரதியோகம்பன்,இளங்கோ வள்ளுவன்என்று முறை மாற்றி வரிசைப்படுத்தி இருக்கிறார்.

மகாகவியான பாரதியின் வரிசை முறைக்கு ஒரு அழுத்தமான காரணம் இருந்திருக்க வேண்டும். அதனை என்னவென்று அறிந்து கொள்வதில் பலருக்கும் ஆர்வம் இருக்கும்.

எனினும் அந்தத் தேடலுக்கு விடையாக அமைந்தது தான் 10.6 2025 அன்று சென்னை ஒய் எம் சி ஏ பட்டிமன்றத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி ஆகும்.

நானிலம் போற்றும் மாநிலக் கல்லூரித் தமிழ் துறையின் தலைவராக திகழ்ந்த பேராசிரியர் பாண்டுரங்கனின் நினைவு நாளை ஒட்டி நடைபெற்ற நிகழ்வில் மாநிலக் கல்லூரியின் மேனாள் பேராசிரியரும் பாவேந்தர் பாரதிதாசன் வழிவந்த பைந்தமிழ்க் கவிஞருமான பொன் செல்வ கணபதி அவர்கள் இந்தத் தேடலுக்கு விடை தந்தார்.

இந்த வரிசை முறைக்குக் காரணத்தை மாணவர் ஒருவர் வகுப்பில் வினவினார் என்றும், அந்த வினாவிற்கு விடை காண்பது குறித்துத் துறையில் பேராசிரியர்களோடு உரையாடிக் கொண்டிருந்த பொழுது,இந்த வினாவிற்குப் பாரதியே தன் பாட்டில் விடையைப் பதிவு செய்திருக்கிறார் என்று பேராசிரியர் பாண்டுரங்கனார் எடுத்துரைத்ததைக் கூறினார் பொன் செல்வ கணபதி அவர்கள்.பேராசிரியர் பாண்டுரங்கனார் பாரதியின் பாடலில் விடை இருக்கிறது என்று கூறினாரே அன்றி அந்த விடை என்ன என்பதை அவர் விளக்கமாக எடுத்துரைக்கவில்லை. ஆனால் பேராசிரியர் பொன் செல்வகணபதி அவர்கள் இதனைத் தொடர்ந்து தன்னுடைய நுண்மான் நுழைபுலத்தால் இதற்கு விடை காண முற்பட்டு விடையையும் கண்டறிந்து தெரிவித்ததாகக் கூறினார். அந்த விடையை அன்று மேடையிலும் தெரிவித்தார்.



இந்த மூவரை வரிசைப்படுத்தும் அந்த பாரதியின் பாடலில் அடுத்து வருகிற சரணங்களில் இதற்கான விடை அமைந்திருக்கிறது.

கம்பன், இளங்கோ, வள்ளுவன் என்ற மூவரும் தமிழ் இலக்கியத்திற்கு வழங்கிய கொடைகளின் தன்மையை நாம் உற்று ஆராய்ந்தால் இந்த வினாவிற்கு விடை கிடைக்கும்.

கம்பன் வடநாட்டு வடமொழியில் இருந்த மாபெரும் காப்பியத்தைத் தமிழ் மொழிக்கு மொழிபெயர்த்துக் கொடுத்தான்.

இளங்கோ அதுவரையில் தனிப்பாடல்களாக இருந்த சங்கப் பாடல்களில் இருந்து தொடர்நிலைச் செய்யுள் எனும் புதுமையான காப்பிய வடிவத்தைத் தமிழுக்கு தந்தான்.

வள்ளுவனின் படைப்பு வான் புகழ் கொண்டது. உலக மக்கள் எல்லாம் ஏற்றுப் போற்றுகிற பெருமையைத் தமிழகத்திற்குத் தேடித் தந்தது

இப்போது பாரதியின் பாடலைக் காண்போம்..

> “ *பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்தல் வேண்டும்*
> *இறவாத புகழுடைய புது நூல்கள்*

தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும் மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கம் செய்தல் வேண்டும். “

செந்தமிழைச் செழுந்தமிழாக ஆக்குவதற்கு இந்தப் பாடலில் பாரதி மூன்று திட்டங்களை நமக்கு வகுத்தளித்துள்ளார்.

முதலில் பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும் என்பதாகும்:

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் என்ற வகையில் வடமொழியில் இருக்கிற இராமாயணத்தைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறான் கம்பன். எனவே அவர் வகுத்துத் தந்த முதல் திட்டத்திற்கு எடுத்துக்காட்டைச் சொல்வதற்காகவே முதலில் கம்பனை அவர் வைத்திருக்கிறார்.

இரண்டாவதாக அவர் வகுத்துத் தந்த திட்டமானது இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும் என்பதாகும். இந்தத் திட்டத்திற்கும் எடுத்துக்காட்டாக இறவா புகழுடைய தமிழ் இலக்கிய வரலாற்றில் அதுவரை இல்லாத காப்பியம் என்னும் புதுவகை நூலை இளங்கோ இயற்றிருக்கிறார். எனவே இரண்டாவது திட்டத்திற்கு எடுத்துக்காட்டாக இளங்கோவைக் காட்டி இருக்கிறார்.

மூன்றாவதான, திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக தமிழரின் அறிவுத் திறன்களுக்கு எல்லாம் ஒட்டுமொத்த அடையாளமாக இருக்கிற திருக்குறளை உலகம் முழுவதும் ஏற்று வியந்து பாராட்டி வருகிறது. எனவே மூன்றாவது திட்டத்திற்கு வள்ளுவனை அவர் காட்டியிருக்கிறார்.



கம்பனையும் இளங்கோவையும் வள்ளுவனையும் வரிசைப் படுத்திய பாரதி தன்னுடைய வரிசை முறைக்கான காரணத்தைத் தன்னுடைய பாட்டிலேயே பதிவு செய்திருக்கிறார் என்ற ஒரு விடையைப் பேராசிரியர் பொன் செல்வகணபதி அவர்கள் தம்முடைய உரையிலே வழங்கிய பொழுது அரங்கமே வியந்து மெய்மறந்து கேட்டது.

பாரதியின் இந்தப் பாடல்களை எத்தனையோ முறை படித்திருந்தாலும் இப்படி ஒரு சிந்தனைத் தெளிவினை இதுவரை யாரும் உணர்ந்ததில்லை. எனவே இதுவரையில்

யாரும் தெரிவிக்காத ஒரு சிந்தனைத் தெளிவை,தேடலுக்கான விடையைப் பேராசிரியர் பொன். செல்வ கணபதி அவர்கள் உரையிலே கேட்ட பொழுது வியந்து மகிழ்ந்தேன்.

இதுகுறித்துச் சிந்தித்த பொழுது பாரதி இந்த வரிசை முறைக்கு இப்படி ஒரு காரணமும் இருக்கலாமா என்றும் நான் எண்ணிப் பார்த்தேன்.

பாரதி இந்த மூன்று புலவர்கள் இயற்றிய பாடல்களின் எண்ணிக்கையை வைத்து அவர்களை வெளிப்படுத்திருக்க கூடுமோ என்ற எண்ணமும் என்னுள் தோன்றியது. அந்த வகையில் பார்க்கிற பொழுது பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களை இயற்றிய கம்பனை முதலிலும் ஐயாயிரம் அடிகளுக்கு மேல்இயற்றிய இளங்கோவை அதற்கு அடுத்தபடியாகவும் 1300 குறள்கள் மட்டுமே இயற்றிய வள்ளுவனை மூன்றாவதாகவும் வைத்திருப்பானோ என்று எண்ணவும் எனக்குத் தோன்றியது. ஆனால் இது முற்றிலும் பொருத்தமற்றது என்பதை என்னுடைய அறிவு எனக்குச் சுட்டிக்காட்டியது.

தமிழகத்து தேசியவாதிகளில் ஒரு சிலர் இந்த வைப்பு முறைக்கு தங்களுடைய தேசியப் பார்வை என்னும் கண்ணாடி அணிந்த தங்கள் கண்ணோட்டத்தோடு ஒரு காரணத்தைச் சொல்லி வந்திருப்பதைச் சிலர் அறிந்திருக்க கூடும். கம்பனை இந்திய தேசியத்திற்கும், இளங்கோவைத் தமிழ் தேசியத்திற்கும், வள்ளுவனை உலக தேசியத்திற்கும் அடையாளமாகப் பாரதி காட்டியிருக்கிறான் என்பது அவர்கள் கூற்றாகும். இந்தக் கூற்றும் அறிவுக்குப் பொருத்தமாக அமையவில்லை என்பது உண்மையாகும்.

எனவே, பேராசிரியர் பொன் செல்வகணபதி அவர்கள் கண்டறிந்து வெளிப்படுத்திய பைந்தமிழ்ப் புலவர் வரிசையைப் பாரதி வைத்த வைப்பு முறைக்கான காரணம் தான் சரியானது என்றும், அது பாரதியின் பாடலிலேயே வெளிப்பட்டுள்ளது என்பதும் பொருத்தமுடையவை என்று தெளியலாம்.

தமிழ் மன்னர்களின் கப்பல் பொறிக்கப்பட்ட நாணயங்கள்

அண்ணாமலை சுகுமாரன்

சங்ககாலத்திய தமிழர் கடற்செலவில் தேர்ந்தவர்களாக விளங்கினர். கடல் கடந்து உலகின் பல நாடுகளுக்கும் சென்றுள்ளனர். திரும்பியும் வந்துள்ளனர்

வங்காளவிரிகுடா அவர்களுக்கு ஒரு ஏரியாகநினைக்கத்தக்க விதத்தில்அவர்களுக்கு இருந்திருக்கிறது '

நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டிவளிதொழில் ஆண்ட உரவோன் மருக'
(புறம் 66)'
சினம் மிகு தானை வானவன் குடகடல்
பொலம்தரு நாவாய் ஓட்டிய அவ்வழிபிறகலம் செல்கலாது' புறம் 126)

என்பன அவர்களின் கடல் சார் திறமைக்கான சில சான்றுகள்

பருவக் காற்றின் பயன் தெரிந்து 2000 ஆண்டுகட்கு முன்பு தமிழர் 'கப்பலோட்டிய' வல்லமைமிக்கத தமிழர்களாக வாழ்ந்துள்ளனர் என்பதை 'வளிதொழில் ஆண்ட' என்ற தொடர் சிறப்புடன் விளக்குகிறது.

ஆனால் அந்த சங்க காலத்தைச் சார்ந்த சாதவாஹனர்களும் [c.270 BCE – 220 CE], பல்லவர்களும்[275CE–897CE] கப்பல் பொறிக்கப்பட்ட நாணங்களைஉபயோகப்படுத்தினர் என்பது அத்தகைய நாணயங்கள் கிடைத்ததில் இருந்து தெரிகிறது

.தமிழகத்தில் எந்த அரசனும் கப்பல் பொறிக்கப்பட்ட நாணயத்தை வெளியிடவில்லை. போலும் சோழர்கள், கப்பற்படை நடத்தி கங்கை-கடார தேசங்களையெல்லாம் வெற்றிக் கொண்டாலும், அவர்கள் கப்பல் பொறித்த நாணயத்தை வெளியிடாதது வியப்பாகவே இருக்கிறது.அல்லது அத்தகைய நாணயங்கள் இங்கு கிடைக்காததால் வெளியிடவே இல்லை என்றும் குறிப்பிட இயலாது

இங்கு அரிக்கமேட்டிலும் வேறு இடங்களிலும் அயல் நாட்டு நாணயங்கள் கிடைப்பது போல நாம் அந்தக்காலகட்டத்தில் தமிழர் சென்றதாக நம்பப்படும் அயலகத் துறைமுகங்களில் தேடினால் கிடைக்கக்கூடும் .

.அண்மைக் காலத்தில் மேற்கு நாடுகளிலும், கிழக்கு நாடுகளிலும் சங்ககாலச் சான்றுகள் பல கிடைத்துள்ளன. எகிப்து நாட்டில் நைல்நதிக் கரையில் உள்ள 'குவாசிர் அல் காதிம்' என்னும்ஊரில்அமெரிக்கநாட்டுத்தொல்லியல்ஆய்வாளர்கள்நடத்தியஅகழ்வாராய்ச்சியில் கண்ணன், சாத்தன் என்ற சங்ககாலத் தமிழி எழுத்துப் பொறிப்புக்கள் கிடைத்துள்ளன.

எகிப்து நாட்டில் செங்கடல் பகுதியில் லெய்டன் பல்கலைக்கழகத்தார் நடத்திய அகழ்வாராய்ச்சியில் 'கொற்ற பூமான்' என்ற சங்ககாலத் தமிழி எழுத்துக்கள் பொறித்த மதுச்சாடி கிடைத்துள்ளது.

இவையிரண்டும் கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த எழுத்துப் பொறிப்புக்கள் ஆகும்.

வியன்னா அருங்காட்சியகத்தில் உள்ள 'பேபிரஸ்' எனப்படும் பண்டைய தாளில் எழுதப்பட்ட கி.பி. முதல் நூற்றாண்டு ஆவணத்தில் முசிறி வணிகன் ஒருவன் கப்பலில் ஏற்றிச் சென்ற வாசனைப் பொருள், தந்தப் பொருள், துணிகள் பற்றிய செய்திகளும். அவற்றின் எடையும் கூறப்பட்டுள்ளது. ஒரு கப்பலில் 150 வணிகரின் பொருள்கள் இருந்தன என்று கூறப்பட்டுள்ளது.

தாய்லந்து நாட்டில் கிளாங்தோம் நகரில் நடத்திய அகழாய்வில் சோழரின் சதுர வடிவான புலிபொறித்த ஒரு செப்புக்காசும், 8 x 4 செண்டி மீட்டர் அளவுள்ள தங்கம் மாற்றுரைத்துப் பார்க்கும் பட்டைக்கல் 'பெரும்பத்தன் கல்' என்ற சங்ககாலத் தமிழிப் பொறிப்போடு கிடைத்துள்ளது.

இந்த அயல்நாட்டுச் சான்றுகள் அனைத்தும் 2000 ஆண்டுகட்கு முற்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.-இவ்வாறே தமிழ் மன்னர்களின் க்ப்பல் பொறிக்கப்பட்ட நாணயங்கள் கிடைக்குமென நம்புவோம்

அண்ணாமலை சுகுமாரன் 21/3/18 Repost 3/6/2021 From the hospitL REPOST 3/6/2025

படம் இணையத்தில் இருந்து நன்றியுடன் பெற்றது நாணயத்தில் இருப்பது தமிழரின் பாய்மரக்கப்பல் எனும் தோணி

தவறின்றித் தமிழ் எழுதுவோம்.

டாக்டர் புதேரி தானப்பன்
டில்லி

தமிழ் அறிஞர்ப் பெருமக்களே, தமிழ்ப் பேராசிரியர்ப் பெருமக்களே, தமிழ் ஆசிரியர்ப் பெருமக்களே, தமிழ் ஆர்வலர்களே, நீங்கள் செல்பேசியையும் கணினியையும் பயன்படுத்துவோராக இருப்பின் புலனங்களிலும் முகநூல்களிலும் இணையதளங்களிலும் படவரிகளிலும் கீச்சகங்களிலும் இன்ன பிறவற்றிலும் தமிழ் படும் பாட்டை நன்கு அறிந்திருப்பீர்கள்!

எழுத்துப் பிழைகள், மாற்றெழுத்துகள், ஒற்றுப் பிழைகள், சொற்றொடர்ப் பிழைகள், ஒருமை பன்மைப் பிழைகள், பிறமொழிச் சொற்களைத் தமிழில் எழுதுதல், தமிழ் மொழியை ஆங்கிலத்தில் எழுதுதல் போன்ற ஏராளமான இன்னல்களுக்குத் தமிழன்னை ஆளாகித் தத்தளித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து உங்கள் மனம் சொல்லொணா வேதனையுறுவதை உணர்ந்திருப்பீர்கள்.

தமிழர்களாகிய நாம் நமது தமிழ் மொழி மீது சிறிது அக்கறை செலுத்தினால் தமிழர்கள் அனைவருமே நல்ல தமிழில் எழுதித் தமிழ் அன்னைக்குப் பெருமை சேர்க்க முடியும்.

நல்ல தமிழா? அப்படியென்றால் கெட்ட தமிழ் என்று ஒன்று இருக்கிறதா என்னும் ஓர் வினா எழுவது இயற்கை. கெட்ட தமிழ் என்று ஒன்று இல்லை. ஆனால் தவறாக எழுதக் கூடிய, தவறாக படிக்கக்கூடிய, தவறாக பேசக் கூடிய தமிழ் எதுவும் நல்ல தமிழ் ஆகாது. நம்மில் பலரும் பள்ளியில் படிக்கும் போது ஏனோதானோ என்று ஆசிரியர் சுட்டிக்காட்டும் பகுதிகளை மட்டும் மனனம் செய்து, போதுமான மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சியும் பெற்று விடுகின்றனர். ஆனால் கல்லூரிப் படிப்புக்குப் பிறகு அல்லது ஏதேனும் ஒரு தொழிற் படிப்புக்குப் பிறகு, தமிழ் நூல்களைத் தொட்டுக்கூடப் பார்ப்பதில்லை. அதனால் பின்நாளில் அவர்கள் தமிழைச் சரியாகப் படிக்கவும் எழுதவும் முடியாமல் தவிக்கின்றனர். ஒற்றுப் பிழைகள், சொற்றொடர்ப் பிழைகள், ஒருமை பன்மைப் பிழைகள், லகர, ளகர, ழகர, யகரப் பிழைகள் போன்ற பிழைகள் அவர்களுக்குத் தாராளமாக ஏற்படுகின்றன.

தற்காலத்தில் தமிழ் மொழி என்பது நமது தாய் மொழி என்னும் உணர்வும் அதனைப் பேணிக் காப்பது நமது கடமையாகும் என்பதையும் அறியாமல் தமிழை ஒரு பொருட்டாகவே மதிக்காத தன்மையும் நீடிக்கிறது. எந்த மொழியைப் படித்தால் ஏராளமாகப் பொருளீட்ட முடியும் என்ற கோணத்திலேயே பிள்ளைகளைப் பெற்றோர் பள்ளியில் சேர்த்து விடுகின்றனர். எந்த ஒரு குழந்தையும் , "நான் இந்திதான் படிப்பேன்; ஆங்லம்தான் படிப்பேன்; தமிழ் படிக்க மாட்டேன்" என்று அடம் பிடிப்பதில்லை. எல்லாப் பெற்றோரும் தங்களுடையமகிழ்சிக்காகவும பெருமைக்காகவுமேதங்களதுகுழந்தைகளுக்கான மொழியையும் பாடங்களையும் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்தக் குழந்தைகள் தமது தாய்மொழி, தாங்கள் படிக்கும் பிறமொழி இரண்டிலுமே தேவையான தகுதியை வளர்த்துக் கொள்ள முடியாமல் தவிக்கின்றன. அதனால் அந்தக் குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கை பாழ்பட்டுப் போய்விடுகிறது.

பல தொல்லைகளை எதிர்கொண்டுத் தமது குழந்தைகளின் எதிர்காலமே தங்கள் மகிழ்ச்சி என்பதை மனதில் கொண்டு ஏராளமாகச் செலவு செய்து, சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துப் பிள்ளைகளைப் பெற்றோர் படிக்க வைக்கின்றனர். ஆனால் பெரும்பாலான பிள்ளைகள் படித்து முடித்து, ஒரு வேலைக்குச் சென்று பொருளீட்டத் தொடங்கியதும் பெற்றோரை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. இதற்குக் காரணம் அன்பு என்றால் என்ன என்று அவர்களுக்குத் தெரிவதில்லை. பெற்றோர் வேண்டாம்; சொந்த பந்தங்கள் வேண்டாம்; அக்கம் பக்கத்தார் வேண்டாம் என்று எல்லோரையும் புறந்தள்ளிவிட்டு, யாரைப் பற்றியும் எதைப் பற்றியும் இந்தச் சமுதாயத்தைப் பற்றியும் கவலைப்படாமல் வாழ்க்கை போகிற போக்கில் காலந் தள்ளுகின்றனர்.

தமிழ் மொழி நமக்கு வாழும் கலையைச் சொல்லித் தருகிறது. "அறம் செய விரும்பு; ஆறுவது சினம்; இயல்வது கரவேல்; ஈவது விலக்கேல்" என்பதெல்லாம் என்ன?

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்; ஒருவரையும் பொல்லலாங்கு சொல்ல வேண்டாம்; மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்; வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம் " என்பதெல்லாம் என்ன? வாழ்க்கையில் நாம் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள். ஆனால் இந்த நெறிமுறைகளைப் பற்றி இன்றைய இளைஞர்களும் சரி, பெற்றோர்களும் சரி, யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. நமது முன்னோர்கள் சொல்லிச் சென்ற நல்ல நல்ல கருத்துகளை மனதில் நிறுத்தி அவற்றை நம் வாழ்க்கையில் பின்பற்றினால் வாழ்வு சிறக்கும்.

தமிழ் மொழியில் உள்ள கவிதைகளையும் கட்டுரைகளையும் புதுக்கவிதைகள், ஹைகூ கவிதைகள் என்னும் துளிப்பாக்கள், சிறுகதைகள், புதினங்கள் போன்றவறறைத் தவறின்றிப் படிக்கும் போதும் அவற்றை ஆழமாகப் புரிந்து

கொள்ளும் போதும் நமக்கு இனம் தெரியாத ஒரு மகிழ்ச்சி ஏற்படுவதை நனகு உணர முடியும்.

எனவே தமிழர்கள் அனைவரும் தவரின்றித் தமிழை எழுத, படிக்க, பேச பழகிக் கொள்ள வேண்டும். குறிப்பாக, தமிழ் நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள், காலாண்டு இதழ்கள், இளம் எழுத்தாளர்கள், மாணவர்கள், அச்சகப் பணியாளர்கள், கணினியில் பணிபுரிவோர், ஊடகத் துறையில் பணிபுரிவோர், பதிப்பகத்தார் போன்றவர்களுக்கு இது மிக மிக இன்றியமையாததாகும்.

தமிழ் மொழியைக் கன்னித் தமிழ், தென் தமிழ், செந்தமிழ், பைந்தமிழ், தீந்தமிழ், ஒண்டமிழ், தெய்வத் தமிழ், முத்தமிழ், மூவாத் தமிழ் என்றெல்லாம் புகழப்படும் அளவுக்கு அது சிறந்து விளங்குகிறத என்பதை இளம் எழுத்தாளர்கள் உணர வேண்டும்.

ஒரு மொழிக்கு இலக்கணம் என்பது மிகவும் இன்றியமையாதது. இலக்கணம் இல்லாத மொழி அழிந்துபட்டுவிடும். தமிழர்கள் யாருமே தமிழ் படிக்கவில்லை என்றால், தமிழ் இலக்கணம் படிக்க வில்லை என்றால் தமிழ் மொழி ஐம்பது ஆண்டுகளில் இல்லாமல் போய்விடும். பரவாயில்லையா? உலகில் முதலில் தோன்றிய மொழி என்றும் உலகின் மிகச்சிறந்த மொழி என்றும் தமிழர் அல்லாதவர்கள் பாராட்டுகிறார்களே அதெல்லாம் பொய்யா?

உங்கள் குழந்தையை நீங்கள்தானே பாதுகாப்பாக வளர்க்க முடியும்? உங்கள் குழந்தையை நீங்கள் பார்த்துக் கொள்ளாவிட்டால் வேறு யார் பார்த்துக் கொள்வார்கள்?

மொழியின் இன்றியமையாமையை வலியுறுத்துவதற்காகத்தான் வள்ளுவப் பெருமான்,

> “எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
> கண்ணென்ப வாழும் உயிர்க்கு”

என்பதைத் தமது குறள் வாயிலாக எடுத்துச் சொல்கிறார்.

> “எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்”

என்று சொல்லுகிறார்.

செய்தித் துறையில் பணியாற்றுபவர்களும் தாங்கள் பேசும்போதும் எழுதும்போதும் ஏராளமான பிழைகளைச் செய்கின்றனர்.

அவர்களில் பலர், “செய்திகள் வராது” என்றும்,

“இரண்டு மோட்டார் வண்டிகள் தொடர் வண்டியுடன் மோதிற்று. என்றும் எழுதுகின்றனர்.

“செய்திகள் வாரா “என்றும்,

“இரண்டு மோட்டார் வண்டிகள் தொடர் வண்டியுடன் மோதின” என்றும் எழுத வேண்டும். அதாவது, ஒரு சொற்றொடரை பன்மையில் தொடங்கினால் அதனைப் பன்மையில்தான் முடிக்க வேண்டும். செய்திகள் என்பது பன்மை. அதனால் “வாரா “ என்னும் பன்மையில்தான் சொற்றொடர் முடிய வேண்டும். அதேபோல “வண்டிகள்” என்பது பன்மை. எனவே “மோதின” என்னும் பன்மையில்தான் முடிய வேண்டும்.

மகிழுந்தும் மிதிவண்டியும் ஒன்றோடு ஒன்று மோதியது என்று எழுதக்கூடாது. மோதின என்று எழுத வேண்டும். ஏனென்றால் மகிழுந்து, மிதிவண்டி ஆகியவை ஒன்றுக்கு மேற்பட்டவை. அதாவது பன்மை.

‘அல்லது’ என்னும் சொல்லை எங்கே பயன்படுத்த வேண்டும் என்பதைப் பார்ப்போம். “பூனையோ அல்லது நாயோ வீட்டுக்கு வந்திருக்கிறது” என்னும் சொற்றொடரில் அல்லது என்னும் சொல் வரவேண்டிய தேவை இல்லை. ஏனெனில் அந்தச் சொற்றொரில் பூனையோ நாயோ என்று ஐயத்தை ஏற்படுத்தும் ஓகாரம் வருகிறது. இப்படி ஐய ஓகாரம் வரும்பொழுது ‘அல்லது’ என்னும் சொல் வரவேண்டிய தேவை இல்லை.

“இது எல்லாம்” என்று எழுதுவது தவறு. ‘எல்லாம்’ என்பது பன்மை. ஆகவே பன்மையில் முடியும் சொற்றொடர் பன்மையில்தான் தொடங்கப்பட வேண்டும். அதனால், “இது எல்லாம்” என்று எழுதாமல் “இவை எல்லாம்” என்று எழுத வேண்டும்.

“கோலார் என்ற இடத்தில் தங்கம் கிடைத்தது” என்று எழுதினால், “கோலார் என்று அழைக்கப்பட்ட இடத்தில் சில ஆண்டுகளுக்கு முன் தங்கம் கிடைத்தது; இப்போது கிடைக்கவில்லை” என்று பொருளாகிறது. ‘என்ற’ என்னும் சொல், “என்று அழைக்கப்பட்ட” என்னும் இறந்த காலத்தைக் குறிக்கிறது. “கோலார் என்னும் இடத்தில் தங்கம் கிடைத்தது” என்று எழுதினால், “கோலார் என்று இன்றும் அழைக்கப்படும் இடத்தில் அப்போது தங்கம் கிடைத்தது; ஆனால் இப்போது கிடைக்கவில்லை” என்று பொருளாகிறது.

“கூட்டங்கள் பலமுறை நடந்திருக்கிறது” என்று ஒரு மெத்தப் படித்த தமிழ் ஆய்வறிஞர் பேசுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார். அதனை அவருக்கு அவரது மனம் புண்படாதவாறு சுட்டிக் காட்டினேன். இருப்பினும் அவர் எனது சுட்டிக் காட்டலை ஒரு பொருட்டாகவே கருதவில்லை. “கூட்டங்கள் பலமுறை நடந்திருக்கின்றன” என்று பேச வேண்டும் அல்லவா? ஆனால் பன்மைச் சொற்களில் தொடங்குகின்ற அனைத்துச் சொற்றொடர்களையுமே அவர் ஒருமையில்தான் முடிக்கிறார். அவர் மட்டும் அல்ல, பலரும் அப்படித்தான் பேசுகின்றனர்.

தமிழ் படிக்கும் பலருக்கும் குழப்பத்தை உண்டாக்குவது குற்றியல் உகரமும் குற்றியல் இகரமும்தான். குற்றியல் உகரம் என்றால் "குறைந்த ஓசையை உடைய 'உ' என்னும் எழுத்து" என்பது பொருளாகும். அதாவது, "தனக்கு இயல்பாக இருக்கும் ஓசையில் இருந்து குறைந்து ஒலிக்கும் ஓசையை உடைய 'உ' என்னும் எழுத்து" என்பது பொருளாகும். தவிர, முற்றியல் உகரம் என்பதும் உண்டு.

இது போலவே குறைந்து ஒலிக்கும் 'இ' என்னும் எழுத்து குற்றியல் இகரம் எனப்படுகிறது.

இந்தக் குற்றியலுகரமும் குற்றியலிகரமும் மரபுக் கவிதை எழுதுவோர், அசை, சீர் அமைத்துக் கவிதை எழுதப் பயன்படுகிறன.

சரி, குற்றியல் உகரச் சொற்களை எப்படிக் கண்டுபிடிப்பது?

கு, சு, டு, து, பு, று என்னும் ஆறு எழுத்துகளும் உகரம் ஏறிய உயிர்மெய் எழுத்துகள்ஆகும். இந்தஆறு எழுத்துகளும்எந்தச்சொல்லில்இறுதியாகஉள்ளதோ அந்தச் சொல் குற்றியலுகரம் ஆகும். ஆனால் இதை மட்டுமே வைத்து குற்றியலுகரம் என்ற முடிவுக்கு வர முடியாது.

அதாவது, சொல்லின் இறுதியில் கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகளுள் ஏதேனும் ஒன்று கட்டாயம் இருக்க வேண்டும்.

ஈற்றயல் எழுத்து, அதாவது கடைசி எழுத்துக்கு முன் எழுத்து நெட்டெழுத்தாகவோ, வல்லின மெய்யெழுத்தாகவோ, மெல்லின மெய்யெழுத்தாகவோ, இடையின மெய்யெழுத்தாகவோ, ஆய்த எழுத்தாகவோ, உயிர்மெய் எழுத்தாகவோ இருக்க வேண்டும்.

அப்படி இருக்குமானால் ஈற்றெழுத்துக்கு முன் உள்ள எழுத்தைக் கொண்டு அந்தக் குற்றியலுகரம் எந்த வகையைச் சார்ந்தது என்று முடிவு செய்யலாம்.

இந்தக் குற்றியலுகரம் ஆறு வகைப்படும். அவை,

1) நெடில் தொடர்க் குற்றியலுகரம்.

2) வன் தொடர் குற்றியலுகரம்.

3) மென் தொடர் குற்றியலுகரம்.

4) இடைத் தொடர்க் குற்றியலுகரம்.

5) ஆய்தத் தொடர் குற்றியலுகரம்.

6) உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்.

1) நெடில் தொடர்க் குற்றியலுகரம் என்பது இரண்டு எழுத்துகளால் அமைந்த ஒரு சொல்லாக இருக்கும். இதன் முதலெழுத்து நெட்டெழுத்தாக இருக்கும். கடைசி எழுத்து கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகளுள் ஏதேனும் ஒன்றாக இருக்கும்.

எ. கா.: பாகு, மாசு, நாடு, மாது, பாபு, வேறு. இச் சொற்கள் அனைத்தும் இரண்டு எழுத்துகளால் அமைந்த சொற்கள் என்பதை அறிவீர்கள். இவற்றில் உள்ள முதல் எழுத்துகள் நெட்டெழுத்துகளாக உள்ளன. கடைசி எழுத்துகள் கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகளுள் ஒன்றாக உள்ளன. ஆகவே இவை அனைத்தும் நெடில் தொடர்க் குற்றியல் உகரம் ஆகும். அதாவது பா, மா, நா, மா, பா, வே என்னும் நெடில் எழுத்துகளைத் தொடர்ந்து கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகள் வந்துள்ளமையால் இவை நெடில் தொடர்க் குற்றியலுகரச் சொற்கள் ஆகும்.

2) வன் தொடர்க் குற்றியலுகரம் என்பது இரண்டு எழுத்துகளுக்கு மேற்பட்டு வரும் சொற்கள் ஆகும். அவற்றின் ஈற்றெழுத்து கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகளில் ஒன்றைப் பெற்று வரவேண்டும். ஈற்றெழுத்துக்கு முன் உள்ள எழுத்து, வல்லின மெய்யாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் அவை வன் தொடர்க் குற்றியலுகரம் எனப்படும். அதாவது வல்லெழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் எனப்படும்.

எ.கா.: சுக்கு, அச்சு, விட்டு, கழுத்து, கசப்பு, பற்று. வல்லெழுத்துகள் என்றால் வல்லின எழுத்துகள் என்று பொருள். வல்லின எழுத்துகள் என்பவை க, ச, ட, த, ப, ற என்னும் ஆறும் ஆகும்.

3) மென் தொடர் குற்றியலுகரம் என்பதும் இரண்டு எழுத்துகளுக்கு மேற்பட்டு வரும் சொற்கள் ஆகும். அவற்றின் ஈற்றெழுத்துகள் கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகளுள் ஏதேனும் ஒன்றைப் பெற்று வரும். ஈற்றெழுத்துக்கு முன் உள்ள எழுத்து மெல்லின மெய்யாக இருக்கும். அப்படி இருந்தால் அவை மென் தொடர் குற்றியலுகரம் எனப்படும்.

எ. கா. : தெங்கு, பஞ்சு, வண்டு, பந்து, கம்பு, கன்று.

மெல்லின எழுத்துகள் என்பவை ங, ஞ, ண, ந, ம, ன என்னும் ஆறும் ஆகும்.

4) இடைத் தொடர் குற்றியலுகரம் என்பதும் இரண்டு எழுத்துகளுக்கு மேற்பட்டு வரும். இவற்றின் ஈற்றெழுத்துகள் கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகளுள் ஏதேனும் ஒன்றைப் பெற்று வரும். ஈற்றெழுத்துக்கு முன் உள்ள எழுத்து இடையின மெய்யெழுத்தைப் பெற்று வரும். இதுவும் இரண்டு எழுத்துகளுக்கு மேல் வரும்.

எ. கா.: செய்து, சார்பு, சால்பு, வீழ்து.

இடையின எழுத்துகள் என்பவை ய, ர, ல, வ, ழ, ள என்னும் ஆறும் ஆகும். இவற்றுக்கு எடுத்துக்காட்டுச் சொற்கள் மிகவும் குறைவாக உள்ளன.

5) ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் என்பதும் இரண்டு எழுத்துகளுக்கு மேற்பட்டு வரும். இவற்றின் ஈற்றெழுத்துகள் கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகளுள் ஏதேனும் ஒன்றைப் பெற்று வரும். ஈற்றெழுத்துக்கு முன் உள்ள எழுத்து ஆய்த எழுத்தைப் பெற்று வரும்.

எ. கா.: எஃகு, கஃசு.

இவற்றுக்கும் எடுத்துக்காட்டுச் சொற்கள் மிகவும் குறைவாக உள்ளன. கஃசு என்னும் சொல் தற்காலத்தில் பயன்பாட்டில் இல்லை.

6) உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் என்பதும் இரண்டு எழுத்துகளுக்கு மேற்பட்டு வரும். இவற்றின் ஈற்றெழுத்துகள் கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகளுள் ஏதேனும் ஒன்றைப் பெற்று வரும். இவற்றின் ஈற்றெழுத்துக்கு முன் உள்ள எழுத்து ஏதேனும் ஓர் உயிர்மெய் எழுத்தைப் பெற்று வரும்.

எ. கா. அழகு, பாலாறு, கரடு, தெரியாது, பயறு.

அழகு என்னும் சொல்லில் உள்ள ழகரம், அதாவது 'ழ' என்னும் எழுத்து உயிர்மெய் எழுத்தாகும். இந்த உயிர்மெய் எழுத்து என்பது ழ் + அ = ழ ஆகும். இதில் உள்ள 'ழ்' என்னும் மெய் எழுத்தை நீக்கிவிட்டால் 'அ' என்னும் உயிரெழுத்து மட்டுமே மிஞ்சும். அந்த உயிர் எழுத்தை மட்டும் பார்த்து இது உயிர் தொடர்க் குற்றியலுகரம் என்று காண வேண்டும். மேற்கண்ட எழுத்துகளில் அ, ஆ, என்னும் உயிர் எழுத்துகள் ஈற்றெழுத்துக்கு முன் எழுத்துகளாக வந்திருப்பதைக் காண முடியும்.

இனி, குற்றியலிகரம் என்றால் என்ன என்று பார்ப்போம். குறைந்த ஓசையை உடைய உகரம் குற்றியலுகரம் என்பது போல, குறைந்த ஓசையை உடைய இகரம் குற்றியலிகரம் ஆகும்.

அதாவது, குற்றியலுகரச் சொற்களுக்கு முன்பு யகரத்தை முதலாகக் கொண்ட சொல் வருமானால் அந்தக் குற்றியலுகரமானது இகரமாகத் திரியும். அந்த இகரம் தனது இயல்பில் இருந்து குறுகி ஒலிப்பதால் அது குற்றியலிகரம் எனப்படுகிறது.

எ. கா. : வாத்து + யாது = வாத்தியாது. நாடு + யாது = நாடியாது.

'வாத்து' என்னும் சொல்லின் 'து' என்னும் எழுத்தில் உள்ள உகரமானது இகரமாகத் திரிந்தது.

'நாடு' என்னும் சொல்லின் 'டு' என்னும் எழுத்தில் உள்ள உகரமானது இகரமாகத் திரிந்தது. இந்த வகையான சொற்கள் கவிதையில் வருமேயன்றி உரைநடையில் வருவதில்லை.

அடுத்து, முற்றியல் உகரத்தைப் பார்ப்போம். முற்றியல் உகரம் என்பது வேறொன்றும் இல்லை; முற்றிலும், அதாவது உகரத்தின் ஒலியை முழுமையாகக்

கொண்டிருப்பது என்று பொருள். அதாவது, உயிரெழுத்தாகிய உகரம் தனியே இருந்தாலும் உயிர்மெய் எழுத்தில் இருந்தாலும் அது முற்றியல் உகரம் எனப்படும்.

கு, சு, டு, து, பு, று என்னும் ஆறும் வல்லின உகரங்கள்.
ஙு, ஞு, ணு, நு, மு, னு என்னும் ஆறும் மெல்லின உகரங்கள்.
யு, ரு, லு, வு, ழு, ளு என்னும் ஆறும் இடையின உகரங்கள்.

அதாவது, இரண்டு குறில் எழுத்துகள் இணைந்து ஒரு சொல்லாக வரும்போது அவற்றின் ஈற்றில் உள்ள வல்லின உகரங்கள் தமது ஒரு மாத்திரை அளவிலிருந்து குறையாமல் தன் இயல்பான அளவிலேயே ஒலிக்கும்.

இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட எழுத்துகளைக் கொண்ட சொற்களில் உள்ள ஈற்றெழுத்து மெல்லின உகரத்தைக் கொண்டதாக இருப்பின் அவையும் தமது ஒரு மாத்திரை அளவிலிருந்து குறையாமல் தன் இயல்பான அளவிலேயே ஒலிக்கும்.

இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட எழுத்துகளைக் கொண்ட சொற்களில் உள்ள

ஈற்றெழுத்து இடையின உகரத்தைக் கொண்டதாக இருப்பின் அவையும் தமது ஒரு மாத்திரை அளவிலிருந்து குறையாமல் தன் இயல்பான அளவிலேயே ஒலிக்கும். இந்த உகரங்கள் யாவும் முற்றியல் உகரம் எனப்படும்.

இந்த வேறுபாடுகளை மனதில் கொண்டு இரண்டு மூன்று முறை திரும்பத் திரும்பப் படித்துப் புரிந்து கொண்டால் தெளிவு ஏற்பட்டுவிடும்.

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:
சம்சுல் ஹுதா பானு
99403 35306

எளிய முறையில் யாப்பறிவோம்.

நெருப்பலையார் இராம இளங்கோவன்,
பொருளாளர், பெங்களூர் தமிழ்ச் சங்கம், பெங்களூரு.

பாடம் -32.
புதுவகை இசைப் பாடல்களான தனிப் பாடல்கள் -3.

வண்ணம்

ஓரடியின், ஒரு சீரின், ஓரசை எந்த எழுத்தாக வருகிறதோ அதேபோல், அடுத்த அடியின் அதே சீரின் அவ்வசையானது அதே எழுத்தாக வருவதே **வண்ணம்** எனப்படும். **வண்ண**மென்றால் **சந்தம்** என்பதாகும்.

எடுத்துக்காட்டாக உரைப்பதெனில், ஓரடியின் முதற்சீரில் வரும் முதலசையானது குறிலெழுத்தோ, நெடிலெழுத்தோ, வல்லினமோ, மெல்லினமோ, இடையினமோ இவற்றில் ஏதாவது ஒன்றாக வருமேயானால், அடுத்த அடியிலும் முதற்சீரின் முதலசையில் அவ்வெழுத்தே வருதல் வேண்டும். இதேபோல், மற்றச் சீர்களும் அசைகளும் வருதல் வேண்டும். முதலடியும் மூன்றாமடியும் ஒத்த மோனையாக இருத்தல் வேண்டும். பல அடிகளிலும் வரலாம்.

எடுத்துக்காட்டாக அருணகிரிநாதர் எழுதிய திருப்புகழின் பாடல் கீழே காண்போம்:

முத்தைத்தரு பத்தித் திருநகை அத்திக்கிரை சத்திச் சரவண
முக்கட்பக வற்குச் சுருதியின் – முடிவாகி!

இப் பா வரிகளில் மூன்றடியிலும் முதற்சீரில் வரும் முதலெழுத்துக் குறிலாகவும், இரண்டாவது எழுத்து வல்லின எழுத்தாகவும், மூன்றாமெழுத்துக் குறிலாகவும், நான்காவது எழுத்து வலி மிகுந்தும் ஐந்தாவது எழுத்து குறிலாகவும் வந்திருத்தலை நோக்குக.

இரண்டாம் சீர்களில் மூன்று அடிகளிலுமே இரண்டு குற்றெழுத்துகளும், வல்லொற்றும் வந்துள்ளன. மூன்றாம் சீர்களில் இரு குறிலிணைகள் வந்துள்ளன. வல்லின மெல்லின ஒற்றுக்கள்வந்துள்ளன. வல்லினமெல்லினத்தில்உயிர்மெய் என்றில்லை. ஒற்றுக்களாகவே கொள்ளல் வேண்டும்.

இன்னோர் எடுத்துக் காட்டு; திருப்புகழ்ப் பாடல் கீழே காண்போம்:

மருவே செறித்த

குழலார் மயக்கின்
மதனா காமத்தின் - விரகாலே!

மூன்றடியிலும் முதல் சீரின் முதல் இரண்டெழுத்தும் குறிலிணையாகும். அதறகடுத்து, நெடிலெழுத்து. இரண்டாம் சீரின் முதல் இரண்டெழுத்தும் குறிலிணை வந்து, வல்லொற்று வந்து, இறுதியில் குறிலெழுத்து வந்துள்ளது காண்க. அடுத்து... ... ..

பண்ணத்தி

பண்ணத்தி என்பது உரைநடைக் கலந்து தெருக்கூத்து நாடகங்களில் வரும் இசைப் பாடல்களேயாகும். இந்தப் **பண்ணத்தி** என்ற இசைப் பாட்டின் பொருளை அறிவோம். அதாவது,

பண்+அத்தி+ இ= பண்ணத்தி யாகும். **பண்** -என்றால் **இசை ; அத்து** -என்றால் சாரியை (வரிசை) **இ-** என்றால் பெயர் விகுதி. ஆக, **பண்ணத்தி** என்றால் பண்ணுடைய பாடல் என்ற பொருளாகும். எனவே **பண்ணத்தி** என்பதின் விரிவான பொருள் **இசைப்பாடல்** என்பதாகும்.

பண்ணத்தி என்ற இந்த இசைப் பாடல்... **எடுப்பு, தொடுப்பு, முடிப்பு (பல்லவி, பல்லவி எடுப்பு, கண்ணி)** என்னும் மூன்று உறுப்புகளை உடையது. **திரையிசைப் பாடல்கள்** இந்தப் **பண்ணத்தி** என்ற வகையைச் சார்ந்த தாகும்.

பாட்டின் தொடக்கமே **பல்லவி** என்பதாகும். **பல்லவி** ஓரடியின் தனிச் சொல்லுக்குப் பின் **அடிமடக்காய்** ஓரடி வருதலாகும். இல்லையேல் அவ்விரண்டாம் அடியானது **மோனை, எதுகைத் தொடை** அமைந்து வரும்.

பல்லவி எடுப்பானது பல்லவியின் எதுகையைக் கொண்டு, அதிகமான சீர்களை உடையதாக அமையும். இதிலும் இரண்டடிக்கும் ஓர் மோனை அல்லது எதுகைத் தொடை வரவேண்டும்.

அடுத்து, **கண்ணி**யைப் பற்றியறிவோம். இரு சீரிரட்டை, முச்சீரிரட்டை ஆகிய அடிகளானது இரண்டு ஒரெதுகையாய் வரும். கண்ணியில் இயைபுத் தொடை தவிர்க்காமல் வரவேண்டும்.

பல்லவி எடுப்பு இல்லாமல் பல்லவியும், கண்ணியும் மட்டும் வருதலுமுண்டு. தாளமும் அராகமும்(இசையும்) பண்ணத்தியில் பொருந்தி வருதல் வேண்டும்.

எடுத்துக்காட்டாக இராமலிங்க அடிகளின் ஒரு பாடலைக் காண்போம்:

பல்லவி

இதுநல்ல தருணம் - அருள்செய்ய
இதுநல்ல தருணம்.

பல்லவி எடுப்பு:

பொதுநல்ல நடம்வல்ல புண்ணிய ரேகேளும்;
பொய்யெதுஞ் சொல்கிலேன் மெய்யாக வேநாளும்.
(இது)

கண்ணி (சரணம்)

மதித்தமை யாதமத வழக்கெலாம் சாய்ந்தது;
வருணாச் சிரமமென்னும் மயக்கமும் மாய்ந்தது;
கொதித்த வுலகாச்சாரக் குதிப்பெல்லா மொழிந்தது;
கொலையுங் களவுமற்றைப் புலையு மழிந்தது!
(இது)

இப் பண்ணத்திப் பாடலில் பல்லவி அடி மடக்காகவும், பல்லவி எடுப்பு பல்லவியின் எதுகையைக் கொண்டும், கண்ணி இயைபுத் தொடையைக் கொண்டும் மூன்றும் பொருந்தி வந்தமை காண்க.

இராமலிங்க அடிகளின் இன்னொரு பாடலைக் கீழே காண்போம்:

பல்லவி:

வருவா ரழைத்துவாடி – வடலூர்
வடதிசைக்கே வந்தால் மகிழ்வோங் கூடி!

பல்லவி எடுப்பு:

திருவார்பொன் னம்பலத்தே செழிக்குங்குஞ் சிதபாதர்
சிவசிதம் பரபோதர் தெய்வச்ச பாநாதர் ....
(வரு)

மேலேயுள்ள இப் பாட்டில் பல்லவி மோனைத் தொடையால் அமைந்தது. இனி இப்பாடத்தின் வினாக்களுக்கு விடையளியுங்கள்.

பயிற்சி வினாக்கள்:

1. வண்ணம் என்பதற்கு விளக்கம் என்ன?
2. வண்ணத்தில் சீர்கள் எப்படி அமைய வேண்டும்?
3. ஒற்றுக்களில் வல்லின மெல்லின வேறுபாடு உண்டா?
4. பண்ணத்தி என்பதின் பொருள் என்ன?
5. பண்ணத்தி என்ற சொல்லைப் பிரித்து விளக்கம் தருக?
6. பண்ணத்தியின் உறுப்புகள் எத்தனை? அவை யாவை?
7. பல்லவியின் அடிகள் எவ்வாறு அமையும்?
8. பல்லவி எடுப்பு எப்படி அமையும்?
9. கண்ணியைப் பற்றி விளக்குக?

யாப்பிலக்கணம் வளரும்.

சந்திரோதயம் பதிப்பகம், மதுரை
நூல் விலைப்பட்டியல்

3/422, Thiruvalluvar Street, Dinamani Nagar, Madurai 625 018.
Mob: +91 7010997639

நூல்கள்		விலை
1.	*திருவிளையாடல் புராணக்கதைகள் (எளிய உரைநடையில்)*	*200*

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதை நூல்கள்

1.	*உன்னோடு உரையாடுதல்*	*100*
2.	*காதல் மொழி*	*200*
3.	*பார்வையில் பூத்த நிலா*	*100*
4.	*தேனடையும் வரலாறு*	*100*
5.	*நுண்கலை மருத்துவன்*	*200*
6.	*தொடரும் புழுதிக்கால்கள்*	*100*
7.	*புரட்டாசி மூன்றாம் சனிக்கிழமை இரவு*	*200*

முனைவர் செ. இராஜேஸ்வரியின் எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்

1.	*வெற்றித்திருமகள் எம்.ஜி.ஆர்.*	*200*
2.	*எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்*	*200*
3.	*சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர் கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்)*	*200*
4.	*வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட*	*200*
5.	*மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்*	*200*
6.	*எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி*	*200*
7.	*எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி*	*200*
8.	*ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.*	*200*
9.	*வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் - I*	*200*
10.	*நீங்க நல்லா இருக்கணும் (எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - 1)*	
11.	*பாட்டுடைத் தலைவன். எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II]*	*200*
12.	*இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்*	*200*
13.	*முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்*	*200*
14.	*இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.*	*200*
15.	*எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு*	*200*
16.	*படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு*	*200*
17.	Unique Fandom of MGR	*200*
18.	*எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்*	*200*
19.	*எம்ஜி.ஆர். படத்தில் சண்டைக்காட்சிகளின் சுவாரஸ்யங்கள்-1*	*200*
20.	*எங்க வீட்டுப்பிள்ளை.*	*200*
21.	*எம்.ஜி.ஆர். வீடும் விருந்தும்*	

முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் நூல்கள்

1.	*தலைமை பொறுப்பேற்கலாம்*	*200*
2.	*இணையத் தமிழ்*	*120*
3.	*ஊடகச் சட்டங்கள்*	*250*
4.	*ஆஸ்திரேலியாவில் அருந்தமிழ்*	*200*

5. கொசு வீட்டில் பாயாசம் (சிறுவர் நூல்) 200
6. பாரதியார் 100
7. நவீன மொழி பெயர்ப்பு உத்திகள் 200
8. மாயோன் வீட்டுத் தோட்டத்தில் (சிறுவர் நூல்)
9. மாயோன் வீட்டு யானை (சிறுவர் நூல்)

பிற ஆசிரியர்களின் நூல்கள்

1. பன்முகப் பண்பாட்டு உரையாடல் - முனைவர் ஆனந்த அமலதாஸ் 200
2. மொழிபெயர்ப்புத் திறன் - பேரா. முனைவர் மு. முத்துவேலு 150
3. சிறுநல் வாழ்க்கை - முனைவர் ஜோதி எஸ். தேமொழி 200
4. ஏன்? எதற்கு? எப்படி? - முனைவர் ஜோதி எஸ். தேமொழி 150
5. உடல் நலமும் புதிய சிகிச்சை முறைகளும் - முனைவர் ஜோதி எஸ். தேமொழி 150
6. தமிழ் இறைவனார் யார் - பேரா. முனைவர் மு. முத்துவேலு200
7. கவிஞர்களும் எழுத்தாணிய - மேனகா நரேஷ் (NJ) 300
8. இலக்கிய நயங்களும் நுட்பங்களும் – மு. பழநிச்சாமி 300

Other Books

1. Concepts of Constitution - Dr. S. Kalai Arasu 300
2. Aranyani By Vijeni (English Novel Part I & Part II) 200
3. Translating Tamil Poetry - Dr. C. Rajeswari 200
4. Tie Your Hears with Words - Afrah Fathin F.N. 215

முனைவர் செ. இராஜேஸ்வரியின் சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்

1. பண்பாட்டு நகர்வுகள் - தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு 200
2. பெண் தெய்வ வழிபாடு 200
3. தேவேந்திரன் 200
4. மருதநிலப் பெண் தெய்வங்கள் (வராகி, பிடாரி, தவ்வை) 200
5. இரு நிலத்தில் திருமுருகன் 200
6. முன்னோர் வழிபாடு (கதிரவன். காலதேவன், நாகர் வழிபாடும்) 200
7. வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும் 200
8. யானைக்கடவுள் 200
9. பெண் பூப்பின் புனித வழிபாடு 200
10. வழிபாட்டின் வேர்களைத் தேடி 250
11. பெண் தெய்வம் (தோற்றமும் வரலாறும்) 300*
12. உலகத்தமிழரின் ஒரே நூல் திருக்குறள் 200

சமய வழிகாட்டி நூல்கள் (7)

சாமிகளின் சரித்திரம் (வரலாறும் வழிபாடும்) 300
விரதங்களின் விளக்கம் 200
சாமிகளின் துதிகள் (27, 54, 108 போற்றி) 200
மலைக்கோயில்கள் - முருகன் (வரலாறும் வழிபாடும்) 200
மலைக்கோவில்கள் - சிவன், விஷ்ணு 250
அம்மன் கோயில்கள் (வழிபாடும் வரலாறும்) 250
திருமணத் திருத்தலங்கள் (வழிபாடும் வரலாறும்) 250
பிள்ளை வரம் அருளும் கோயில்கள் (வழிபாடும் வரலாறும்) 250

முனைவர் செ. இராஜேஸ்வரியின் கவிதைத் திறனாய்வு நூல்கள்

1.	*பாடுபொருளும் பாசப்பொருளும்*	*250*
2.	*“பூ மர நிழலி”ன் களமும் காலமும்*	*200*
3.	*“2020 தைமாதத்தில் இன்று” கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு*	*100*
4.	*கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதையில் காதல்*	*100*
5.	*கவிஞர் முத்தமிழ் விரும்பியின் பயணக் கவிதைகள்*	*200*

ஆங்கிலக் கவிதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*எட்டுத்திக்கும் செல்வீர்*	*200*
2.	*அவன் கடவுளுக்கு நிகரானவன்*	*200*
3.	*செக்கச் சிவந்த ரோஜா*	*200*
4.	*கலீல் ஜிப்ரானின் “மணலும் நுரையும்”*	*200*
5.	*கலீல் ஜிப்ரானின் “பாடல்கள் 14”*	*200*
6.	*ஆங்கிலத் தேன் கவிதைகள்*	*400*

Tamil Classics in English - (Dr. C. Rajeswari)

1.	Kurunthokai	200
2.	Purananooru	200
3.	Naaladiyaar	200
4.	Aasaarakkovai	200
5.	A Predictress from the Hill (Thiru Kutrala Kuravanchi)	200
6.	A Peasant with two Wives (Mukkudal pallu)	200
7.	Classic Tamil Poems of Poetess Avvai.	300
8.	Classic Poems of Love and Life	400
9.	Ainkurunuuru	200
10.	Pastoral Literature of Classic Tamil	300
11.	A Classic Portrait of Ancient Madurai	300
12.	The Winter’s Tale in Classic Tamil (Nedu nal vaadai)	

Socio Cultural Study Series

1.	Lord Indra -The Forgonen Diet	300
2.	Serpent - The Primordial God	300

தற்காலத் தமிழில் சங்க இலக்கிய நூல் வரிசை

1.	*குறுந்தொகைக் கவிதைகள்*	*200*

மொழிபெயர்ப்பு ஆய்வு நூல்கள் - முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*மொழிபெயர்ப்பியல் ஆய்வு (ஆய்வு நூல்)*	*200*
2.	*கவிதை மொழிபெயர்ப்பு*	*200*
3.	*நவீன மொழிபெயர்ப்பு உத்திகள் (Co-author)*	*200*
4.	*மொழிபெயர்ப்பில் பெயரும் பொருளும்*	*200*
5.	*மொழிபெயர்ப்பு நுண்ணாய்வு*	*400*

தமிழ் இலக்கண நூல்

1. தமிழில் வேற்றுமை உருபுகள்	*200*

சிறுகதை, கவிதை

1. அமராவதியின் காதல் - சத்யப்பிரபா *200*
2. ரோஜா மொட்டு (சித்திரக்கவிதைகள்) - சத்யப்பிரபா *200*
3. மகிழ் பேரின்பம் *200*

ஜோதிட நூல்கள்

மேஷ ராசியின் சூட்சும ரகசியம் *200*
ரிஷப ராசியின் சூட்சும ரகசியம் *200*
நவரத்தினமும் உபரத்தினமும் *200*
மிதுன ராசி சூட்சும ரகசியங்கள் *200*
கடக ராசியின் சூட்சும ரகசியம் *200*

மாத இதழ்கள்

1. தமிழணங்கு மாத இதழ் *200*
2. Love Thamizh *500*
3. சக்தி (பெண்ணிதழ்

பேராசிரியர் முனைவர் தே. ஞானசேகரனின் நூல்கள்
ஆங்கிலத்தில் - முனைவர் செ. இராஜேஸ்வரி

Moonstone Publication, Madurai

1. Emerging Mallarism 200
2. Festival of lord Indra 200
3. Role of Devendirar's in Indian war of Independence 200
   (Sundaralingam Kudumbanar) 200
4. Re reading of Pallu literature 200
5. Mallariyan Literature 200
6. Frontyard without My Dad (Poem) 200

Poems of Er. Poet Muththamizh Virumbi - In English Dr. C. Rajeswari [Moonstone Publication]

1. Therapist of the Finest Art 200
2. Following Dusty Feet 200

TAMILMAGAN's Gene Notes in Vengai Anchor

Dr. C. Rajeswari M.A., M.Phil., Ph.D
Translator, Publisher, Madurai

Chapter 5

Malaysia 2037

Dev has four different periods of memories in his brain. First is the period of Tamil origin; he fixed it as ten thousand years ago. The second one is the period of Indus Valley civilization; the third is the reign of Raja Raja Chola and the last is twenty years back, in 2017, when John Keiser and Saravanan lived. Sometimes he uses to blabber about Karikal Chola, Asoka the Great, Tamil poet Thiruvalluvar, Hindi imposition in Tamil Nadu, and the assassination of Rajiv Gandhi, the former prime minister of India. He tried to trace the history of fifty thousand years of Tamils and convey that in a few minutes. He couldn't get anything in coherence. All are in fragments. He is unhappy when he narrated the historical events of Tamils being cheated several times. It is ridiculous that when Dev has not had an iota of contact with Tamil, he has been disturbed by all these memories. Dr. Maran is wondering how this happened to him and why?

Dr. Maran tested Dev with a multi-layer scanner. He scanned his brain and tested his emotions. He observed the changes in the brain when Dev spoke and laughed. When he came for treatment after getting into the risk of the tsunami Dr. Maran didn't take it very seriously, but when Dev started speaking about something strange and peculiar, he felt he was in need of some urgent treatment. Dev was speaking about some persons, places, and events. Dr. Maran now needed a special plan for Dev's treatment.

Dev is a Nano scientist. He has flirted with and dated many girls. He is a talented youth, smart and handsome. He is a seeker of knowledge in future technology.

In the positron emission test, the machine showed red spots when he talked about King Rajendra Chola. The sensor images in the Tomograph also reddened often. These tests proved that Dev's brain is not in a normal condition.

A doctor is a senior person with wrinkles on his skin and convulsions in his brain. His papers are published in International Journals and proved he is a genius in the field of genetics. Although three Tamils have bagged Nobel prizes, it is still a dream in his life. He noticed that Dev's neurons popped up when he murmured the words Kalinga and Swarna Dweep. He doesn't know the meaning of those words.

Dr. Maran then relaxed in his chair, thinking about Dev.

Then he asked, 'Dev, do you see historical movies? Dev yawned. He didn't like this question. He answered, "In 2020, the filmmakers had stopped producing historical movies. We are the next generation. Then how do I get interested in watching historical movies?"

The doctor put aside his next fifteen questions and asked him just only one. 'Do you feel that your brain belongs to someone else?'.

Yes, Sometimes I am a different person, living in different places and different periods.

Rajendra Chola is a Tamil king. Isn't it? How does he come into your brain?

I am not interested in history in my school days so I opted for Adenine Mutation. I came to know about Rajendra Chola only a month back. His memories pop up in me often. I've told you only a few. I remember these memories pop up from the day of the tsunami, August first.

Rajendra Chola is on his deathbed at Brahmadesam. His queen is standing near his bed. The king asked 'Have the people gone to Swarna Dweep come back?'

The doctor asked Dev, Did you see them?



Yes, I saw them. Did you feel your presence?

I don't know that, but, but......

Tell me everything so that I can do something.

I felt that I am the King.

Oh,

The king is looking troubled, with a secret in his mind. The next time I saw him, he was sailing to Swarna Dweep. At that time he said or thought that he had to finish a task on that island.

A secret?

Yes. I don't know what it is.

The doctor laughed. The secret of thousand years ago. Interesting. Where is Brahmadesam?

It looked like a name in the Puranas. But the cloud browser says it is a place near Kanjeevaram in Tamil Nadu. Rajendra Chola died there, and a monument was constructed.

How does he look? Can you explain?

I have seen him in two different periods, one on his deathbed and another on the ship. He was around thirty when I looked at him on the ship yesterday.

The doctor thought that Dev had read some historical novel and the characters have registered in the subconscious mind. He had some questions to ask Dev, but can't. He had studied Neuro Physics as an optional subject.

The doctor wanted to search for another case history like this. This is very strange in his experience. He wishes to discuss this with Renauld, the Nobel prize awardee.

Give me two more days

Take it. But heal me. Day by day, I am scared. Nowadays I love the sword of the king rather than the touch sheet.

Sword? Damn it. If you can't use the touch sheet, you may lose your way to your house.

Dev started. He got into his driverless car and press the button to home. It steered, and he slept. This car is like a home for him. He can sleep, bathe, eat, etc., etc., etc. Still, he had his own house. It is the reminiscence of centuries.

It was a royal castle; the garden was spreading the fragrance of jasmine and the sweet sound of the running brook turned the place to cool. There was a big and spacious room, and the poetess Vennikkuyaththi was writing alone. No one was permitted to go there. A maid was there to serve her. She never liked to be in a royal suit, but it was the order of the King that she is staying here. She was writing in the Asiriyappa, a narration metre which is the favorite of the king Karikala PeruvaLaththaan. The king was expected to be here. He often visited that place and checked the progress of the work. The written palm leaves were bundled and kept in that room.

The king arrived. He was tall and well-built. He had a twisted mustache and a long robe on his shoulders. When he walked in the corridor, his footwear made a thudded sound, informing his arrival.

Poetess stood up and paid her respect.

The King asked her, 'You told me that it will be completed today and I was eager to read that.'

'My lord, you told me that today trade ships with pearls, cardamom, ivory and pepper will start its journey to Iona islands [Greece].'

'Yes, they will be backfilled with gold after six months.'

'One minister had asked there, why should we give gold for pepper and cotton?'

The king was happy to know that the poetess living alone in this room was aware of international trade matters.

I am not worried about it. We have plenty of gold. An island full of gold mines is discovered by our sailors and it is named Golden Island, Swarna Dweep, told the king.

You have surpassed the glory of your predecessors in the naval trade and war.

Yes, nowadays, the ocean has become a water tank for us.

The car entered Dev's house and the touch sheet woke him up. Suddenly, Dev woke up from his dreams and thoughts.

அறிவுக்கொடை தந்த அருள்வள்ளல் ஜோகன் பிலிப்பு பெப்ரீசியஸ்.

பேரா. முனைவர் மோ. மைக்கேல் பாரடே,
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி

அருந்தமிழ் வளர்த்த அருளாளர்கள் - VII

உலகப் பெருமொழியாம் ஒண்டமிழுக்கு, தாய்த் தமிழகத்தில் உதித்தோர் மட்டுமின்றி, உலகின் பல்வேறு திக்குகளிலிருந்தும் வந்த அரும்பெரும் சான்றோர்கள் பலர் அளப்பரிய தொண்டாற்றி உள்ளனர் என்பது மறுக்கவும் மறைக்கவும் முடியாத வரலாறு. அவ்வகையில் ஐரோப்பிய நாடுகளிலிருந்துவந்த அருள்தொண்டர்கள் ஆற்றிய பங்களிப்புகளைத் தொகுத்தும் வகுத்தும் உரைப்பதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கம். அயல்நாட்டு அருளாளர்கள் நம் அன்னைத் தமிழுக்கும் தமிழகத்துக்கும் வெவ்வேறு துறைகளில் விதந்தோத முடியாத விரிவான கொடைகளை நல்கியுள்ளனர். அவர்களுள், இந்தக் கட்டுரையின் மையப்பொருளாக நாம் பேசவுள்ள அருள்திரு. ஜோகன் பிலிப்பு பெப்ரீசியஸ் அவர்கள், பிற துறைகளோடு தமிழகக் கல்வித்துறைக்குத் தரமான பங்காற்றியவர். அதுவும், தலைநகர் சென்னையிலேயே தங்கியிருந்து, போராட்டக்களமான பகுதிகளிலும் பொறுமை குன்றாது பணியாற்றியவர். இனி, அவரது வாழ்வும் பணிகளும் பற்றி, சில தலைப்புகளில் தொகுத்துக் காண முற்படுவோம்.

I. பிறப்பும் இளமையும்

இவ் அருளாளரது பெயரே பலவிதமாகக் குறிக்கப்படுகிறது. ஜோகன் பிலிப்பு பெப்ரீசியஸ் எனவும், ஜோகன் பிலிப் பேப்ரீசியஸ் எனவும், மயிலை. சீனி வேங்கடசாமி அவர்களால் தமிழ் வழக்கில் பவுரீசையர் எனவும் இன்னும் வேறுசில வகைகளிலும் எழுதப்படுவதுண்டு. எனினும், சுருக்கமாக, 'பெப்ரீசியஸ் ஐயர்' எனப் போற்றப்படும் இப் பெருமகனார், ஜெர்மனி நாட்டின் பிராங்போர்ட் மாநகரம் அருகமைந்த கிளீபர்க் என்னுமிடத்தில் 1711ஆம் ஆண்டு பெப்ரவரி 22ஆம் நாள் (ஜனவரி திங்கள் என்கிறார் எம்.ஏ.சேவியர்) பிறந்தவர். ஜெர்மனி நாட்டு ஹல்லே பல்கலைக் கழகத்தில் தத்துவம், சட்டம், இறையியல் பயின்றார். அப்போதே கிரேக்கம், இலத்தீன், எபிரேயம் ஆகிய விவிலிய மொழிகளை நன்கறிந்திருந்தார். பின்னர் இந்தியா வந்த பிறகு போர்ச்சுகீசியம், ஆங்கிலம், டச்சுமொழி எனப் பல மொழிகளைக் கற்றுத் தேர்ந்ததோடு, தமிழில் மிக ஆழ்ந்த புலமையும் பயிற்சியும் பெற்றார். கிளீசன் என்ற இன்னொரு பல்கலைக்கழகத்திலும் படித்தாரெனச் சொல்லப்படுகிறது.

II. அருட்பணி வருகையும் தமிழக வாழ்வும்

*1739*ஆம் ஆண்டில் டென்மார்க் நாட்டில் சுவிசேஷ லுத்தரன் சபையின் சமய குருவாக நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து, *1740* ஆம் ஆண்டு சமயப் பணிக்காக இந்தியாவுக்கு வந்தார். தமிழகத்தின் கடலலைகள் கவிபாடும் தரங்கம்பாடிக்கு டேனிஷ் மறைக்குழுவுடன் பணியாற்ற *1742*இல் அனுப்பப்பட்டார். பின்னர் சென்னையில் மறைப்பணிபுரிய அனுப்பப்பட்டவர் *1788* வரையில் இங்கேயே இருந்து பன்முகப் பணிகள் ஆற்றினார்.

அறிவாற்றல் மிக்கிருந்த பெப்ரீசியஸ், இந்தியா வந்த ஓராண்டுக்குள்ளேயே தமிழை நன்கு பயின்றார். தமிழ் இலக்கியங்களையும் இலக்கணங்களையும் பழுதறப் பயின்றதோடு, மக்கள் அனைவரோடும் இனிதாகப் பேசி, பேச்சுத் தமிழையும் பிழையற உணர்ந்தார். இவரது இனிய பண்புகளால், இவரது திருச்சபைகளில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டது. இவரது சொற்பொழிவுகள் மெச்சத்தகுந்தனவாக இருந்ததாக வரலாற்றாசிரியர் மயிலை சீனி. வேங்கடசாமி குறிப்பிடுகிறார். இவரது எழுத்து நடையும் பண்டிதர் - பாமரர் என இருசாரார்க்கும் ஏற்றதாக அமைந்தது எனப்படுகிறது.

III. தியாக வாழ்வு

திருமணம் செய்யாது துறவற வாழ்வோடு திருப்பணி ஆற்றிய பெப்ரீசியஸ் ஐயர், 'சந்நியாச குரு' என அழைக்கப்பட்டார். அவரது பிற பணிகளோடு, அவர் ஆற்றிய கல்விப்பணியும் அதற்காக அவர் மேற்கொண்ட தியாகங்களும் போற்றத்தகுந்தவை என்பதில் ஐயமில்லை. ஆரம்பத்தில் சென்னை *J.D.* கிராண்ட்லர் என்பவர் தொடங்கிய 'மலபார் பள்ளி' *(Malabar Charity School)* பின்னர் 'புனித பவுல் பள்ளி' யாக உயர்ந்ததற்கு பெப்ரீசியஸ் ஐயரே காரணம். இன்று மூன்று நூற்றாண்டுகள் கடந்து, சென்னையின் ஒரு முக்கிய கல்வி அடையாளமாக வேப்பேரி பகுதியில் திகழ்வதோடு, சில ஆண்டுகள் முன்பு தன் *300*ஆவது ஆண்டு விழாவை மிக விமரிசையாக இப்பள்ளி கொண்டாடியது. அவ்வமையம், இப்பள்ளிக்காக பெப்ரீசியஸ் ஐயர் மேற்கொண்ட தியாக வாழ்வு வரலாற்று நாடகமாக நடித்துக் காட்டப்பட்டது.

அக்காலத்தில் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரர்களும் ஒருவரையொருவர் தாக்கி கடும் போர் புரிந்து வந்தனர். *1742*இல் இவர் இப்பள்ளியின் பொறுப்பேற்றபின், பிரெஞ்சு படைகள் இப்பள்ளியைத் தாக்கி, இடித்து, வெடி குண்டு கிடங்காக மாற்றினர். அப்போது தம் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்களுடன் தப்பிப் பிழைத்து பழவேற்காட்டில் தஞ்சம் புகுந்தார். *1749* இல் மீண்டும் ஆங்கில அரசின் உதவியோடு திரும்பி வந்து, பள்ளியைத் திறந்து நடத்தினார். இப்பள்ளிக்காக ஒரு செட்டியாரிடம் பணம் கடன் பெற்று, அதைத் திருப்பித்தர இயலாது, அரசு

நீதிமன்றத் தண்டனை பெற்று 1½ ஆண்டுகாலம் சிறைவாசம் புரிந்தார். இப்படி இவர் பட்ட பாடுகள் பலப்பல.

திருச்சபைப் பணிகள்

எனினும், மிக உண்மையமாக, தமது லுத்தரன் திருச்சபையை வளர்க்க, அரும்பாடு பட்டார். சிறிய லுத்தரன் சபையில் பொறுப்பில் இருந்தார். ஆரம்பத்தில் கடினப் பாதையாய் இருந்தாலும், பின்னர்திருச்சபை உறுப்பினர்கள் எண்ணிக்கை 300இலிருந்து 2200 ஆக உயர்ந்தது. சென்னையில் இவரால்தான் முதலில் வேப்பேரி மிஷன் என்பது உருவாயிற்று. வேப்பேரியிலிருந்த ஒரு ரோமன் கத்தோலிக்கக் கோயிலைக் கவனிக்கும் பொறுப்பை, இவரது உண்மை கருதி, அரசு இவரிடம் ஒப்படைத்தது. அதற்காக 500 வராகன் நட்ட ஈடும் தந்தது. சென்னையின் முதல் தமிழ் அச்சகம் இவரது பொறுப்பில்தான் விடப்பட்டது.

நிறைவான மறைவு

இப்படி, 46 ஆண்டுகால பிரம்மசரியத்தோடு கூடிய தம் இறைப் பணியைச் சிறப்பாக நிறைவேற்றினார். 1791ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் நாள் மறைந்த இவரது திருவுடல் வேப்பேரியிலுள்ள தூய மத்தியாஸ் ஆலயத்தில் (சி.எஸ்.ஐ.) நல்லடக்கம் செய்யப்பட்டது. இவரது பெயர் தாங்கிய ஒரு மேனிலைப்பள்ளி சென்னை புரசவாக்கத்தில் இன்றும் ELM பெப்ரீசியஸ் மேனிலைப்பள்ளி எனும் பெயரில் சிறப்பாக இயங்குகிறது.

IV அவரது பன்முகப்பணிகளும் படைப்புகளும்

1 விவிலிய மொழிபெயர்ப்புப் பணி

தமிழ்வேதாகம (விவிலிய) மொழிபெயர்ப்புப் பணியின் நீண்ட வரலாற்றில் மிக முக்கியமாகக் குறிப்பிடத்தக்க ஒரு பெயர், பெப்ரீசியஸ் ஐயருடையது. தனக்கு முன்னர் சீகன்பால்கு ஐயர் செய்த மொழிபெயர்ப்பைப் பிழை திருத்தி வெளியிட முயன்றார். அதிலுள்ள கொச்சை வழக்குகள், வடமொழிச் சொற்கள் முதலானவற்றை நீக்கி, புதிய பெயர்ப்பைக் கொண்டுவர முயன்றார். SPCK (Society for Propogation of Chirstian Knowledge) என்ற நிறுவனத்தின் ஆதரவில்தான் ஐயரவர்களின் பணிகள் நடந்தன. புதிய ஏற்பாடு முழுவதையும் 4 பகுதிகளாக 1752இல் வெளியிட்டார். அப்போதே 1000 படிகள் வெளியிடப்பட்டது. பிறகு பல மறு பதிப்புகள் கண்டது. இவர் கொண்டு வந்த தமிழ் வேதம்தான் வசன நடையில் அமைந்த முதல் பெரிய தமிழ் நூல் எனக் கூறப்படுகிறது. தமது மொழிபெயர்ப்பில் இவர்தான் 'கடவுள்' என்ற சொல்லுக்கு மாற்றாக 'பராபரன்' என்ற சொல்லாக்கத்தைப் பயன்படுத்தினார் பல நேரங்களில் முழங்காலில் நின்றபடியே, தம் வேதாகம மொழிபெயர்ப்புப் பணியைச் செய்வாரெனச் சொல்லப்படுகிறது. தமது மொழிபெயர்ப்பு மக்களுக்குப் புரிகிறதா எனச் சோதிக்க, தமது வீட்டருகே இருந்த ஆலமரத்தின் முன்பு, அந்தணர், வேளாளர், தாழ்த்தப்பட்டோர் எனப் பல தரப்பு மக்களையும் அழைத்து, வாசித்துக் கேட்கச் செய்து, அவர்களது கருத்துகளைக் கேட்டு திருத்தம் செய்வாராம். பழைய ஏற்பாட்டையும் மொழிபெயர்க்க முனைந்தார். ஆனால் முழுமையாக முடிக்கும் முன், மறைந்தார். 1777இல் தொடங்கிய அவரது மொழிபெயர்ப்புப் பணி, அவர் காலத்துக்குப் பின் முடிந்தது. புகழ்மிகு அருட்தொண்டர் வில்லியம் கேரி, 4 பாகங்களாக அதை வெளியிட்டார். பெப்ரீசியஸ் தமது மொழி பெயர்ப்பில் தமிழ் எண்களைப் பயன்படுத்தினார். இந்நூலை முதலில் லுத்தரன் மிசன் அச்சகம் வெளியிட்டது. அண்மையில்

சென்னையிலுள்ள மோரியா பதிப்பகம் வெளியிட்டுள்ளது. பெப்ரீசியஸ் ஐயரது மொழிபெயர்ப்பு ஆய்வாளர்களால் பொன் மொழிபெயர்ப்பு' (Golden translation) எனப் போற்றப்படுகிறது.

2. அகராதிப் பணி



பெப்ரீசியஸ் ஐயரின் அடுத்த முக்கியமான பணி, அகராதிப் பணியாகும். 9000 தலைச்சொற்களுக்குப் பொருள் விளக்கம் தரும் இவரது அகராதியில், இலக்கியச் சொற்கள் மட்டுமல்லாமல், பேச்சு வழக்குச் சொற்களும் சேர்க்கப்பட்டுள்ளன. தமிழில் வழங்கும் வடமொழிச் சொற்களைப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். ஜெர்மன் நாட்டு மொழியறிஞர் கிரால் என்பவரின் ஏழு வகையான வகைப்பாட்டை இதில் பின்பற்றி உள்ளார். இவரது அகராதியைப் பின்பற்றியே, பின்னாளில் வந்த ராட்லர்ஐயரும், வின்சுலோ ஐயரும் சிறந்த அகராதிகளை உருவாக்கி உள்ளனர். தமிழில் வந்த அகராதி நூல்களுள் பெப்ரீசியஸ் ஐயர் உருவாக்கிய அகராதி, சில பிழைகள் உடையதாக பின்னர் விமர்சிக்கப்பட்டாலும், முன்னோடியான சிறந்த அகராதியாகப் பாராட்டப்படுகிறது. இதனை அக்கால வழக்குப்படி, மலபார் - ஆங்கில அகராதி என அழைப்பர்.

3. ஞானப்பாட்டுகள் தமிழ்பெயர்ப்பு

பெப்ரீசியஸ் ஐயர், பல ஜெர்மன் ஞானப்பாட்களைத் தமிழில் பெயர்த்துள்ளார். 335 தமிழ்ப்பாட்டுகளை இவர் உருவாக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. அவர் வடிவமைத்த பாடல்கள், இன்றளவும் லுத்தரன் சபைகளில் பாடப்பட்டு வருகின்றன.

4. இலக்கண நூல்

இவர் ஒரு இலக்கண நூலை, அயல் நாட்டார் தமிழ் கற்பதற்காகத் தயாரித்து 1778இல் வெளியிட்டதாகச் சொல்லப்படுகிறது.

5. இலக்கிய மொழிபெயர்ப்பு

இவர், ஜான் பனியன் என்பார் இயற்றிய மோட்சப் பிரயாணம்' (Pilgirims progress) என்ற நூலைத் தமிழில் பெயர்த்துள்ளதாக மயிலை சீனி. வேங்கடசாமி குறிப்பிடுகிறார்.

6. பிரார்த்தனைப் புத்தகம்

இவர் நடையழகும், சொல் நயமும், பொருளழகும் கொண்ட பிரார்த்தனை நூல் ஒன்று எழுதி உள்ளதாகவும் மயிலை சீனியார் எழுதியுள்ளார்.

மேற்குறித்த நூல்களே அனறி, பாப்பு மார்க்கம் பற்றிய ஒரு நூல், சின்னக் குறிப்பிடம், விசேட வாக்கியப் பிரகாரம் முதலிய சிலநூல்களையும் எழுதியுள்ளதாகச் சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இத்தகு அரும்பணிகளை அயராது நிறைவேற்றி, வரலாற்றில் நிலைத்த அருளாளரை நன்றியுடன் நினைவு கூர்ந்து, நாமும் அவர் நல்வழி தொடர்வோம்.

அரியதொரு ஆளுருட்டி மலை

அ.திவ்விய குமாரி கண்ணம்மா
ஐயை உலகத் தமிழ் மகளிர் மன்றம்

குரங்கிலிருந்து பல பரிணாம வளர்ச்சிகளைப் பெற்று வந்த மனித இனம் மற்ற பல மூதாதை இனங்களை தாண்டி இன்று ஹோமோ சேப்பியன்ஸ்களாக பரிணாமத்து பல நாகரிகங்களை வளர்த்துள்ளது.

இயற்கையாகவே தொல் மாந்தர்கள் அடைக்கலம் தேடி குகைகளிலும் மலைகளிலும் பாதுகாப்பு கருதி வாழ்ந்து வந்தனர்.

தொல் மாந்தர்கள் ஆரம்பகாலத்தில் சைகைகளால் கருத்துரையாடி பின் எளிமையாக தொடர்புக்கொள்ள குறியீடுகளாக மாற்றம் பெற்றன. பின்னரே மொழியாக வளர்ந்திருக்க வேண்டும்.

பொதுவாக தொல் மாந்தர்கள் தாங்கள் கண்ட மிருகங்கள் இனக்குழுவில் நடக்கும் முக்கிய நிகழ்வுகளையும் சடங்குகள் சோகங்கள் வேட்டையாடி வெற்றி பெற்ற கதைகளையும், இறப்பு ஊர்வலம் போன்ற சமூக நிகழ்வுகளை பாறையில் ஓவியங்களாகவும் குறியீடாகவும் வரி வடிவங்களாகவும் தீட்டி வைத்துள்ளனர். பல இடங்களில் குறியீடுளேஅதிகம் கிடைகக்கின்றன.

பாறை ஓவியங்களுக்கும் கோலங்களுக்கும்
உள்ள நிற ஒற்றுமை

பல்வேறு கண்டங்களில் கிடைக்கப்பெற்ற பாறை ஓவியங்கள் தோற்றம் அளவீடு குறியீடுகள் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான கருத்துக்களைக் கொண்டவையாகவே இருக்கின்றது.

உலகெங்கிலும் ஒரே பண்புகள் கொண்ட பல பாறை ஓவியங்கள் நமக்கு கிடைக்கின்றன.

இது போன்ற ஓவியங்கள் வரலாற்றுக்கு முந்தைய காலத்திற்க்கு உட்பட்டவை .

வரலாற்றுக்கு முந்தைய காலம் என மனிதனால் வரையறுக்கப்பட்டது *20* லட்சம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து கிமு *600* வரை.

வரலாற்றுக்கு முந்தைய காலத்திற்கும் வரலாற்றுக்கு உட்பட்ட காலத்திற்கும் பல மடங்கு கால எல்லைகள் உள்ளன.

சிந்துவெளிசிந்துவெளி தமிழுக்கும்
மனை கோலத்திற்கும் உள்ள வரி வடிவ ஒற்றுமை

மொழி எழுத்து பயன்பாட்டில் இல்லாத காலம். .

இங்கிருந்து தான் மொழி பிறக்கின்றது . இந்த சவாலான நிலைகளைக் கடந்து தான் மொழி என்னும் அறிவியல் மனிதனை ஆறறிவு கொண்ட ஆற்றல்மிக்க உயிரினமாக உருவாக்கி இருக்கிறது.

தமிழ்நாட்டில் மட்டும் *50*க்கும் மேற்பட்ட பாறை ஓவியங்கள் இதுவரை கிடைத்துள்ளன. பாறை ஓவியத்தின் நிறத்தை வைத்து இந்த ஓவியம் எத்தனை ஆண்டுகளுக்கு முறப்பட்டு வரைந்திருக்க கூடும் என அறிவியலாளர்கள் கணிக்கின்றனர்.

கருஞ்சிவப்பு ஓவியம் *20000*ல் இருந்து *8000* ம் வருடமும் வெண்சாந்து நிற ஓவியம் *4000* வருடம் பழமையானதாகும்.

ஓவியத்தின் அடர்த்தி வண்ணம் அளவு போன்ற அளவீடுகளிலும் பாறை ஓவியங்கள் இருக்கும் பகுதிக்கு அருகில் கிடைக்க பெறும் தொல்லியல் சான்றுகள் போன்றவற்றை

அளவுகோலாக வைத்து காலத்தை நிர்ணயம் செய்ய முடியும். அல்லது சாயத்தை மாதிரி எடுத்து பரிசோதனை செய்தும் காலத்தை கணிக்கலாம்

மிக பழமையான சிவப்பு சாந்து ஓவியம்

தமிழ்நாட்டில் புதுக்கோட்டை மாவட்டம் கீரனூரில் உள்ள நார்த்த மலை தொகுப்பில் மேலமலை கோட்டை மலை கடம்பர் மலை பறையர் மலை உவக்கர் மலை பொம்மாடி மலை மண்மலை பொன்மலை என ஒன்பது மலைகள் உள்ளன அதில் ஒன்றுதான் ஆளுருட்டி மலை.

பாண்டியர்களின் ஆட்சி காலத்தில் பெரும் குற்றம் செய்தவர்களை இம்மலையின் மேலிருந்து உருட்டி கீழே தள்ளி தண்டனை அளிப்பார்களாம் அதுபோலவே தமிழ் அறிவர்களையும் பௌத்த துறவிகளையும் மலையின் மேலிருந்து கீழ் தள்ளிக் கொன்றதால் இம்மலைக்கு ஆளுருட்டி மலை என பெயர் வந்ததாக கூறுவர்.

இவ்விடத்தில் இரண்டு சமண சிற்பங்களும் ஐந்து சமணப்படுக்கையும் பாண்டிய மன்னன் சுந்தரபாண்டியன் ஆட்சி காலத்தில் ஒரு பள்ளி சந்தம் கொடுத்த கல்வெட்டும் இருக்கிறது. இதனால் இவ்விடம் வரலாற்று ஆய்வாளர்கள் மத்தியிலும் சுற்றுலா பிரியர்கள் மத்தியிலும் வெகுவாக ஈர்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது. இது வரலாறு மற்றும் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக கருதப்படுகிறது.

இங்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பாறைகளில் தொல் மாந்தர்களால் ஓவியங்கள் வரையப்பட்டிருக்கிறது.

சில நேரங்களில் கருஞ்சிவப்பு ஓவியங்கள் கூட கால ஓட்டத்தில் தேய்மானத்திற்கு உள்ளாகி வெள்ளை நிறமாக மாறுவதும் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மலை தூரத்திலிருந்தோ பேருந்திலிருந்தோ பார்க்கும் போது கண் போன்ற ஒரு அமைப்பை கொண்டதை காணமுடியும்.

ஆளுருட்டி மலை செல்லும் வழியிலேயே சிறிய சுனை ஒன்று இருக்கிறது. இது பச்சையும் நீலமும் கலந்த நிறத்தில் காணப்படுகிறது வெகு தூரத்தில் இருந்தும் மக்கள் குடிநீர் எடுக்க வருகின்றனர்.

இந்த இடத்திற்கு பெயர் “பாலூத்து” .

இந்த நீர் தாது சத்துக்கள் கொண்டதாகவும் இருக்கிறது.

சுவையோ எந்த மினரல் வாட்டரையும் அடித்து துவம்சம் ஆக்கிவிடும்.

அப்படியே மலைக்கு மேலே செல்ல வழக்கு பாறை என்பதால் சற்று கவனமாக செல்ல வேண்டும்.

மதுரையில் கிடைத்த பாறை ஓவியம்
Pc : Bala bharathi.

40 அடிக்கு இயற்கை ஆகவே அமைந்த குகை தளம். இங்கு ஒரு கல்வெட்டும் சமண படுக்கையும் பல பாறை ஓவியங்களும் ஆத்ம ஜோதி குறியீடுகளும் ஆடுபுலி ஆட்ட குறியீடுகளும் கப்&ரிங் மார்க்ஸ் எனப்படும் குறியீடுகள் காணப்படுகின்றது.

ஒரு மொழி பிறப்பிற்கு முந்தைய காலம் தொட்டு மொழி பிறந்து கல்வெட்டு வடிக்கும் காலம் வரை

இவ்விடம் காலத்தால் தொடர்ந்து பயன்பாட்டிலேயே இருந்து வருகிறது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. இது இந்த மலையின் மிகப்பெரிய சிறப்பு.

இந்த மலையில் கிடைக்கப்படும் பாறை ஓவியங்கள் வெண் சாந்து வகை ஓவியங்கள்.

சுமார் *4000* வருடங்கள் பழமையான அரிய பொக்கிஷமாக நமக்கு ஆளுருட்டி மலை பாறை ஓவியம் கிடைக்கின்றது.

இந்தப் பாறை ஓவியங்கள் வேட்டை சமூகத்தையோ மிருகங்களையோ சடங்குகளையோ போர் காட்சிகள் பற்றி கூறாமல் மிகவும் தனித்துவமாக சில அரிதான உருவங்களை பதிவுகளாக வரையப்பட்டிருக்கின்றது.

மனித நாகரீகத்தில், மனிதனின் முதல் அறிவியலான வானிலையை ஓவியங்கள் மூலம் தொல் மாந்தர்கள் இங்கு பதிவிட்டு இருக்கின்றனர்.

லெபூஸ் உடுகணம் மற்றும் ஓரியான் கத்திரி உடுகணம்

வானில் இருக்கும் 12 ராசி மண்டலத்தில் மூன்றாவது மண்டலமான மிதுன லக்னத்தில் வரும் சில நட்சத்திரக் கூட்டங்களை தான் பாறை ஓவியமாக வரைந்துள்ளனர்.

லெபூஸ் உடுகணம்

இரவில் தெரியக்கூடிய பல நட்சத்திர மண்டலங்களில் மிகவும் பிரகாசமான கண்களை ஈர்க்கக்கூடியது ஓரையான் விண்மீன் உடுகனம் . அருகில் இருக்கும் மற்ற ஓவியங்களை வைத்து இது ஓரையான் என்று உறுதியாக கூற முடிகிறது.

ஓரையான் பார்ப்பதற்கு ஒரு வேட்டைக்காரனைப் போல மேலொரு முக்கோணமும் கீழ் ஒரு முக்கோணமும் சேர்ந்து உடுக்கை உருவத்தை போல இருக்கும். கைகளில் வில் அம்பு வைத்திருக்கும் ஒரு மனிதனைப் போலவும் காட்சி அளிக்கும். இந்த விண்மீன் தொகுப்பில் தான் திருவாதிரை, மிருகசிரிடம் நட்சத்திரம் வருகிறது.

இந்த விண்மீன் கூட்டத்திற்கு பக்கத்திலேயே நாய் போன்ற உருவம் கொண்ட ஒரு விண்மீன் கூட்டம் இருக்கிறது.

இதை வேட்டை நாய் canis major விண்மீன் கூட்டம் என்று கூறுவர். .

இந்த விண்மீன் கூட்டத்தில் தான் அக்கினி (கத்திரி) நட்சத்திரம் என்று கூறப்படும் sirius வருகிறது. வலபறத்தில் Lepus லெபூஸ் எனப்படும் உடுகணமும் துள்ளியமாக உள்ளது.

தொல்மாந்தர்கள் இரவில் அவர்கள் பார்த்த நட்சத்திர நகர்வுகளை அப்படியே பதிவிட்டு இருக்கின்றனர்.

அறிவின் திறவுகோலாக இருக்கும் வானியல் அறிவு வளர்ச்சி பெற ஆரம்பித்த முக்கியமான ஒரு புள்ளி இது.

அவர்களின் ஆராய்ச்சிகளை பாறை ஓவியங்கள் மூலம் நமக்கு விட்டுச் சென்று இருக்கின்றனர்.

கிரேக்க நாடுகளில் ஒரு வேடனாக பார்க்கப்பட்ட இந்த உருவம் இந்திய கண்டத்தில் ஒரு நடனம் ஆடும் தெய்வமாகவும் , நடராஜர்,காலபுருஷன், சிவதாண்டவம் போன்ற அடுத்தடுத்த நிலைகளையும் எட்டியது

கத்திரி & ஓரையோன் உடுகணம்

உலகின் பல நாடுகளிலும் இந்த விண்மீன் கூட்டத்திற்கு ஓரையான் என்றே பெயரே .

ஓரை என்றாலே காலமெனப் பொருள்படும்.

திரவாதிரை மிருகசிரீடம் மற்றும் பல நட்சத்திர தொகுப்புகளைக் கொண்டது தான் ஓரையான் உடுகணம் .

உலகின் பல்வேறு இடங்களில் பாறை ஓவியங்களில் ஓரையான் பற்றின தகவல்கள் கிடைக்கின்றன.

7,500 வருடங்களுக்கு முன்பு இருந்த சிந்து சமவெளி நாகரிகத்திலும் ஓறையான் ஆதிரையான் பற்றின பல முத்திரைகள் கிடைக்கின்றன.

பருரூப உடு என்று ஓரையானை குறிக்கும் முத்திரைகளும் உள்ளன.

வேட்டைக்காரன் நட்சத்திர படலம் மட்டும் அல்லாமல் இதன் அருகிலேயே வானில் மிளிரக்கூடிய எட்டு ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள சிரியஸ் எனப்படும் கத்திரி விண்மீனயும் வரைந்துள்ளனர்.

இது வேட்டை நாய் எனப்படும் விண்மீன் ஊடுகணத்தில் காணப்படும் மிக ஒளி பொருந்திய நட்சத்திரம்.

இந்த நட்சத்திரமும் மிகத் துல்லியமாக வரையப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து லெபூஸ் எனப்படும் விண்மீன் கூட்டமும் மற்ற சிலவும் வரையப்பட்டுள்ளது.

இத்தனை பெருமை மிக்க பாறை ஓவியங்களில் மக்கள், ஓவியங்களுக்கு மேலே இதயம் வரைந்து வைப்பதும் காதல் கவிதைகளை தன் பெயர்களையும் எழுதி இந்த இடத்தின் பெருமையை அசுத்தப்படுத்தி விடுகின்றனர்.

இரு சமண சிற்பங்கள் இருப்பதால் சமண படுக்கை என்று மட்டுமே பலகை வைக்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு வாய்ந்த பாறை ஓவியங்கள் பற்றின எந்த ஒரு அறிவிப்பு பலகையும் இந்த இடத்தில் இல்லை இந்த இடத்தின் பெருமை பலருக்கு தெரிவதில்லை இது போன்ற இடங்களில் பல தொன்னம் இருப்பதால் ஓவியங்களுக்கும் தொல்லியல் பொருட்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வாரு சென்று வருவது நாம் ஒருவரின் கடமையாகும்

இவ்விடத்திற்கு பின்புறம் மிகப்பெரிய ஈமக்காடு ஒன்று இருக்கின்றது. அங்கு பல்வேறு ஈம வழிபாடுகளும் பல காலமாக வழக்கத்தில் இருந்திருக்கின்றது. வட்டப்பாறை முதுமக்கள் தாழி டால்மன்ஸ் கற்குவியல்கள் காளையார் கோவிலில் கிடைத்தது போல சில வானியல் சார்ந்த பெருங்கற்கள் என எல்லா வகை எச்சங்களையும் இங்கு காண முடியும் அதுமட்டுமின்றி எங்கு பார்க்கினும் இரும்பு கிட்டங்கள் கிடைக்கின்றன இதை வேறொரு பதிவில் காணலாம்.

தொல் மாந்தர்கள் வானில் எங்கெங்கோ இருக்கும் விண்மீன் புள்ளிகளை இணைத்து தன் சிந்தனைக்கு எட்டிய உருவமாக வரைந்துள்ளனர். வரைந்தது மட்டுமின்றி அதை தொடர்ந்து கண்காணித்து அதன் பண்புகளையும் வரைந்துள்ளனர்.

கல்வட்டங்கள் கற்பதுகைகள் டால்மன்ஸ் & முதுமக்கள் தாழிகள்

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே காணப்படும் பாறை ஓவியமும் ஞாயிறு மற்றும் சந்திரனின் நகர்வுகளை அப்படியே பதிவிட்டுள்ளனர்.

இந்தப் பாறை ஓவியத்தில் உள்ள சிறு கோடுகளுக்கும் கூட பொருள் இருப்பதாக அவை அடுத்த பரிமாணத்தில் தமிழ் ஓலைச்சுவடிகளில் வானியல் சார்ந்த சாஸ்திர நிகழ்வுகளாக பதியப்பட்டுள்ளதாகவும் தஞ்சாவூர் மஹால் வெளியீட்டில் ஓலைச்சுவடிகளை தொகுத்து தில்லை நாயகப் புலவர் இயற்றிய காலச்சக்கரம் எனும் நூலில் உள்ளதாக அந்தரோபொலஜிஸ்ட் மூத்த தொல்லியலாளர் முனைவர் திரு. பால பாரதி ஐயா கூறுகிறார்.

தமிழ்ர் பண்பாடுகள் எதுவும் அறிவியல் நோக்கத்தோடே ஆரம்பித்தும் திசை மாறி சடங்கு சம்பிரதாயங்களுக்குள்ளே சிக்கிக்கொண்டும் திசை மாறிவிட்டன.

மொழி பிறக்கும் முன்னரே பாறை ஓவியங்கள் தொடங்கி வானில் தெரியும் நட்சத்திரப்புள்ளிகளை உருவங்களாக ஒன்று சேர்த்து வான் அறிவியலில் இத்தனை காலமெடுத்து கவனித்து கனித்து கலைகளை வளர்த்து தந்தவர்கள் தமிழர்களே இதற்கு மேலும் வலுவூட்டும் சான்றாக,

உலகில் நீங்கள் எங்கு தேடினாலும் கோலம் போடும் வழக்கம் வேறு ஒரு சமூகத்தில் கண்டுபிடிக்கவே முடியாது. கோலம் போடுதல் என்ற பண்டைய கால வழக்க முறை தமிழர்களுக்கே உரித்தான ஒன்று

புலம்பெயர் தமிழர்களும் கூட இன்றளவிலும் தொடர்ந்து நடைமுறையில் செய்து கொண்டே வரும் பண்பாட்டு முறை.

வடநாட்டிலும் கோலம் போடும் வழக்கம் உள்ளது ஆனால் அவை புள்ளி இல்லாமல் வண்ணங்கள் தீட்டும் கோலங்கள்.

தமிழர்களுக்கே உரிதான புள்ளி கோலம் , கம்பி கோலம், சிக்கு கோலம். இது காலத்தால் மிக பழமையானது.

விண்மீன்களை உடுகணமாக வரைவதற்கும் கோலங்கள் வரைவதற்கும் பண்புகள் ஒன்றே புள்ளிகளை இணைத்தல்.

கோலம் போடுவதற்கான வரைமுறைகளில் மிக முக்கியமானது சூரியன் எழும் முன்னரே கோலம் இடுவது.

இரவு முழுவதும் விண்மீன்களை பார்த்து சூரியன் வருவதற்கு முன்னர் வரை வானில் விண்மீன் நிலைகளை கணித்திருக்க வேண்டும்.

இரும்புக்கிட்டங்கள்

இன்று நாம் குறிப்பிடும் கோலமிடுதல், பல்வேறு பரிணாம வளர்ச்சியினைப் பெற்று வந்திருக்கிறது.

இதிலிருந்து புள்ளியிட்டு வரைந்த முறை நம்மிடையே மிகப் பழங்காலந்தொட்டே இருந்துவந்துள்ளமையினை அறிய முடிகின்றது.

மற்றுமொரு மிக முக்கிய பண்பாட்டு தொடர்பு வெள்ளை மற்றும் சிவப்பு நிற கோலமாவுகள். இன்றும் கூட தொல் மாந்தர்கள் முக்கியமான நிகழ்வுகளை பதிய வைத்தது போல முக்கிய நாட்களில் பண்டிகைகளில் பெரிய பெரிய கோலங்கள் போடுவதும் அதற்கு காவி நிற ஓரங்கள் போடுவதும் வழக்கமாகவே இருக்கிறது.

பெண் குழந்தைகள் பூப்பெய்தி விட்டால் அல்லது அம்மை நோய் பாதிப்பு இருந்தாலோ அடுப்பு கரியால் கருப்பு நிற கோலம் ஒன்றை வாசலில் வரைவது வழக்கம். உள்ளே வர வேண்டாம் நோய் தொற்று உள்ளது என்பதனை அறிவிப்பதாகவே நாம் பொருள் கொள்ள வேண்டும்.

கோலமிடும் போது இரு பக்கவாட்டிலும் இரண்டு நீல கோடுகளை போடுவது இடத்தின் எல்லையை குறிப்பதாகவும் இருந்திருக்கலாம்.

மண் தரையில் சாணி மொழுகி காய்ந்த பின் கோலமிடுவது வழக்கம் அதைப்போலவே ஆளுருட்டி மலையின் மேற்பகுதியிலும் ஒரு சிவப்பு சாந்து ஓவியம் கிடைத்தது இது கீழ் பகுதியில் உள்ள ஓரையான் ஓவியத்தை காட்டிலும் பல ஆயிரம் வருடங்கள் பழமையானது.

சுரசொரப்பான மலைப்பகுதியில் பிசுபிசுப்பான திரவம் ஒன்றை ஊற்றி பின்னர் அதன் மேல் குறியீடுகளை வரைந்து இருக்கின்றனர் என்பது ஆய்வாளர்களின் கருத்து.

ஆக மனிதனின் சைகைகளை காட்சிப்படுத்தும் பெட்ரோகிளப் எனப்படும் குறியீடுகள் இன்று முக்கிய பண்பாடாகவே மாறி இருக்கிறது என்பதில் எந்த ஐயமும் இல்லை.



சுந்தரபாண்டியர் காலப் பள்ளிச் சந்தம் கல்வெட்டு

தொல் மாந்தர்கள் பல குழுக்களாக வாழ்ந்த காலத்திலேயே தான் பார்த்த சம்பவங்களை டாக்குமெண்ட் செய்துள்ளான் என்பது பரிணாம வளர்ச்சியில் மைல்கல்.

ஆதி மனிதன் நாகரிகமற்றவன் என்று நாம் பலரும் நினைக்கிறோம் ஆனால் நாகரிகத்தின் முதல் துவக்கம் புள்ளி அவனே. நாம் பயன்படுத்திய பொருட்களின் குப்பைகளையே சரியாகப் பிரித்து தொட்டிகளில் போடத் தெரியாதவர்கள் நாம். தன் உயிரையும் காப்பாற்றிக் கொண்டு வானியலையும் கற்றுக்கொண்டு விவசாயமும் செய்து உலகை செழிக்க வைத்த தொல் மாந்தர்களை வணங்குவோம். இன்றும் கூட ஆதி மனிதன் வைத்த புள்ளியிலேயே நாம் கோலம் போட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதுதான் உண்மை. இதனால்தான் என்னவோ தமிழர்களுக்கு முன்னோர்களை தெய்வமாகி போனார்கள்.

ஆனால் பல பத்திரிக்கை தாள்களிலும் வந்த செய்தி , கடந்த சில மாதங்களாக மிக அதிகமாக கல் குவாரி காண்டிராக்டர்களால், அடி முடி காணாமல், தொல்லியல் துறையின் சட்டங்கள், தடுப்பு சட்டங்கள், ஆகியவை மதிக்கப் படாமல், இந்த காலத்தால் அழியாத புராதனச் சின்னங்கள் பெயர்ந்து விழும் நிலை ஏற்பட்டுள்ளது. எந்நேரமும் அதிரும் குண்டுகளால், குகைகளும், நிற்கும் இடங்களும் மக்கள் நடமாடுகையிலேயே ஆட்டம் கொண்ட வண்ணம் உள்ளது.

இப்படியே தொடர்ந்தால், மத்தியத் தொல்லியல் துறையால் காக்கப்படும் இச்சின்னங்களும் குவாரிக் கற்களாக இரையாகும் நாள் வெகுதூரமில்லை.

தமிழ் நாடு அரசு தொல்லியல் சின்னங்கள் உள்ள மலைகள் முழுவதையுமே காப்பதற்கான சட்டம் இயற்றி உடனேயே இந்த காலவரையற்ற குண்டுவெடிப்புகளை தடுக்காவிட்டால், தமிழகத்தின் தொன்மைக்குப் பெருமையாக விளங்கும் இச்சின்னங்கள் இனி புகைப்படங்களாக மட்டும் காணும் நிலை உருவாகிவிடும்.

வழிபாடு என்பது ஓர் அனுபவம்

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர், மதுரை

வழிபாடு என்பது இறைவனை அல்லது ஆன்மிகப் பெரியோரைத் துதித்துப் போற்றி கொண்டாடி மகிழ்வதாகும். இவ்வழிபாடு நாட்டார் சமயம், நிறுவனச் சமயம் என்ற இருவகை சமயப் பிரிவுகளுக்கும் ஏற்ப வேறுபடுகின்றது. நாட்டார் சமயம் என்பது இறந்தோர் வழிபாடாகவும் இயற்கை வழிபாடாகவும் அமைகின்றது. இதுவே ஆதியில் ஆசிவகத்துக்கு முந்தைய தமிழரின் சமய நடைமுறை ஆகும். நிறுவனச் சமயங்கள் கூறும் பார்வதி சிவபெருமான் பெருமாள் பிள்ளையார் முருகன் போன்றோர் குடும்ப உறவுகளால் பிணைக்கப்பட்டு புராணங்களால் வளர்த்தெடுக்கப்பட்டவர்கள். இவை காலத்தால் பிந்தியவை. ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளில் புராணங்கள் எழுதப்பட்டன. ஆனால் இயற்கை வழிபாடுகளான மரம், கடல், கதிரவன், சந்திரன், ஒளி, இருள் போன்றவை இயற்கையின் பால் கொண்ட அச்சமும் அதனால் கிடைத்த நன்மையும் கருதி மனித சமுதாயம் தோன்றிய காலந்தொட்டு தோன்றியனவாகும். பின்னர் தங்களுடைய ஆடு மாடுகளைப் பாதுகாக்க புலியோடு போரிட்டு புலி அடித்துச் செத்தவர்களும் தன் நாட்டுக்காக, தன் மன்னனுக்காக தன் இன்னுயிரை இழந்தவர்களும், வேறு பல ஊர் நன்மை காரணமாக தங்கள் உயிரை ஈந்தவர்களும் வழிபாட்டுக்கு உரியவர் ஆகினார். இன்றும் வெவ்வேறு கிராமத் தெய்வங்களின் பெயர்களில் இவ்வழிபாடுகள் தொடர்கின்றன. இது வீர யுகத்தைச் *(Heroic Age)* சேர்ந்த வீர வழிபாடாகும்.

நடுகல் வழிபாடு

உலகிலேயே மனிதர் வாழ்க்கைக்கும் சேர்த்து இலக்கணம் கூறும் ஒரே நூலான தொல்காப்பியம் வீரர் வழிபாட்டை

“காட்சி, கால்கோள், நீர்ப் படை நடுதல்’

என்கிறார். கல் தேர்ந்தெடுத்தல், நீரில் கழுவுதல் பின்பு நட்டு வணங்குதல் அல்லது சிலை வடித்து வணங்குதல் ஆகியன சிலப்பதிகாரத்தில் பத்தினித் தெய்வ வழிபாட்டிலும் காணப்படுகிறது. இதனை

கண்ணதாசன் மிக எளிமையாக திரைப்படப் பாடலில்

கனக விசயரின் முடித்தலை நெரித்து,
கல்லினை வைத்தான்
சேர மகன்

என்று சேரன் வடநாட்டு வேந்தரை வென்று அவர் தலையில் இமயத்தின் கல்லை ஏற்றி சுமக்கச் செய்ததைப் பாராட்டிப் பாடுகிறார். இக்கல்லை கங்கையில் நீர்ப்படை செய்து வஞ்சி நகருக்குக் கொண்டு வந்து கண்ணகிக்கு கோயில் எழுப்பினான் செங்குட்டுவ மன்னன். இன்று இது மங்கல தேவிக்கு கோட்டம் என்று அழைக்கப்படுகிறது. நடு கல் , புலிக் குத்தி கல், குதிரை குத்தி கல், போன்றவை இவ்வகை வீர வழிபாட்டுக்கு உரியன.

ஆசிவகமும் அய்யனாரும்

கணக்கியல், வானவியல் போன்ற அறிவியல் சார்ந்த கொள்கைகளை உடைய ஆசிவக மதத்தைத் தோற்றுவித்த மறகலி அய்யனார் என்பவரை அதே பெயரில் சிலை செய்து வைத்து அதன் முன்பு ஒற்றை யானை அல்லது இரட்டை யானை வைத்து மக்கள் அவரை நினைவு கூர்ந்து வழிபட்டு வந்தனர். இச் சமயம் அறிவியல் மற்றும் பகுத்தறிவு சார்ந்த நாத்திகச் சமயம் ஆகும். தமிழ்நாட்டில் நாத்திகமும் பகுத்தறிவும் வளர அடிப்படையாக இருப்பது ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக தமிழக மக்கள் மூளையில் பதிந்திருக்கும் ஆசிவக சமயக் கொள்கைகளே ஆகும்.

தெற்கில் செல்வாக்குப் பெற்றிருந்த ஆசிவகம் வடக்கு நோக்கி வேகமாகப் பரவியது. அங்கிருந்த பௌத்தர்களோடும் சமணர்களோடும் தத்துவ விவாதங்களில் ஈடுபட்டது. இதனை அங்குத் தோன்றிய சமயக் காப்பியங்கள் பதிவு செய்துள்ளன. பௌத்த சமயத்தைச் தழுவிய அசோகர் விரைந்து முன்னேறி வரும் ஆசிவகத்தை அழிக்க விரும்பி ‘ஒரு ஆசிவகர் தலைக்கு ஓராயிரம் பொன்’ என்று அறிவித்தார். 18,000 தலைகள் குவிந்தன. உயிர் மேல் ஆசை கொண்ட ஆசிவகர்கள் பவுத்தம் அல்லது சமணத்தைத் தழுவினர்.

பௌத்தமும் சமணமும்

அடுத்து கடவுள் மறுப்புச் சமயங்களான அவைதீகச் சமயங்களான (வேத மறுப்பு) பௌத்தமும் சமணமும் தமிழகத்தில் பரவிய போது போதிசத்வர், அமணர் எனப்படும் சமயத் துறவிகள் இங்கு வந்து தங்களின் சமயத்தைப் பரப்பினர். அவர்கள் நினைவாக சாமி என்ற

பெயரிலும் முனி (முனிவர்(என்ற பெயரிலும் மக்கள் ஏரி, குளம், நான்கு வழிச் சாலை, பெருவழிச் சாலை, போன்ற இடங்களில் அமர்ந்த நிலையில் சிறு உருவங்கள் சமைத்து வழிபட்டனர்.

ஆசிவகத்தின் அய்யனார் வழிபாடு பௌத்த சமயத்தில் சாத்தன், ஐயப்பன், சாஸ்தா என்ற பெயரில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இக்கோவிலின் சாமி சிலை வட நாட்டவரைப் போல் சிவந்த மேனியுடன் காணப்படும். வழிபாட்டில் உயிர்ப் பலி கிடையாது.

சிறு நெறியும் பெருநெறியும்

நாட்டார் சமயங்களில் வழிபாடு நடக்கும் இடம் கூரையில்லாத ஒரு கோயிலாகவும் வெறும் ஒரு கல் தூணாகவும் அல்லது கல் பீடமாகவும் காணப்படும். அங்கு யாரும் பூசைகள் செய்யலாம். எவரும் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றலாம். இம்முறைகளை நாட்டுப்புறவியல் அறிஞர்கள் சிறு நெறி (Little tradition) என்றனர். காலப்போக்கில் சில கோவில்கள் இந்துக்கோவில்களாக மாற்றம் பெற்றன. கோபுரங்கள் கட்டப்பட்டு ஐயர்கள் இருந்து பூசை செய்யும் இடமாக மாறி வருடாபிஷேகம் மண்டலாபிஷேகம் போன்ற சமஸ்கிருதமயமாக்க முறைகளைப் பின்பற்றுகின்றன. புராணக் கதைகளும் தோன்றிவிட்டன. நிறுவனசமய நெறி பெரு நெறி (Great Tradition) எனப்பட்டது. பின்னர் அவ்வாறு சிறுமைப்படுத் கூடாது என்பதால் அவ்வழக்கு கைவிடப்பட்டது.

லிங்க வழிபாட்டு வகைகள்

நிறுவனச் சமயங்கள் சைவம் வைணவம் என்ற பெரும் பிரிவின் கீழ் தற்போது உள்ளன. இவற்றில் சைவ சமயத்தில் சிவலிங்கம் வழிபடு பொருளாக உள்ளது. சிவலிங்கம் இருக்கும் இடங்கள் அனைத்தும் சிவன் கோயில்கள் அல்ல. முதலாவதாக இறந்த மன்னர்களைப் புதைத்த இடத்தில் கட்டிய பள்ளிப்படை கோவிலில் சிவலிங்கம், வைக்கப்பட்டு காலப்போக்கில் அதுவும் சிவன் கோயிலாக மாறிவிட்டது.

இரண்டாவதாக, பௌத்த சமயத்தில் புத்தருக்கு ஞானஸ்நானம் செய்வித்த பெருங்கடவுளான இந்திரனுக்கு அவன் இந்திரிய தானம் செய்பவன் என்பதைக் குறிக்கும் வகையில் ஆண் குறிச் சின்னம் அடையாளமாக வைத்து வழிபடப்பட்டது. பின்னர் பௌத்த சமயம் அழிக்கப்பட்டதும் புத்த துறவிகள் சீனாவுக்கும் தென் கிழக்காசிய நாடுகளுக்கும் கிளம்பிப் போன பிறகு அவை சிவன் கோயிகளாக மாற்றப்பட்டன. அங்கு இந்திரனுடைய சாபம் தீர்த்தவன் சிவன் என்ற புது ஸ்தல புராணங்களும் தோற்றுவிக்கப்பட்டன. இறைவனின் பெயர் கண்ணாயிரம் என்றும், நேத்ரபுரீச்வரர் என்றும் வைக்கப்பட்டன. இந்திரன் வழிபாட்டிடங்கள் பௌத்தர்களின் ஆதுர சாலைகளில் இருந்தது. அங்கு மனிதருக்கும் விலங்கு மற்றும் பறவையினங்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது. இவ்வழிபாட்டு இடங்கள் சிவன் கோயில்களாக மாற்றம் பெற்ற போதும் அங்கு நடந்த சிகிச்சைகள் மறுக்கப்படவில்லை. அதனால் இறைவன் பெயரும் நேத்ர விநாயகர், மருந்தீஸ்வரர், வைத்திய லிங்கம் என்று அழைக்கப்பட்டன.

மூன்றாவதாக சித்தர்கள் ஜீவசமாதி அடைந்த இடத்தில் லிங்கத்தை வைத்து அடையாளம் காட்டும் முறை இருந்தது. அந்த இடங்களும் இப்போது சிவன் கோயில்களாக மெல்ல மெல்ல மாறி வருவதை காண்கிறோம்

நான்காவதாக தங்கள் குடும்பத்தில் மூத்த உறுப்பினர்களைப் புதைத்த இடத்தில் மற்ற உறுப்பினர்கள் வருடம் தோறும் வந்து கூடி அவர்களை நினைவு கூர வேண்டும் என்பதற்காக அங்கும் ஒரு சிவலிங்கத்தை வைக்கும் மரபைப் பின்பற்றினர். காலப்போக்கில் அந்த சிவலிங்கத்துக்கும் கோயில் கோபுரம் எல்லாம் கட்டப்பட்டு அதுவும் கோயிலாக மாறியது.. ஒருவர் தன் தாயை புதைத்த இடத்தில் ஒரு சிவலிங்கத்தை வைத்து மாத்ரு பூதத்தீஸ்வரர் என்று பெயரிட்டு பத்துக்கு பத்து அடி அளவில் சிறிய கோவிலைக் கட்டினார். அது அவருடைய குடும்பத்தினருக்காக கட்டப்பட்ட கோவில். அந்த சிவலிங்கம் மாத்ரு பூதத்தீஸ்வரர் என்று அவர்களால் அழைக்கப்பட்டது. காலப்போக்கில் அந்த குடும்பத்தினர் எண்ணிக்கையில் பெருகவும் அது மிகப்பெரும் கோயிலாக இப்போது உருவெடுத்துள்ளது.

அதுபோல நடிகர் சங்கிலி முருகன் தன்னுடைய அப்பா இறந்த இடத்தில் ஒரு தென்னந்தோப்பில் அவருடைய ஆத்மா சாந்தி அடைவதற்காக ஒரு லிங்கம் பிரதிஷ்டை செய்து ஆத்ம லிங்கேஸ்வரர் என்ற பெயரில் ஓர் கோயில் எழுப்பினார். மிக அழகாக அமைக்கப்பட்ட அந்த கோயில் அந்தப் பகுதி வாழ் மக்களின் அன்றாட வழிபாட்டுக்குரிய ஸ்தலமாக தற்போது மாறிவிட்டது. இவ்வாறு பல சிவன் கோயில்களுக்கு தோற்ற வரலாறு குறித்து ஆராய்ந்தால் அதற்கு பற்பல காரணங்கள் உள்ளன.

வைணவம்

விஜயநகரப் பேரரசு தென்பகுதியில் விரிவடைந்த போது நாயக்கர்கள் அவர்களின் பிரதிநிதிகளாக இங்கு ஆட்சிக்கு வந்த சமயத்தில் அவர்கள் வைணவர்களாக இருந்ததனால் இங்கு பல விஷ்ணு கோயில்களை எழுப்பினர். ஊருக்கு ஊர் கிராமத்திற்கு கிராமம் கோபாலசாமி கோவில் ராமசாமி கோயில், கிருஷ்ணசாமி கோயில் என்று பல சிறிய, பெரிய கோயில்கள் கட்டப்பட்டன. ஏற்கெனவே இருந்த சிவன் கோயில்களில் பெருமாள் நின்ற

கோலத்தில் கிடந்த கோலத்திலும் புதிதாகக் கட்டப்பட்ட சந்நிதியில் இடம்பெற்றார். அங்குள்ள நெல் வயல்கள் கோயிலுக்குச் சொந்தமாக்கப்பட்டன. சேற்றுக்கால் செல்வர்கள் தங்கள் வயலில் கோயில் அடிமைகளாக மாறிப் போயினர்.

சமய வழிபாட்டு இணைப்பு

மூல திராவிடர்களின் வழிபாட்டுக் கலாச்சாரமான முன்னோர் வழிபாடு இயற்கை வழிபாடு ஆகியன பின்னர் வந்த சமயங்களின் வழிபாட்டுக் கலாச்சாரத்துடன் இணைந்தன. கோயிலுக்கு கோயில் புதிய ஸ்தல புராணங்களும் , ஸ்தல விருட்சங்களும், ஸ்தலம், தீர்த்தம், மூர்த்தி என்பவையும் தோன்றின. ஊர்த் தெய்வங்கள் சில பரிவாரத் தெய்வங்கள் ஆயின.

சித்தரும் முருகனும்

பாம்பாட்டிச் சித்தர், போகர் போன்றோரின் ஜீவசமாதிகள் இருந்த இடங்கள் மருதமலை மற்றும் பழனி முருகன் கோயில்களாக மாறின. சித்தர்கள் சைவச் சடங்குகளுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் தத்துவங்களைப் போற்றினர். குமரனை எளியோனாக ஒரு சித்தர் ரூபத்தில் கொண்டாடினர்.

ஜீவ சமாதி இருந்த இடங்கள் சில சிவத் தலங்கள் ஆயின. இதனால் தான் திருமூலர் இங்கு இருக்கும் சிவலிங்கம் சித்தரின் நினைவுச் சின்னம் என்பதைக் குறிக்கும் வகையில்

கண்டதெல்லாம் அநித்தியமே! கேட்டதெல்லாம் பழுதே! கற்றதெல்லாம் பொய்யே! நீர்
கழித்ததெல்லாம் வீணே! உண்டதெல்லாம் மலமே! உட்கொண்டதெல்லாம் குறையே!
உலகியலில் இதுவரை உண்மை அறிந்திலரே!

என்றார். இன்றைய கோயில்களின் உண்மை வரலாறு பலருக்கும் தெரியவில்லை என்பதை இப்பாடல் குறிப்பாகச் சுட்டிக் காட்டுகிறது.

வழிபாட்டுக்கானஏழுகாரணங்கள்வழிபாட்டுக்கானகாரணங்களைஇனிஒவ்வொன்றாகக் காண்போம். வழிபாடு நம்பிக்கை சார்ந்ததாக இருக்கின்றது. இந் நம்பிக்கை அச்சம் மற்றும் தேவை என்பதன் அடிப்படையில் தோன்றுகின்றது. இந்த அடிப்படைகளை விரிவாகப் பார்க்கலாம்.

கடவுள் மீதான அச்சம்

வழிபாட்டுக்கு முக்கிய காரணம் படைப்பின் பேரில் உள்ள பயம் கலந்த மரியாதை. இவ்வுலகைப் படைத்தவன் இறைவன் என்ற நம்பிக்கை அவனை வழிபடுவதற்கு ஒரு காரணமாகும். அண்டத்தில் இருந்து உலகம் வந்தது என்பது ஒரு நம்பிக்கை. கடலில் ஒரு முட்டை இருந்தது அதில் இருந்து உலகம் தோன்றியது. தண்ணீரில் ஒரு கும்பம் மிதந்தது அது திறக்கவும் உள்ளே இருந்து உயிர்கள் வந்தன என்று உலட்சத்தின் தோற்றம் குறித்து பல்வேறு சயங்களும் கதை சொல்லி வருகின்றன. பைபிளில் ஆதியாகமம் சொல்லும் உலகத் தோற்ற கதைகளும் வேறு பிற சமயங்களில் சொல்லப்படும் உலகத் தோற்றக் கதைகளும் இறைவன் உலகை படைத்தான் என்ற நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டின. எனவே இறைவனே இவ் உலகில் மிகுந்த பலசாலி. நாம் கேட்பதெல்லாம் இறைவனால் மட்டுமே வாரி வழங்க முடியும். இறைவனை இகழ்ந்தால் நிந்தித்தால் அவன் நம்மைக் கடுமையாகத் தண்டிப்பான்.

அவன் பலசாலி என்பதால் அவனால் எதையும் செய்ய முடியும். எல்லாச் சமயத்திலும் கடவுள் நிந்தனை *(Blasphemy)* என்பது பெரிய குற்றம், பாவம். இறைவனை எப்போதும் புகழ்ந்து துதித்துக் கொண்டே அவனை குளிர்வித்துக்கொண்டே இருக்க வேண்டும். இறைவன் கோபப்பட்டு விடக் கூடாது. இது போன்ற கட்டுக்கதைகளும் தொன்மங்களும் இறைவழிபாட்டுக்கு முக்கிய காரணமாக அமைகின்றன.

கடவுளின் கருணை

இரண்டாவதாக இறை வழிபாட்டுக்குரிய முக்கிய காரணம் இறைவன் கருணையுள்ளவன். அவன் தாயைப் போல் தந்தையைப் போல் தன் மக்களை நேசிப்பவன் அவர்கள் வேண்டுவதை அவன் அருள்வான் என்ற கற்பிதங்கள்.

இறைவன் கருணை உள்ளவன் என்பது இறைவனை உயர்த்தியும் மனிதர்களை தாழ்த்தியும் வழங்கப்படும் கருத்தாகும். கருணை என்பது தன்னைவிட தகுதி குறைந்தவர்களிடம் காட்டும் அன்பைக் குறிக்கின்ற சொல்லாகும். இறைவனை கருணாகரன் கருணாமூர்த்தி கருணாகரன் என்று அழைப்பதற்குக் காரணம் இறைவன் மனிதர்களை விட பெரியவன். மனிதர்கள் அல்லது விலங்கினங்கள் பறவைகள் ஆகியன அவனுடைய படைப்பின் ஒரு பகுதி என்பதை மக்களுக்கு நினைவூட்டுவதற்காகும்.

மனிதரின் அன்பு

மூன்றாவது இறை வழிபாட்டிற்குரிய முக்கிய காரணம் அன்பு. இறைவன் அன்பு நிறைந்தவன் நாமும் அவனிடம் அன்புடன் (பக்தி) இருக்க வேண்டும். தான் படைத்த அனைத்து உயிர்களும் உணவளித்து போஷிக்கும் அன்புள்ளம் கொண்டவன். . கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவழிப்பவன், ‘மரம் வச்சவன் தண்ணிர் ஊற்றுவான்’. ஒரு கதையில் உமாதேவி ஒரு சிமிழுக்குள் ஒரு எறும்பை போட்டு அடைத்த வைத்தாள். சிவபெருமான் எல்லா உயிர்க்கும் இரவு இரண்டு மணிக்குப் போய்ப் படியளந்து விட்டு வந்தார். இறைவி அந்த சிமிழைத் திறந்து பார்த்தாள். எறும்பின் வாயிலும் ஓர் அரிசி மணி இருந்தது. ஆக இறைவன் எல்லோரிடத்திலும் அன்பாக இருக்கிறான். இறைவனிடம் மனிதர் காட்டும் அன்பு பக்தி என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது.

இறைவனை சிலர் தாயாகவும் தந்தையாகவும் குருவாகவும் கருதி அமையே அப்பனே என்று அழைத்து வழிபடுகின்றனர் தங்களுக்கு நெருக்கமானவராக இறைவனைக் கருதி வழிபடும் போது மனிதர்களிடத்தில் காட்டும் அன்பைப் போலவே இறைவனிடத்திலும் மனிதர்கள் (பக்தர்கள்) அன்பு பாராட்டுகின்றனர்.

கடவுள் காதல்

மீரா, ராதா திருமங்கையாழ்வார் பாரதியார் போன்றோர் இறைவனிடம் அல்லது திருமாலிடம் / கண்ணனிடம் காதல் கொண்டிருந்தனர். பக்தர்கள் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் இறைவனிடம் காதல் கொண்டிருப்பதை நாயக நாயகி பாவம் என்பர். ஆங்கிலத்தில் மிஸ்டிக் லவ் என்பர். மனிதரில் ஆண், பெண் ஒருவரை ஒருவர்

பார்க்காமல் பழகாமல் கொள்ளும் காதலை சோல் மேட் *(soul mate)* என்ற பெயரால் அழைக்கின்றனர். ஆத்ம நேசம் என்பது உடல் ரீதியான தொடர்பில்லாமல் ஆத்துமாவைக் கொண்டு ஒருவரை ஒருவர் நேசிப்பது ஆகும்.

ஒரு மனிதன் இறைவனிடத்தில் காட்டும் அன்பை பக்தி என்ற பொதுச் சொல்லால் குறிப்பிட்டாலும் ஆணாக இருந்த திருமங்கையாழ்வார் தன்னைப் பெண்ணாகக் கற்பனை செய்து கொண்டு இறைவா உன் காதல் கிடைக்கவில்லை என்றால் நான் மடல் ஏறுவேன் என்றார். அதுவே பெரிய திருமடல் சிறிய திருமடல் என்ற பெயரில் வழங்கப்படுகின்றது. மடல் ஏறுதல் என்றால் பனங்கருக்கினால் குதிரை போன்ற உருவத்தை செய்து அதன் மீது ஒருவன் ஏறி அமர்ந்து அதனை ஒரு கயிறால் கட்டி இழுத்துக் கொண்டு செல்லுவதாகும். அந்த விலங்கின் முகத்தில் அவன் தான் காதலிக்கும் பெண்ணின் படத்தை வரைந்து தொங்க விட்டிருப்பான். இதனால் ஊரார் அவனுடைய காதலைப் பற்றித் தெரிந்து கொண்டு அந்தப் பெண்ணிடம் அவனுக்காக பரிந்து பேசுவார்கள். ஒரு பெண் தன்னை காதலிக்கவில்லை என்றால் ஒருவன் தன் காதலை ஊருக்கு எடுத்துச்சொல்லி ஊரார்களே எங்களைச் சேர்த்து வையுங்கள் என்று விண்ணப்பிப்பதாக அமைவது தான் மடல் ஊர்தல். இது சங்க கால இலக்கியத்தில் காணப்படுகிறது. இதனை திருமங்கையாழ்வார் எடுத்து பெரிய திருமடல் சிறிய திருமடல் என்று இரண்டு பக்தி இலக்கியங்களைப் படைத்துள்ளார்.

கண்ணன் என் காதலன்

அதுபோல, பாரதியார் தன்னை ஒரு பெண்ணாக பாவித்து கொண்டு கண்ணனைக் காதலன் என்றும் தன்னை காதலி என்றும் பாவித்து பாடல்கள் பாடியிருக்கின்றார் இதுபோல கிறிஸ்தவ சமயத்தில் பெண்கள் துறவு மேற்கொள்ளும் போது ஆண்டவரைத் தன்னுடைய கணவனாக பாவித்து அவரைத் திருமணம் செய்து கொள்வதாக சில சடங்கு முறைகளை நிறைவேற்றிய பின்பு அவர்கள் முழுத் துறவிகளாக மாறிவிடுகிறார்கள். அச் சடங்கில் அவர்களை மணப்பெண்ணாக அலங்கரிக்கும் பழக்கம் காணப்படுகின்றது. இவ்வாறு இறைவனை நேசித்தல் என்பது மனிதர்களைப் போல அன்பு கொள்ளுதல், காதல் கொள்ளுதல் என்ற ரீதியிலும் இருப்பதை காணலாம்.

பேசும் தெய்வம்

நான்காவதாக இறைவனுடைய பதில் அல்லது மறுமொழி கிடைக்கும் என்ற நம்பிக்கை வழிபாட்டுக்கு இன்னொரு காரணம் ஆகும். இறைவனை வேண்டிக் கொண்டால் அல்லது தங்கள் குடும்பத்தில் செத்துக் குல தெய்வமானவர்களை வேண்டிக் கொண்டால் உடனே அதற்கான மறுமொழி கிடைக்கும். அவர்கள் தங்களுடைய குறைகளை முறையீடுகளைக் கேட்டு தங்களுக்குப் பதில் அளிப்பார்கள் என்ற நம்பிக்கை பலருக்கும் இருக்கின்றது. பைபிளில் சாமுவேலே சாமுவேலே என்று ஆண்டவர் அழைத்ததும் 'ஆண்டவரே கூறும் அடியேன் கேட்கிறேன்' என்று சாமுவேல் முழங்காலில் நின்று ஆண்டவரின் வாக்கை செவி மடுப்பான். இந்து புராணங்களில் ஆண்டான் அசரீரியாக பேசுவதுண்டு. எனவே இறைவனின் மறுமொழியை நம்பியும் மக்கள் வழிபாடுகள் செய்கின்றனர்.

வானுறையும் தெய்வம்

நடிகை சரோஜாதேவி ஒரு பேட்டியில் எம்ஜிஆரைப் பற்றிக் குறிப்பிடும் போது வழிபாடு பற்றிய ஒரு தகவலை குறிப்பிட்டார். கோவிலில் போய் வழிபாடு செய்தால் கூட இறைவன் இரண்டோரு நாள் கழித்து நாம் கேட்டதைக் கொடுப்பார். ஆனால் எம்ஜிஆரிடம் போய்க் கேட்டால் உடனுக்குடன் கையில் கிடைக்கும். அதுவும் எதிர்பார்ட்த்ததை விடக்கூடுதலாகவே கிடைக்கும் என்று குறிப்பிட்டார். துக்ளஜ்கில் சோ ஒரு தகவலை குறிப்பிட்டிருந்தார். ஒரு நாடக நடிகர் சோவிடம் சொன்ன தகவல் அது. 'வீட்டில் உலை வைத்துவிட்டு அரிசி இல்லையே அரிசி வாங்க பணம் வேண்டும் என்று ஒருவரிடம் போய்க் கேட்கலாம் என்றால் உறுதியாக அது எம்ஜிஆர் மட்டுமே'. சென்னைக்கு அருகி உள்ள திருநின்றவூரில் எம்ஜிஆருக்கு கோயில் கட்டி கும்பாபிஷேகம் நடத்தி நேர்த்திக்கடன்கள், பூசை, திருவீதி உலா என்ரு நடத்துவதை வள்ளுவர் வாக்கினால் புரிந்து கொள்ளலாம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

ஆக இது போன்ற சில மனிதத் தெய்வங்களையும் மக்கள் வழிபடுகின்றனர்.

ஐந்தாவது வழிபாடு என்பது ஒரு வெளிப்பாடு மனிதன் தன்னுடைய குறைகளைத் தன்னுடைய தேவைகளை தன்னுடைய நன்றி உணர்ச்சியை கோபத்தை இறைவனிடம் வழிபாட்டின் மூலமாக வெளிப்படுத்துகின்றான். இறைவனை போற்றி துதித்தல் என்பது இறைவனுடைய பெருமையை உணர்வதும் உணர்த்துவதும் ஆகும். இந்த உலகத்தில் இறைவனை விட பெரியது எதுவும் இல்லை என்பதை உணர்ந்து மெய்மறந்து அவனைப் போற்றுவது துதித்தல் எனப்படும் துதிப்பாடல்கள் எல்லா சமயங்களிலும் உண்டு.

ஆறாவது, மனிதன் தன்னுடைய சிறுமையை வெளிப்படுத்தி தனக்கானவற்றை கெஞ்சிக் கதறி முறையிட்டு வேண்டுதல் செய்து கேட்கின்றான். இது ஒரு விண்ணப்பம முறை. இதுவும் தன் தேவைகளை வெளிப்படுத்தும் விண்ணப்பம் முறை ஆகும். அவை நிறைவேரியதும் அவற்றிற்கான நேர்ச்சைகளை நிறைவேற்றுவான். இது *conditioned love* அல்லது *agreement between man and* அ *God*. 'நீ இதை செய்தால் நான் இதைச் செய்வேன்' என்று இறைவனோடு ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு தான் கேட்டது கிடைத்ததும் அந்த நேர்ச்சை நிறைவேற்றுதலும் ஒரு வகை வழிபாடு ஆகும்.

சரணாகதி

ஏழாவதாக வழிபாட்டுக்கான முக்கிய காரணம் உலக வாழ்வை வெறுத்தவர், உலக இன்பங்களைத் துறந்தவர் இறைவனிடம் சரணாகதி அடைவதாகும். அவர் தன்னை முழுமையாகக் கடவுளுக்கு ஒப்புக்கொடுகிறார். தன்னுடைய அறிவு, திறமை, பணம், அதிகாரம், செல்வாக்கு ஆகியவற்றை அப்புறப்படுத்திவிட்டு தான் முழுக்க முழுக்க இறைவனின் அடிமை என்ற அளவில் இறைவனின் திருப்பணிகளுக்காக இறைவனைப் பற்றிய பிரச்சாரங்களுக்காக தன்னை ஒப்புக்கொடுத்தல் சரணாகதி தத்துவம் ஆகும்

நிறைவாக

வழிபாடு என்பது ஓர் அனுபவம் . இறைவனோடு தான் கொள்ளும் ஓர் அனுபவமாக வழிபாடு அமைகின்றது. இறைவனுடைய உயர்வை மதித்தல் அவனுடைய சிறப்பு இயல்புகளை திரும்பத் திரும்ப பாடியும் பேசியும் கேட்டும் அனுபவித்தல் பின்பு அவனுக்கான சில நேர்ச்சைகளை நிறைவேற்றுதல் தேங்காய் பழம் பூஜை புனஸ்காரம் மாலை அணிவித்து தூப தீபங்கள் காட்டி ஆராதனை செய்தல் இவ்வாறு ஏதேனும் ஒரு வழியில் இறை வழிபாட்டை அனுபவித்தல் என்பதும் மனிதனுக்கு மன நிறைவை தருவதால் வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

இறைவனை நினைத்து நினைத்து நெக்கருகிப் பாடுகின்ற உருகி வழிபடுகின்ற தன்மையை சிலரிடத்தில் காண்கிறோம்

நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து,

ஊற்று ஒழுக கண்ணீர் அதனால் உடம்பு, நனைந்து நனைந்து அருளமுதே நன் நிதியே, ஞான நடனத்து அரசே, என்னுரிமை நாயகனே என்று

வனைந்து வனைந்து ஏற்றும் நாம் வம்மின் உலகியலில் மரணமில்லா பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்! புனைந்து உரையேன் பொய் புகலேன் .

சத்தியம் சொல்கின்றேன் பொற்சபையில் சிற்சபையில் புகுந்த தருணம் இதுவே

என்று ஞானசரிதையில் வள்ளலார் குறிப்பிடுகின்றார். இவ்வாறு நினைத்து நினைத்து உருகி இறைவனை வழிபடும்போது மரணம் இல்லா பெருவாழ்வு கிடைக்கும் இது பொய் உரை அல்ல உண்மை சத்தியம் என்று அவர் வழிபாட்டின் பலனை தெரிவிக்கின்றார்

பவுத்தமும் பெண்களும்

எஸ்.சாந்தினிபீ
மேனாள் வரலாற்று பேராசிரியர்

பவுத்தம் என்றதும் இரு கண்களை மூடி, சிறிய புன்னகை தவழும் அமைதியான தோற்றத்தை உடைய புத்தரின் முகம் நம் மனதில் எழுவது இயற்கை.. அரச வாழ்வை துறந்து மக்களின் துயர் நீக்கும் வழி காண, துறவியான மன்னர் மகன். அறிவுத் தெளிவு பெற்றதால் புத்தா என்றழைக்கப் படும் கவுதம புத்தர். அசோகர் சாலையின் இருபுறத்திலும் மரங்கள் நட்டார் என்று பள்ளிக் குழந்தைகளும் அறிந்ததைப் போல் ஆசையே அழிவுக்குக் காரணம் என்பதைப் புத்தர் சொன்னார் என்று வெகு எளிமையாக எல்லோரும் அறிவர். ''மூப்பு, பிணி மரணம் இவை எல்லா உயிர்களுக்கும் பொதுவானது. இதைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் எந்த சக்திக்கும் கிடையாது'' என்று புத்தர் சொல்லிச்சென்ற இயற்கை விதியை நம்மில் பலர் அறியவில்லை. சமயம், மதம், ஆன்மீகம் இவை தன் வாழ்க்கையில் குறுக்கிட அனுமதிக்காமல் அவற்றை நீக்கினார். ஆனால் அவரையே கடவுளாக்கியது பின்னர் வந்தவர்களின் திறமை.

பொ.ஆ. 6ஆம் நூற்றாண்டில் பவுத்தமும் சமணமும் தொடங்கும் அளவுக்கு என்ன தேவை...? என்ற கேள்வி தோன்றலாம். அக்காலத்தில் வேதங்களின் மையச் சாறு மறைந்து மக்களின் வாழ்க்கையில் சமயச் சடங்கு சம்பிரதாயங்கள் பெருகின. அவற்றை நிறைவேற்ற முடியாமல் மக்கள் தவித்தனர். விவசாயத்திற்குப் பயன்படும் பசுவையும் மாட்டையும் வேள்வித்தீயில் இழக்க மக்கள் தயங்கினர். சாதிப் பிரிவினைகள் மக்களை அழுத்தியது. இரும்பின் பயன்பாட்டால் விவசாய உற்பத்தி பெருக வாணிபமும் பெரும் செல்வத்தைக் கொண்டுவர நகரங்கள் வளர கைவினைஞரின் கைகளிலும் செல்வம் தாராளமாகப் புரண்டது. ஆனால் செல்வச் செழிப்பால் வந்த உயர்வை அடையவிடாது சாதிகள் கீழ் நோக்கி இழுத்தன. இதைப் போன்ற இன்னும் பல கட்டுப்பாடுகள் சமுதாயத்தின் அமைதியைக் குலைத்து மக்களின் மன அமைதியைச் சூறையாடியது. எனவே சமுதாயத்தின் பெரும்பான்மையினருக்கு வேறு வடிகால் தேவைப் பட்டது. அப்பொழுது பல சிந்தனையாளர்கள் பல சித்தாந்தங்கள் தலை தூக்கின. அதில் பவுத்தமும் சமணமும் இன்றும் நம்மால் பெரிதும் அறியப் பட்டவை.

சமணம் தொடக்கத்தில் இருந்தே பெண் துறவிகளை அனுமதித்தது. ஆனால் புத்தர் மாற்றுக்கருத்துடன் இயங்கினார். அவரின் வளர்ப்புத் தாயான ஆனந்தா என்னும்

மாணவரின் கருத்துக்களால் தன் கொள்கையை மாற்றி பெண்களை துறவறத்திற்கு அனுமதித்தார். இவர்கள் பிக்குனிகள் என்றழைக்கப் பட்டனர். இவர்கள் கல்விக்குச் செய்த சேவை மிகப் பெரியது. இந்தியாவின் பல்வேறு பகுதி கல்வெட்டுக்கள் இவர்களைப் பற்றித் தரும் தரவுகளை விரிவாகப் பார்ப்போம்.

பண்டைய இந்தியாவில் ஒருவர் தன்னை அடையாளப்படுத்த தன் தந்தையின் பெயரை முதலில் சொல்லிப் பின்னர் தன் பெயரைச் சொல்லுவர். இன்றும் தமிழகத்தைச் சேர்ந்த நாம் தந்தையின் பெயரை முதல் எழுத்தாக சுருக்கி இனிஷியல் ஆக எழுதுகிறோம். ஆனால் இந்தியாவின் மற்ற பகுதிகளில் இப்பழக்கம் இன்று இல்லை. பெரும்பாலும் தனது சாதி, இனம் குலம் கோத்திரம் அல்லது தந்தையின் பெயரைதன்பெயருக்குப்பின்னால்வைத்திருப்பார்கள்.அயல்நாட்டுபயணத்திற்கான பாஸ்போர்ட் வாங்கி அனுபவப்பட்டவர்கள் இதை அறிந்திருக்க வாய்ப்புண்டு. இனிஷியல் என்றால் அது என்ன? என்று விசாரிப்பார்கள். ஆனால் பண்டைய இந்தியாவில் முதலில் தந்தையின் பெயர் பின்னர் தன் சுய பெயர் எனும் பழக்கம் பெரும்பாலும் காணப்பட்டது.

உதாரணமாகக் கல்வெட்டுகளில் அல்லது பானை ஓடுகளில் ''சாத்தன் அமுதன்'' என்று வந்தால் சாத்தன் -தந்தை பெயர், அமுதன் – மகன் பெயர் என்று பொருள் கொள்ளவேண்டும். இப்பழக்கம் நீண்டகாலம் அதாவது விஜயநகர மன்னர்களின் ஆட்சிக்காலம் வரை (14 ஆம் நூற்றாண்டு) நீண்டது. பெண்கள் கணவன் பெயர் கொண்டு அறிமுகப் படுத்திக் கொண்டனர். பவுத்த சமண வழி வந்த மாணாக்கர் ஆண் பெண் இருவரும் தங்கள் ஆசிரியர்/ஆசிரியை பெயரை முன் வைத்து அடையாளப் படுத்திக் கொண்டனர். இந்த அடையாளமே பெண்ணாசிரியைகள் இருந்ததை நமக்குத் தெளிவுபடுத்துகிறது.

இத்தகைய தகவல் பல புத்த ஸ்தூபிகள், விஹாரைகள் போன்ற பவுத்தம் தொடர்புடைய தளங்களில் கல்வெட்டுக்களில் காணக்கிடைக்கிறது. பவுத்த ஆண், பெண் துறவிகளுக்கு நினைவுத் தூண்கள், கல் படுக்கைகள், ஓய்விற்கான அமருமிடங்களை அவர்களின் மாணவர்கள் அமைத்துள்ளனர். அவற்றில் உள்ள கல்வெட்டுகளின் வழியே நாம் பல தகவல்களை அறிகிறோம். பெரும்பாலும் பிராகிருத மொழியில் இத்தகு பழமையான கல்வெட்டுகள் காணக் கிடைக்கின்றன. உதாரணமாக சாரநாத், குசிநகர் (உ.பி),சாஞ்சி (மத்திய பிரதேசம்), அமராவதி, குண்டபள்ளி (ஆந்திர பிரதேசம்), புத்த கயா (பீகார்), சாந்தி ஸ்தூபா (கஷ்மீர்,) தவுலிகிரி (ஒடிசா) என இந்தியா முழுதும் புத்த நினைவுச்சின்னங்களைக் காணலாம். தமிழகத்தில் தியாகனூர்(சேலம்),தர்மபுரி, பெரம்பலூர், வேலூர் எனப் பல இடங்களில் புத்தர் சிலைகள் கிடைத்துள்ளன. பழம் சிலகளுக்கு புதிய விகாரைகள் அமைத்துள்ளனர். யசிலா, கடா, மிதஸ்ரீ, தின்னா, புசஹதினி, ரெதீ, பதுமந்திகா போன்ற பெயர் கொண்ட பெண் ஆசிரியர்களின் தகவல்கள் கிடைக்கின்றன.

கீழ்காணும் கல்வெட்டு வாசகங்கள் சாஞ்சியில் கிடைத்தவை. (முதலில் வருவது கல்வெட்டு வாசகம், இரண்டாவது அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு இறுதியில் என் தமிழ் கருத்துச் சுருக்கம் தரப் பட்டுள்ளது.)

1. yasilaya atevasini-sagharakhitāye dānaṃ (Marshall and Foucher [1939] 1983: 1.311)

'The gift of Sagharakhitā, female pupil of Yasilā.'

யாசிலா வின் மாணவி சங்கரகிதாயே அளித்த தானம். இங்கே குறிப்பிடப் பட்டுள்ள இரு பெயர்களும் பெண்பால் பெயர்கள். யாசிலா ஆசிரியயை மற்றொருவர் மாணவி.

2. mulāyā dāna thabho gaḍāya atevāsiniyā (Marshall and Foucher [1939] 1983: 1.367)

'The pillar is the gift of Mulā, female pupil of Gaḍā

இந்த தூண், மாணவி கடா (தன் ஆசிரியை) முலாவிற்கு அமைத்த பரிசு.

3. [dha]madevaya dānam mitasiriya atevasiniyā (Marshall and Foucher [1939] 1983: 1.363)

'The gift of Dhamadevā, female pupil of Mita'siri

மாணவி தமதெவா, மிதஸ்ரீ (ஆசிரியை) க்கு அமைத்த பரிசு.

இந்த மூன்று கல்வெட்டுக்கள் வழியே நாம் அறிவது மாணவியர் தங்கள் ஆசிரியைகளுக்கு அமைத்த பரிசுகள் என்பதே. ஆனால் இவர்கள் துறவிகளா அல்லது இல்லற வாழ்க்கையை மேற்கொண்ட பவுத்தர்களா என்று நம்மால் அடையாளப் படுத்த முடியவில்லை. ஆக இரண்டு வழிகளிலும் கருதலாம்.

உத்திர பிரதேசத்தின் மதுரா அருங்காட்சியகத்தில் இடம்பெற்றிருக்கும் இரண்டு கல்வெட்டுக்கள் ஆசிரியை மாணவியர் உறவு குறித்து பேசினாலும் ஒரு கூடுதல் தகவலைத் தருகிறது.

HuviSkasya[s](am) 30 1 [he 4] d(i) 20 dana bh(i)k(ṣu)ṅiy(e) Dinnaye ant(e)vāsinī[aṃ] khuḍaye [gra] …

'In the year 31 of Huviṣka, in the 4th month of winter(?), on the 20th day, the gift of Khuḍā (and) … the female pupils of the nun D' in(tnraān.s. Lüders 1961: 149–50)

'குடா என்னும் மாணவியும் இன்னும் சில மாணவிகளும் (இணைந்து) தங்கள் துறவிஆசிரியைக்கு வைத்த பரிசு. ஹுவிஸ்க எனும் மன்னன்னின் 31 வது ஆட்சி ஆண்டில், குளிர் காலத்தின் நான்காவது மாதத்தில், இருபதாம் நாள் இப்பரிசு அளிக்கப்பட்டது 'என்பதே கல்வெட்டின் தகவல்.

(mahārājasya) [d](e)vaputrasa huv[i]ṣkasya sa[ṃ] 30 9 va 3 di 5 etasya[ṃ] purva[y](aṃ) bh[i]khuṅiye Puśaha[th]iniye [a](ṃtevāsi)ni[y](e) bh[i]khuṅye Budhadevāye bodhisatvo pratithāpito sahā mātāpitīhi saravsat[v]ahitasukh[a]

‘In the year 39 of mahārāja devaputra Huviṣka, in the 3rd (month) of the rainy season, on the 5th day, on this date, the bodhisattva was set up by the nun Budhadevā, the female pupil of the nun Puśahathini, together with her parents for the welfare and happiness of all being’s (.trans. Lüders 1961: 166)

புத்ததேவா என்னும் பெண் துறவி தன் பெற்றோருடன் இணைந்து போதிசத்வரின் (உருவச் சிலையை) அமைத்தார். இவர் புசஹதினி எனும் பெண் துறவி ஆசிரியையின் மாணவியாவார். அதற்குப் பின் வரும் தகவல் அச்சிலை வைக்கப்பட்ட காலத்தைச் சொல்கிறது.



இந்த இரண்டு கல்வெட்டுகளும் இரு வேறு செய்தியை தருகின்றன. முதலாம் கல்வெட்டில் ஆசிரியை மட்டுமே துறவி. மாணவி அல்ல. இரண்டாவது கல் வெட்டில் ஆசிரியை மாணவி இருவருமே புத்தத் துறவியினர். ஆனல் சிலை வைத்தது வேறு ஒரு துறவிக்கு. ஒரே ஆசிரியையிடம் துறவறத்தை மேற்கொண்டவர்களும் உலகியல் வாழ்க்கை மேற்கொண்டவர்களும் கல்வி கற்றுள்ளனர்.

ஆந்திரப் பிரதேசத்தின் புகழ் மிக்க பவுத்தத் தலமான அமராவதி கல்வெட்டுகள் சிலவற்றைப் பார்ப்போம்

sidhaṃ kudūranivāsika bhaya-nāgasa atavāsikasa daharabhikusa vidhikasa atevāsiniya

cha budharakhitāya natiya cha chūlabudharakhitāya cha utarāyake paṭo dāna

‘Success, the tablet at the northern gate, the gift of the young monk Vidhika, pupil

of Reverend nāga, who resides at Kudūra, and of [his] pupil Budharakhitā, and of

[her] granddaughter, and of the younger Budharakhitā.’ (trans. Hultzsch in Burgess

[1886] 1996: 93)

அமராவதி ஸ்தூபியின் வடக்கு வாசலில் வெற்றிகரமாகப் பலகை வைக்கப்பட்டது. இந்தக் கொடை அளித்தவர்கள் இளந்துறவி (ஆண்) விதிகா, அவரின் மாணவி புத்தாரகிதாவும், புத்தாரகிதாவின் பெயர்த்தி இளம் புத்தாரகிதாவும் ஆவர். ஆண் துறவி விதிகா குதூராவில் வசிக்கும் மதிப்பிற்குரிய நாகா(ஆண்)வின் மாணவர்.

ஆண் துறவி ஆசிரியரிடம் பெண்கள் பாடம் பயின்றுள்ளனர். அதைப் போண்றே பெண்துறவி ஆசிரியைகள் ஆண் மாணவர்களுக்கும் கல்வி கற்பித்துள்ளனர். இருபாலினரும் கல்வி கற்றலையும் கற்பித்தலையும் இணைந்தே நடைமுறைப் படுத்தி உள்ளனர்.

[r]āyaselanivāsino vasibhūtasa (ma)hatherasa ayira-bhūtarakhitasa (a)(te)vāsikasa

chula-ay(i)rasa ara[ha]-[ta]sa ayira-budharakhitasa atev(ā)s(i)niya bhikhuniyā nadāya

thaṃbho dā(na) (Burgess [1886] 1996: 104)

‘The pillar is the gift of the Venerable Chula, pupil of the great elder, of self controlled

mind, Venerable Bhūtarakhita, resident of [R]āyasela—and of the nun

nadā, pupil of the Arhat, Venerable Budharakhita.’

சுலா எனும் ஆணும் நதா எனும் பெண்துறவியும் இணைந்து ஒரு நினைவுத் தூணை எழுப்பியுள்ளனர். இவர்கள் இருவரும் இரு வேறு ஆசிரியரின் மாணவர்கள். இவர்கள் இருவருக்குமான உறவுமுறை கல்வெட்டில் சொல்லப்படவில்லை.

vinayadhirasa aya-punavasusa atevāsiniya uvajhāyinī samuḍiyāya atevāsiniya malaṃyā

pāḍakā dāna[ṃ] (Burgess [1886] 1996: 37)9

‘Gift of footprints by Malā, pupil of the female teacher Samuḍiyā, pupil of Venerable

Punavasu, a vinayadhāra.’

மேலே உள்ள அமராவதி கல்வெட்டு சொல்லவந்த நம் கருத்தை தெளிவாக்கிவிட்டது. மலா என்பவர் கால் பாதங்களைத் தானமாக வைத்துள்ளார்.

இந்த ஆடவர் சமுதியா எனும் பெண் ஆசிரியையின் மாணவர். அந்த பெண் ஆசிரியை புனவசு எனும் ஆண் ஆசிரியரின் மாணாக்கி.

பவுத்தத்தின் வழியே பெண்களின் வாழ்வியலில் இல்லற வாழ்க்கை எனும் ஒரே ஒரு கதவு இருந்து வந்த சமுதாயத்தில் வேறு சில கதவுகள் திறக்கப்பட்டன. துறவு என்பது ஒரு கதவு, கல்வி கற்க அறிவு தெளிவு பெறுதல் மற்றொரு கதவு. ஆசிரியை பொறுப்பை பெற்றது மூன்றாவது கதவு. மிகப் பெரிய மைல் கல். ஆண், பெண் இருபாலரும் இணைந்து படித்தல் நான்காவது கதவு, இருபாலருக்கும் கற்பித்தல் ஐந்தாவது கதவாகும். ஒருமாணவரும் மாணவியும் சேர்ந்து ஒரு தானத்தை வழங்குதல் ஆறாவது கதவு. இவற்றையெல்லம் கடந்து மேலோங்கி நிற்பது தந்தையின் பெயருக்குப் பதிலாக ஆசிரியைகளின் பெயர் முன்னிலைப் படுத்தப்பட்டது அதுவும் ஆணுக்கு நிகராக பெண்ணின் நிலை உயர்த்தப் பட்டது.

பத்தொன்பதாவது நூற்றாண்டில் வாழ்ந்த சாவித்திரி பாய் புலே பெண்கல்விக்காக பட்ட எண்ணவியலாதுண்பங்களையும் சந்தித்ததுயரங்களையும் அவமானங்களையும் சற்று மீள்பார்வை செய்து அத்துடன் கல்வெட்டு சொன்ன தரவுகளையும் ஒப்புமைப் படுத்திப் பார்க்கும் பொழுதே பவுத்தம் பெண்களுக்களித்த உயர்வின் முழுத் தன்மையைப் புரிந்து கொள்ள இயலும்.

இக்கல்வெட்டுக்களின் காலம் அதிகப்படியாக பொது ஆண்டு 1000 ற்குள் அடங்கும். சமணமும் இதே உயர்வை பெண்களுக்குத் தந்தது.

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:

சம்சுல் ஹுதா பானு

99403 35306

"நெடுநல்வாடை" The Winter'sTale of Classic Tamil (முனைவர் செ. ராஜேஸ்வரி– யின் ஆங்கில மொழி பெயர்ப்பு நூல்)

ச.சபாரத்தினம்
புவியியலாளர், கோயமுத்தூர்.

முன்னுரை:

சங்க இலக்கியத்தில் 'பத்துப்பாட்டு" என்ற பத்து நூல்களுள் நெடுநல் வாடையும் ஒன்று. நீண்ட, நல்ல வாடைக்காலம் என்று பொருள். இது ஒரு அகப் பொருள் பேசும் நூல். தலைவனைப்பிரிந்த தலைவிக்கு ஒரு நொடியும் ஒரு யுகமாய்த் தோன்றும். அதுதான் நெடு என்ற அடைமொழி. மன்னனின் வெற்றியை உணர்த்துவதால் அது நெடியதாக இருந்தாலும் நல்ல வாடையே. கூதிர் காலம் என்று சொல்லப்படும் வாடைக்காற்று வீசும் காலமே இக்காலம்.

இந்த 'நெடுநல்வாடை" யை "The Winters Tale" என்ற பெயரில் சிறந்த மொழிபெயர்ப்பாளரும், எழுத்தாளரும் பதிப்பாளரும் ஆகிய மதுரை முனைவர் செ. ராஜேஸ்வரி அவார்கள் சிறந்த முறையில் மொழிபெயர்த்து நூலாக வெளியிட்டுள்ளார். அந்த நூல் பற்றிய என் பார்வையை இங்கே பதிவு செய்கிறேன். நூல் முழுவதும் பற்றி எழுதுவது கடினம் என்பதால் ஓரிரு பாடல்களைக் குறிப்பிடுகிறேன்.

முதல் பாடலாக வரும்

...ஏறுடை இன நிரை வேறுபுலம் பரப்பி
புலம் பெயர் புலம்பொடு கலங்கி கோடல்
நீடு இதழ்க் கண்ணி நீர் அலைக்கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுன் புடையூஉ நடுங்க
மா மேயல் மறப்ப மந்தி கூர
பரவை படிவன வீழ கறவை
கன்று கோள் ஒழியக் கடிய வீசி.....

இதன் ஆங்கில மொழியாக்கமாக *"The shivering shepherd"* என்ற தலைப்பில்

Shepherd with rods
Angry at these clouds
Migrated from grazing grounds
with their variety of herds.
Their wraths of long petaled flowers
Are bedraggled and wet with shower
Their bodies grew weak
Any they shivered
Despite they carry fire sticks for heat
Their cheeks tremble
And teeth clatter
cattle never graze
monkeys now quiver
Birds fell from trees
Cows abandon their calves.

அவரின் மொழிபெயர்ப்பு ஆற்றலைச் சுட்டிக்காட்டவே இவ்வளவு வரிகளை சொல்லியிருக்கிறேன்.

அடுத்து ஒரு இயற்கை அழகியல் பாடல் பாருங்கள்.

பைங்காற் கொக்கின் மென் பறைத்தொழுதி
இருகனி பரந்த ஈர வெண்மணல்
'செவ்வரி நாரையோடு எவ்வாயும் கவர
கயல் அறல் எதிர கடும்புனல் சா அய்
பெயல் உலந்து எழுந்த பொங்கல் வெண்மழை
அகல் இரு விசும்பில் துவலை கற்ப"
இதற்கு "Fishing Birds" என்று தலைப்பிட்டு
Flocks of Crane with legs so thin
And soft feathers dumped so thick
In the white wet sand and black clay soil
Red linked storks and cranes assembled
picked fishes swimming against the current
In the shallow waters, as rain had ceased
And started drizzling from sky expanse.

பின்னர் வயல் வெளிக்காட்சி, மதுரை மாநகர்க்காட்சி மதுவின் போதையில் மாந்தர்கள் நகர வீதியில் நடந்து போதல், மாதர்கள் குல தெய்வ வழிபாடு செய்தல், வீட்டுப்புறாக்கள் வீட்டுக்கு உள்ளே காட்சிகள் இப்படி பல வர்ணனைகளை இயல்பாக மொழிபெயர்த்துள்ளார்.

மன்னருக்கு அரண்மனை எழுப்புவது குறித்த பாடல் ஒன்று. அந்தப்பாடல்.
....பெரும் பெயர் மன்னர்க்கு ஒப்ப மனை வகுத்து
பரு இரும்பு பிணித்து செல்வர்க்கு உரீஇ
துணை மாண் கதவம் பொருத்தி இணைமாண்டு

நாளொடு பெயரிய கோள் அமை விழுமரத்து
போது அவிழ் குவளைப் புதுப்பிடி கால் அமைத்து

'இந்தப்பாடலில் நாளொடு பெயரிய கோள் அமை விழுமரத்து" - இந்த வரி நாளொடு பெயரிய கோள் என்றால் ஒரு நாளைக்கு குறிக்கும் நட்சத்திரம் ஆகும். இங்கே மரத்தினால் உத்திரம் அமைக்கிறார்கள். உத்திரம் என்பது ஒரு நட்சத்திரம் ஆகும். இதையே ஆங்கில மொழிபெயர்ப்புப் பாடலிலும் அடிக்குறிப்பாக விளக்கினார்.

Double doors assembled and fastened
Men used wooden screws and iron nails
fixed the stellar named cross bars.
(Name of the star and crossbar are same. It is uthiram in Tamil)

சந்திரனுக்கு மனைவியாக ரோகிணி நட்சத்திரத்தைக் கூறுவது ஒரு மரபு. அரண்மனை திரைச்சீலையில் சூரியனுக்கு எதிரியான சந்திரனும், அதன் இணையான ரோகிணி இருப்பதும் கூறப்படுகிறது.

விண் ஊர்பு திரிதரும் வீங்கு செலல் மண்டிலத்து
முரண் மிகு சிறப்பின் செல்வனொடு நிலை இய
உரோகிணி நினைவால் நோக்கி நெடிது......

*On the c*loth was the Moon, Rival of sun
The head of Zodiac starting from Aries
Moon with his inseparable pair Rohini ....

சேரன், சோழன், திதியன், எழினி இவ்வாறான பல மன்னர்களுடன் பகை கொண்ட பாண்டிய மன்னன், போர் நிகழ்வின்போது இரவில் உறங்காது சிலரோடு திரிந்து கொண்டேயிருப்பான். இதை

'நள்ளென்று யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே"

என்று பாடியிருப்பார். இதன் ஆங்கில மொழிபெயர்ப்பாக,

"Dutyful King" என்ற தலைப்பில்
At the mid night the king never slept
He roamed about, with a few men
After the war, waged against many

என்று அழகாக மொழிபெயர்த்திருக்கிறார்.

முடிவுரை: மொழிபெயர்ப்பாளரும் ஒரு படைப்பாளரே. ஆங்கிலத்தில் இருந்து தமிழில் மொழிபெயர்த்தல் ஒருவகை சிறப்பென்றால், தமிழிலிருந்து, அதுவும் சங்கத்தமிழ்ப்பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதென்பது ஒரு இமாலய சாதனைதான். இதை முனைவர் செ.ராஜேஸ்வரி அவர்கள் மிகச்சிறப்பாக நிறைவேற்றியிருக்கிறார்.

மரு.பு. சாலின் மனோகர் மரு.கொ.பா. புட்பராசு

இராவணர்

மங்கையர் மருத்துவம்

வாழ்க !

நலமுடன் !!

தொகுப்பாசிரியர்கள்

மரு.கொ.பா.புட்பராசு ESMP

Facebook / email : dr.pushparaj.sidha@gmail.com

blog:siddhamarundhagam.blogspot.com

அலைபேசி : 9787651412, 9047423903.

மரு.பு.சாலின் மனோகர் BSMS

kumarinaatusiddha@gmail.com

அலைபேசி : 9787002909, 9941120840

வெளியீடு :

இராவணர் பதிப்பகம்,

வாழவிளை, பரக்குன்று,

வழி குழித்துறை - 629 163,

குமரிமாவட்டம்.

உள்ளடக்கம்
இராவணர் மங்கையர் மருத்துவம் - பாகம் - 1

1. **முன்னுரை** - 35
2. **எம்முரை** - 44
3. வாலைகளின் பருவங்கள் - 59
4. இருதுவாகும் கால வயது - 64
5. மாதர்களின் பருவங்களின் பெயர்கள் - 65
7. பெண்களின் பருவங்கள் - 66
8. பூப்பு என்பது யாது? - 71
9. மாதாந்த தீட்டின் நன்மைகள் - 73
10. மாதவிடாயின் விபரம் - 74
11. சூதகம் எவ்வாறு உருவாகிறது? - 76
12. மாதவிடாய் கால ஒழுக்கம் - 77
13. மாதவிடாய் ஒழுக்கம் தவறுவதால் வரும் பாதிப்புகள்- 78
14. சூதகத்தாலுண்டாகும் பயன்கள் - 81
15. மாதர்களின் பண்பியல்பு - 83
16. கருப்பை வலுப்பெறும் கால அளவு - 84
17. வெளிபூப்பு - 86
18. சூதக வாயுவுக்கு கியாழம் - 88
19. உள்பூப்பின் இயல்பு - 89
20. கன்னியாரின் ருதுகால உடல் மாற்றங்கள் - 91
21. பூப்பிலியர் இலக்கணம் - 92
22. பூப்புற்ற மங்கையரை பேணுதல் - 94
23. சூதக சன்னி - 95

24. மாதாந்திர தீட்டின் வரிசை - 98
25. வெண்ணீர் (விந்து) - 100
26. ஆண்குறியின் பயன் - 113
27. அல்குலின் அமைவு - 114
28. ஆண் பெண் கூபக அறை அமைவு - 115
29. கெற்பாசயத்தின் அமைவு - 116
30. போகத்தில் கருவுறுவது அறிய - 118
31. மங்கையரின் கொங்கை வளர்ச்சிக் குறைவு - 119
32. மங்கையரின் பிணிநீக்கும் தொடுவர்ம புள்ளிகள் - 123
33. சூல்காலம் - 126
34. புட்டவியல் - 136
35. **சூல்கால நோய்கள்** - 137
36. கருவுற்ற பின் துவாலை கசிவு ஏற்பட்டால் மருந்து - 139
37. கெற்ப துவாலைக்கு மருந்து - 142
38. கெற்பசூலை சகலதுக்கும் எண்ணெய் - 148
39. கெற்ப கிரந்திக்கு மருந்து - 150
40. கெற்பத்தில் வாயுவுக்கு புட்டவியல் - 151
41. வயிற்றில் குத்தெரிவுக்கு மருந்து - 152
42. சூல் ரோகம் அனைத்துக்கும் தைலம் - 153
43. பேற்றெண்ணெய் - 157
44. **சூல்கால பண்டுவம் – வேறு** - 158
45. சூலெண்ணெய் – வேறு - 164
46. கருவளர் நெய் - 166
47. சூல்வாந்தி - 169
48. சூலெண்ணெய் – வேறு - 172

49. கெற்பிணிக்கு நீரடைத்தால் - 174
50. கல்லடைப்பு மருந்து - 177
51. கெற்ப குருதிக்கு மருந்து - 179
52. சூல் தாகத்துக்கு கியாழம் - 180
53. கெற்பத்தில் சுரம் - 181
54. கெற்ப சுரத்துக்கு கியாழம் - 183
55. சூல் புழுவின் குறிகுணங்கள் - 185
56. **கரு பரிசோதனை** - 186
57. கருவுருவாகும் சோதனை - 188
58. கெற்பக்குறிகள் - 189
59. சூல்கால ஒழுக்கம் - 190
60. கருவழியும் காரணம் - 191
61. சூலழியும் காரணம் - 192
62. நஞ்சுகொடியின் விளக்கம் - 193
63. கருவின் வளர்ச்சி - 195
64. ஆண், பெண், அலி சிசு உருவாகும் விதம் - 199
65. இரட்டை குழந்தை பிறக்கும் விதம் - 200
66. கணவன் மனைவி உறவு - 203
67. கெற்ப காமாலை குறிகுணம் - 204
68. கெற்ப காமாலைக்கு வடகம் - 206
69. சூல் மகோதரம் - 207
70. அன்னபேதி செந்தூரம் - 209
71. சூலில் குழந்தை மரித்த விதமறிய - 210
72. இதற்கு மருந்து - 214
73. கற்பின் நிலைத்தன்மை - 222

74. பெண்களின் சினைமுட்டையின் இலக்கணம் - 223
75. சூல்தைலம் - வேறு - 224
76. சூல்தாய்க்கு வில்வாதி குடிநீர் - 227
77. சூலெண்ணெய் - வேறு - 228
78. சூசிகா வாயு குணம் - 230
79. சூல் தைலம் - வேறு - 232
80. கருவளர்ச்சி சூல் தைலம் - 234
81. சூலெண்ணெயின் பயன்கள் - 239
82. பேறுகால பண்டுவங்கள் - 240
83. பழிச்சூல் இலக்கணம் - 241
84. ஈண்வேளை செய்ய வேண்டிய பண்டுவங்கள் - 246
85. பேறு தாமதத்திற்கு குடிநீர் - 250
86. சேய் பிறந்தவுடன் பரிகாரம் - 251
87. சிசுவுக்கு சேனையூட்டும் முறை - 252
88. உந்தி கொடி முறிக்கும் விதம் - 254
89. பிறந்தவுடன் சேயை பேணும் விதம் - 255
90. பிரசவ பின் கவனிப்பு - 259
91. மதலை ஈன்ற தாயை பேணும் விதம் - வேறு - 262
92. பன்மூலப் புதையல் - 266
93. சீரகப் புதையல் - 271
94. பன்மூலப் புதையல் - வேறு - 274
95. முந்திரி வாற்று - 281
96. குறிஞ்சிக்குழம்பு - 284
97. நஞ்சு பிடித்த நோய் - 296
98. மதலை ஈன்ற தாயின் சூலுறை பழுத்தல் - 297

99. கருப்பை கழுவப் பீச்சு - 298
100. நஞ்சு கொடியை இழுப்பதால் ஏற்படும் விபரீதம் - 299
101. பூச்சு முறை - உள் மருந்து - 300
102. விடவக்கிழிவு நோய் - 303
103. மூச்சடங்கி பிறக்கும் சிசு - 305
104. **மதலைகள் மூச்சடங்கி பிறக்க காரணம்** - 306
105. இதற்கு பரிகாரம் - 307
106. சிசுவை நஞ்சுகொடி சுற்றினால் - 311
107. சிசு அழ / நஞ்சு கொடி வெளியாக - 312
108. பாலூட்டும் வரிசை - 314
109. குழந்தை பிறந்தவுடன் அழுவதின் காரணம் - 316
110. **பால் அதிகமாக சுரக்க மருத்துவம்** - 317
111. பால் வற்றச் செய்ய மருத்துவம் - 320
112. சேய் பால் குடிப்பதை நிறுத்த - 323
113. **சவறு காய சுர நிதானம்** - 325
114. தீருந்நோய்கள் - 328
115. தீரா நோய்களின் குறிகுணங்கள் - 329
116. சவறுகாய சன்னிக்கு தைலம் - 361
117. **சவறு காய சுர நிதானம் - வேறு** - 363
118. தீருந்நோய் - 365
119. தீராநோய் - 366
120. சினைப்பை / கருப்பை தாக்கப்பட்டால் - 378
121. **பொய் கெற்பம்** - 379
122. **சூதகத்தடை நோய்** - 380
123. கருப்பை கட்டிகள் உருவாகாமல் தடுப்பது எப்படி - 385

124. கருப்பை கட்டி இருப்பதை கண்டறிவது எவ்வாறு - 386
125. **சூதக வாயு பொது குணம்** - 388
126. சூதக வாதம் - 389
127. கருவில் ஊனமுடன் கருவுருவாகும் அடிப்படை - 392
128. கருவில் ஒன்றுக்கு மேற்பட்ட சிசு - காரணங்கள் - 394
129. பெண்களின் சினைப்பை - நன்மை - 395
130. **விகற்ப நோய்** - 397
131. காம மேகத் தைலம் - 403
132. **மகவை நிறம் மாற்ற** - 404
133. கருப்பை வெளிதள்ளல் குணம் - 405
134. மருந்து - 406
135. கருப்பை வெளி தள்ளலுக்கு புகை - 407
136. மலடு நீங்க சூடாமணி நெய் - 408
137. **கருவலாதி (பெண் மலடு)** - 411
138. **பெண் மலடின் பொதுக்குணம்** - 417
139. பெண்களின் மலடு வகைகள் - 420
140. அதி பிண்டத்தின் குணம் - 422
141. கும்மட்டி நெய் - 424
142. நீர் சூலை - 426
143. கும்மட்டிக்காய் நெய் - வேறு - 427
144. இரத்த சூலை குணம் - 429
145. விப்புருதி வாயு குணம் - 431
146. இதற்கு நெய் - 432
147. சூதக குலாந்தகன் நெய் - 434
148. சூதக வாயுவின் குணம் - 437

149. கும்மட்டிக்குழம்பு - 439
150. யோனி நோய் நிதானம் - 441
151. குக்கிலாதி நெய் - 469
152. யோனியில் பூச மருந்து - 471
153. பெருங்குறிஞ்சி நெய் - 474
154. பூண்டுத்திரி - 476
155. ஆண்குறி நோயின் பெயர்கள் - 478
156. ஆண்குறி நோய் வரலாறு - 479
157. இலிங்கபப்பதங்கம் - 480
158. சீழ் மேகத்துக்கு வெள்ளி பற்பம் - 481
159. குக்கிலாதி இளகம் - 482
160. சித்திரவல்லாதி - 484
161. எள்ளுக்குழம்பு - 487
162. நீர்முள்ளிக்குழம்பு - 489
163. மலட்டு வாயுவுக்கு கும்மட்டிக் குழம்பு - 493
164. கருக்குழிவாயு குணம் - 495
165. சூதக வாயுவின் குறிகுணம் - 496
166. இதற்கு இளகம் - 497
167. இரத்த சூலை வாயுகுணம் - 499
168. பெண் மலடு நீங்க நெய் - 501
169. கிரகணி வாயு குணம் - 504
170. இதற்கு சூரணம் - 505
171. குடல் சூலை வாயு குறிகுணம் - 506
172. அழல் வாயு குணம் - 507
173. திராட்சை மணப்பாகு - 508

174. முலை குத்துக்கும் புண்ணுக்கும் மருந்து - 510
175. முலைப்பால் சுரக்க சோற்றுப்பாகம் - 511
176. கோபிகை சந்தணாதி குளிகை - 512
177. குறிஞ்சி லேகியம் - வேறு - 516
178. **சினைக்குழாய் கரு** - 518
179. மார்பு நோய்க்கு பரிகாரம் - 519
180. பூச்சு - 520
181. கருப்பை அமைவு இலக்கணம் - 522
182. **இளம்பிள்ளை வாத நோய்** - 524
183. இளம்பிள்ளை வாதம் வருங்காரணம் - 525
184. நோய் இலக்கணம் - 526
185. இளம்பிள்ளை வாத குணம் - 529
186. **பாவையர் பைத்தியம் வரலாறு** - 560
187. பூவையர் பைத்தியத்தின் பெயர்கள் - 561
188. உதிர காயம் - 576
189. **மேகநோய் நிதானம்** - 580
190. நோய் வருங்காரணம் - 583
191. நோய் தொகை விபரம் - 584
192. தீருந்நோய் / தீராநோய் - 585
193. அவற்றின் பெயர்கள் - 586
194. மேகத்துக்கு எள்ளுக்குழம்பு - 604
195. நீர் செறுப்புக்கு மருந்து - 606
196. நீரடைப்புக்கு தளம் - 607
197. பித்த மேகம் உடல் காந்தலுக்கு - 609
198. கருவங்கபற்பம் - 610

199. நாகச்செந்தூரம் - 611
200. சூல் விப்புருதி நோயின் குணம் - 613
201. சுரத்துக்கு நாசித்தூள் - 620
202. சூல் வாந்திக்கு கியாழம் - 621
203. கெற்ப புழுவின் இலக்கணம் - 622
204. கெற்பவாயுவின் குணம் - 623
205. **பெரும்பாடு** - 624
206. பெரும்பாடு நோய் வருங்காரணம் - 625
207. தீருந்நோய் / தீராநோய் - 626
208. **பெரும்பாடு நிதானம் – வேறு** - 633
209. நோய் வரும் வரலாறு - 634
210. பெரும்பாடு நோயின் தொகை - 635
211. பெரும்பாடு அனைத்துக்கும் சூரணம் - 639
212. செம்பருத்தி மலர் மணப்பாகு - 640
213. பெரும்பாடு விலகக் குழம்பு - 641
214. பெரும்பாடு நோய்க்கு கியாழம் - 642
215. பெரும்பாட்டுக்கு பொடி - 643
216. சதாவேலி நெய் பெரும்பாடுக்கு - 644
217. பெரும்பாடு பிணிக்கு கியாழம் - 646
218. பெரும்பாடு ரோகி குறி கழுவ பொடி - 647
219. பெரும்பாடு நீங்கச்சூரணம் - 648
220. தென்னம் பூ இளகம் - 650
221. **மேகதரிப்பு** - 652
222. மாதவிடாய் கால சுரம் - 653
223. கருவிக்குத்து - 654

224. விருப்பமின்றி வல்லுறவு செய்தால் - 657
225. கொடும் புணர்ச்சியினாலுண்டாகும் கெடுதல் - 658
226. இதற்கு அவிழ்தம் - 659
227. அல்குலில் திரி வைத்து இறந்தால் குறி - 660
228. கோபத்துடன் வன்புணர்ச்சி குணம் - 661
229. சிறிய பெண்ணை புணர்ந்தால் - 663
230. மேகமுடைய பெண்ணை புணர்ந்தால் - 664
231. ஒடுக்கி வர்மம் தாக்கப்பட்டால் - 668
232. கொங்கையின் அமைப்பு - 670
233. நஞ்சு கொடியின் இலக்கணம் - 672
234. உதிரத்தின் பணிப்பயன் - 674
235. செரிமான உள்ளூறுப்புகள் - 675
236. உணவின் சுவையறியும் விதம் - 676
237. உதடுகளின் தொழில் - 677
238. புலன் நரம்பின் தொழில் - 678
239. கண்நீரின் பயன்கள் - 680
240. இயற்கை மாசுபாட்டால் வரும் தீமைகள் - 681
241. தூய்மை சுவாச காற்றின் பயன் - 682
242. உட்தோலின் தொழில் - 684
243. வியர்வை சுரப்பிகளும் அதன் செயல்பாடுகளும் - 685
244. வியர்வையிலுள்ள கழிவு பொருட்கள் - 687
245. மாதவிடாய் கால வயிறுவலிக்கு - 689
246. படிகார பற்பம் - 690
247. அஞ்சுப்பு மெழுகு - 692
248. **வெண்பூசணி இளகம்** - 693

249. **சூலிக்கு வர்மம் கொண்டால்** - 696
250. வெண்பூசணி லேகியம் - வேறு - 697
251. கெற்ப வாயுவுக்கு உப்பு - 699
252. பன்மூல புதையல் - வேறு - 700
253. தெளிநீரின் இலக்கணம் - 706
254. பாண்டம் பழக்குதல் - 707
255. **மார்பு நோய்** - 708
256. இதற்கு அவிழ்தம் - 713
257. சேராங்கொட்டை மெழுகு - 714

பாகம் - 2
பெண்டிர் பிணி போக்கும் அவிழ்தங்கள்

258. பெரும்பாடு கிரிச்சனத்துக்கு இரசாயனம் - 719
259. கரு காக்கும் தைலம் - 720
260. கெற்ப வாயுவுக்கு அவுரி எண்ணெய் - 721
261. சூல் தாய்க்கு கொடுக்க குளிகை - 722
262. கருவுற்ற மாதருக்கு கியாழம் - 723
263. மேகத்துக்கு கொடிவேலி நெய் - 724
264. கடுகு மாத்திரை - 725
265. **பெரிய உயிராதி சன்னிக்குழம்பு** - 726
266. சூல் தைலம் - 730
267. மேகத்துக்கும் வறட்சைக்கும் வீளி நெய் - 733
268. கெற்ப வாயு விலகத் தைலம் - 735
269. கூந்தலுக்கு ஆலம்பால் எண்ணெய் - 736
270. மாதுளை கற்பம் - 737

271. வங்காள பச்சை சூரணம் - 737
272. எள்ளுக் குடிநீர் - 738
273. சூதக கட்டுக்கு நவச்சார இளகம் - 739
274. பெரும்பாடுக்கு சஞ்சீவி குடிநீர் - 740
275. சஞ்சீவிக்குழம்பு - 741
276. மேகத்துக்கு சிப்பி நெய் - 742
277. அசோகு புதையல் - 743
278. கிட்டப்புதையல் - 745
279. அமுக்கூரப்புதையல் - 747
280. முந்திரி வாற்று - 750
281. அயவரிசை தெளிநீர் - 753
282. அரிதகிப் புதையல் - 756
283. பெரும்பாட்டுக்கு நாவல் வாற்று - 759
284. சன்னிக்குத்திரி - 761
285. சூதக வலிக்கு நெய் - 763
286. துவாலை போக தீநீர் - 764
287. தாமிர பற்பம் - 766
288. குறிஞ்சிக் குழம்பு - 770
289. சிவக்குழம்பு - 773
290. குக்கில் நின்பாதி கியாழம் - 774
291. அடைக்காமணி தைலம் - 778
292. அடைக்காமணி தைலம் - வேறு - 781
293. கும்மட்டிக்காய் நெய் - 783
294. கல்யாணி கல்கிரி - 786
295. மேகாதி கியாழம் - 787

296. காயாதி லேகியம் - 789
297. காம கேசரி குளிகை - 791
298. கந்தக இரசாயனம் - 795
299. கதளி இரசாயனம் - 797
300. பட்டை இரசாயனம் - 799
301. சர்வாங்க இரசாயனம் - 801
302. கருவுருவாக நெய் - 803
303. மார்பு சூலைக்கு சேங்கொட்டை நெய் - 805
304. மேகத்துக்கு சீனாந்திப்பட்டை தைலம் - 806
305. சூல்வாதத்துக்கு கியாழம் - 807
306. **மேகத்துக்கு எள்ளுக்குழம்பு** - 808
307. மண்டூர மாத்திரை - 809
308. காரீயச் செந்தூரம் - 810
309. வீளி நெய் - 811
310. வெள்ளுள்ளி நெய் - 812
311. வேசரி நெய் - 814
312. சூல் நெய் - 815
313. நாகச் சுன்னம் - 817
314. நவச்சார பற்பம் - 818
315. கும்மட்டி எண்ணெய் - 819
316. கெற்பமுண்டாக எண்ணெய் - 820
317. கெற்ப வாயுவுக்கு எண்ணெய் - 821
318. இருதுவாக மருந்து - 822
319. பூப்பெய்த பின் மாதவிடாய் தடைபட்டால் - 823
320. கெற்ப கிருமிக்கு எண்ணெய் - 824

321. பொன்னாங்காணி நெய் - 825
322. மல்லி மாதுளை நெய் - 827
323. பத்து தேங்காய் நெய் - 830
324. சூல் தாய்க்கு மலசலமடைத்தால் மருந்து - 831
325. சூதக வாயுவுக்கு வீர மெழுகு - 832
326. கெற்பராசிங்க குழம்பு - 833
327. கெற்பகிருமி ரோகத்துக்கு வீளி எண்ணெய் - 836
328. மலக்கிருமிகள் வெளியாக எண்ணெய் - 838
329. கும்மட்டிக்காய் நெய் - 839
330. சிந்தாமணி தைலம் - 841
331. இரச பற்பம் - 843
332. வனப்பு - 844
333. பேரழகு தைலம் / களிம்பு - 845
334. குக்கில் - 847
335. கும்மட்டிக்காய் சூரணம் - 849
336. கெவுன சிந்தாமணிக் குளிகை - 850
337. அறிவு தத்துவ சிந்தாமணி குளிகை - 852
338. மேகத்துக்கு மருந்து - 855
339. கெற்பத்தடை பிணிக்கு அவிழ்தம் - 856
340. அஞ்சுமுறை செந்தூரம் - 857
341. கெற்ப கிரந்திக்கு மஞ்சள் இரசாயனம் - 858
342. கந்தக இரசாயனம் - 859
343. கெற்பிணிக்கு மதுராதிக்குழம்பு - 860
344. எட்டிக்களிம்பு - 861
345. காந்த பற்பம் - 862

346. சூலை கிரந்திக்கு புகை - 863
347. பேற்றில் வந்த நீரழிவுக்கு அரசு நெய் - 866
348. கருத்தரிக்க நெல்லிக்காய் நெய் - 869
349. சூலியின் நீர் கடுப்புக்கு குழம்பு - 870
350. மேக எண்ணெய் - 871
351. ஆண்பிள்ளை பெற - 871
352. மங்கையர் மலடு நீங்க கியாழம் - 873
353. சூதக காலுக்கு குடிநீர் - 874
354. பெரும்பாடு நோய் நீங்க - 875
355. பெண்கள் பிரவிடையாக - 876
356. **இரட்டை குழந்தைகளின் விநோதம்** - 877
357. மார்பு சுருங்க - 878
358. இளமை மணப்பாகு - 879
359. **பெண்கள் மெய் நலிவடையும் காரணங்கள்** - 880
360. பெண்களின் எடை கூடும் காரணிகள் - 881
361. மணமாகாத மங்கையர் குண்டாவதின் காரணம் - 882
362. திருமணத்துக்குப் பின் தொப்பை வரக்காரணம் - 883
363. மேக ஏலாதி குளிகை - 885
364. கையான் தைலம் - 886
365. **சுரமனைத்துக்கும் தோடைவேர் கியாழம்** - 887
366. வாயு கிருமிக்கு தைலம் - 889
367. குக்கில் நெய் - 891
368. கெற்ப குன்ம வளிக்குத் தைலம் - 893
369. மாதவிடாய் வயிறுவலிக்கு சூரணம் - 894
370. சூலுண்டாக நெய் - வேறு - 896

371. சூதகம் வெளியாக எள்ளுக்குழம்பு - 897
372. பூண்டுக்களிம்பு - 898
373. சதாவேலி நெய் - 899
374. பருத்த மார்பு சுருங்க - 900
375. மார்பு பருக்க - 900
376. நீர் கடுப்புக்கு உண்டை - 903
377. பட்டை இரசாயனம் - 904
378. சுரோணித கட்டுக்கு குறிஞ்சிக்குழம்பு - 905
379. வாயுவுக்கு குறிஞ்சிக்குழம்பு - 906
380. பேற்றில் வரும் வயிறு பழுப்புக்கு - 908
381. சூலை நீருக்கு கியாழம் - 910
382. கிருமிக்கு சஞ்சீவி தைலம் - 911
383. பெரும்பாடுக்கு தூமரக்காய் சூரணம் - 911
384. சூதக வாயுவுக்கு வீர மெழுகு - 913
385. பத்து உப்பு மெழுகு - 914
386. பெரும்பாடுக்கு தென்னம்பூ குடிநீர் - 915
387. பெரும்பாடுக்கு பட்டுண்டை - 916
388. குளியல் பொடி - 918
389. சூல் சுரத்துக்கு ஏலாதி மாத்திரை - 919
390. சூல் கால மதுமேகத்துக்கு சூரணம் - 920
391. குமரித்தைலம் - 923
392. மதலை ஏலாதிக்குளிகை - 926
393. **சிசு நோய்களுக்கு குழியானை தைலம்** - 928
394. கற்பூராதிக் குளிகை - 931
395. **வலிய பராக்கிரம பூபதி** - 933

பாகம் - 3

பின்னிணைப்புகள்

396. **தனித்தமிழ் சிந்தாமணி மருத்துவத்திலுள்ள கூடுதல் உள் மருந்துகள்** - 940

397. **ஆதித்தமிழ் மருத்துவத்தின் வரலாறு** - 944

398. உலக மருத்துவ அறிவியலின் முன்னோடி -1003

399. **தமிழ் மருத்துவத்தை அழிப்பவர்கள் யார்?** -1015

400. உலக தோற்றமும் அதன் முடிவும் -1024

401. இன்றைய காலகட்ட குமரிமாவட்ட நூல்கள் பற்றிய தகவல்கள் -1035

402. சிந்தாமணி மருத்துவத்தை சித்த மருத்துவ கல்லூரி பாடதிட்டத்தில் - நன்மைகள் -1039

403. **பலமொழிகளில் இராவண மருத்துவ நூல்கள்** -1047

404. தமிழ் கலைகள் அபகரிக்கப்படும் அபாயம் -1086

405. கன்னியாகுமரி மாவட்டத்தில் கழுவன்திட்டைகள் -1093

406. தமிழ் மருத்துவத்தை காக்க நாம் என்ன செய்ய வேண்டும்-1097

407. சித்த மருத்துவம் மட்டுமா ? தமிழர் மருத்துவம் ! -1103

408. தமிழ் மக்களிடமிருந்து தூய இராவணரை பிரிக்கச் செய்த சூட்சிகள் -1111

409. அகிலத்தின் ஆதிமொழி தமிழே -1115

410. இராவணர் தமிழ் மருத்துவ நூல் கவிதைகள் -1123

411. தமிழ் மருத்துவத்தின் சிறப்புகள் -1140

412. இராவணர் மருத்துவத்தை அழித்ததின் நோக்கம் -1147

413. சூலுற்ற உயிரினங்களை வதைக்கலாமா? -1151

414. **அகத்தியர் தமிழ் மருத்துவத்துக்கு என்ன செய்தார்** - 1154
415. **தமிழ் மருத்துவம் எதை நோக்கி செல்கிறது** - 1160
416. குமரி மாவட்ட தமிழ் மருத்துவம் எது - 1170
417. **தனித்தமிழ் மருத்துவம் ஓர் ஆய்வு** - 1177
418. **சிந்தாமணி மருத்துவம்/சித்த மருத்துவம் ஒற்றுமை/வேற்றுமை** - 1182
419. குமரிக்கண்டம் தந்த தமிழ் சிந்தாமணி மருத்துவம் - 1195
420. பயிற்சி பற்றிய தகவல்கள் - 1201
421. ஆதித்தமிழ் மருத்தவத்துக்கும், ஆயுர்வேத வைத்தியத்துக்குமுள்ள வேறுபாடுகள் - 1203
422. பெண்களின் சாதிகள் - 1206
423. சிந்தாமணி மருத்துவ அளவைகள் - 1210
424. நிறைவுரை - 1211
425. எமது மருத்துவ நிலையத்தில் செய்யப்படும் சிறப்பு மருத்துவங்கள் - 1214
426. தயார் செய்யப்படும் சிறப்பு மருந்துகள் - 1216
427. மூலிகை தேநீரின் பயன்கள் - 1217
428. இராவண பதிப்பக நூல்கள் - 1219
429. சிந்தாமணி மருத்துவ சிகிட்சை முறைகள் - 1220
430. இந்நூல் எழுதுவதற்கான ஆதார நூல்கள் - 1222
431. நூலாசிரியர்கள் பற்றிய குறிப்பு - 1224
432. பயிற்சி பெற்றவர்களில் சிலர் - 1228

குறிப்பு : - பிரதான தலைப்புகள் மட்டுமே அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

புதிய வெளியீடுகள்





சந்திரோதயம் பதிப்பகம், மதுரை -18.
போன் 7010997639